
நிலை ஒலி

அறிவியல் ஆச்சரியம் திருக்குறள்



முனைவர் ரெ. சந்திரமோகன்

நிலை ஒலி...

அறிவியல் - ஆச்சரியம் - திருக்குறள்

இரே. சந்திரமோகன்

மேனாள் முதல்வர் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை
ஆய்வு ஆலோசகர், வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுவயல்

வெளியீடு

இனிய நந்தவனம் பதிப்பகம்
எண்.17, பாய்க்காரத் தெரு, உறையூர், திருச்சி – 620 003.
பேச : 94432 84823
மின்னஞ்சல் : nandavanam10@gmail.com

நூல் குறிப்பு

நிலை ஒலி...

அறிவியல் ? ஆச்சரியம் ? திருக்குறள்

ஆசிரியர்	இரெ. சந்திரமோகன்
முதல் பதிப்பு	டிசம்பர் 2019
உரிமை	ஆசிரியருக்கு
பக்கம்	120
கணினி அச்சு	பூச்சாரம், காரைக்குடி.
அட்டை வடிவமைப்பு	மணிகண்டன், காரைக்குடி
அச்சாக்கம்	சாய் தென்றல் பிரிண்டர், சென்னை.
வெளியீடு	இனிய நந்தவனம் பதிப்பகம் எண்.17 பாய்க்காரத் தெரு, உறையூர், திருச்சி – 620 003, தமிழ்நாடு, இந்தியா.
பேச	94432 84823
மின்னஞ்சல்	nandavanam10@gmail.com
விலை	ரூ. 120/-

NILAI OLI

First Edition	December 2019
Author	R. Chandra Mohan
Number of Pages	120
Designed by	Poocharam Printers
Printed by	Sai Thendral Printer, Chennai.
Published by	Iniya Nandavanam Pathippagam #17, Paikkara Street, Woraiyur, Trichy - 620 003. Tamilnadu, India. Mob : 94432 84823 email : nandavanam10@gmail.com
Price	Rs.120/-
ISBN No	978-81-944044-2-2

இது கதையல்ல. மனதின் குரல்

இருபதுகளில் தவறு செய்த அறுபதுகளின் குமுறல். விடிவெள்ளியாய் வரும் இன்றைய இருபதுகளின் நம்பிக்கைகள் பற்றிய ஏக்கம். ஆங்கில மோகத்தில் வேலை வாய்ப்பை எண்ணி தாய் மொழிக் கல்வியை புறக்கணித்து, இதயத்தை விற்று மூளை வாங்கியது போல், அழகிய கூந்தலை விற்று யானைத்தந்த சீப்பு வாங்கி அது சாதாரண பிளாஸ்டிக் சீப்பு என்று உணர்ந்த என்னைப் போன்றவர்களின் ஏமாந்த கதை.

என் கனடா பயணத்திலும், மலேசியப் பயணத்திலும் உதித்த சிந்தனைகளுக்கு உருவம் கொடுத்துள்ளேன். கனடாவில் தமிழ் குழந்தைகளுக்கு தமிழ்க் கல்வி வழங்கும் கணினி பொறியாளர் அருண் வாதவூரான், மலேசியத் தமிழ்ச் சங்கம் (கோலாலம்பூர்), மதராஸ் கல்ச்சுரல் அகாடெமி, டொரெண்டோ, ஹாங்காங் தமிழ்ச் சங்கம் அவற்றின் அங்கத்தினர்களைச் சந்தித்தது, இந்நூலை எழுதத் தூண்டியது. குறிப்பாக விக்டோரியா கடற்கரையின் பேரழகு.

பூமிப் பந்தை விட வேகமாகப் பயணிக்கும் இக்காலத்தில் இந்நூலை வாசித்துப் படி திருத்த உதவிய நல் உள்ளங்களுக்கு என் நன்றி. குறிப்பாக வாய்ஸ் ஆப் வள்ளுவர் நிறுவுனர் ராஜேந்திரன் இ.வ.ப., பேராசிரியர் பழனி ராகுலதாசன், அகரம் பன்னாட்டு மழலையர் பள்ளிச் செயலாளரும், கவிஞருமான அரச முருக பாண்டியன், பேராசிரியர் தனிக்கொடி, கவிஞர் பாகை கண்ணதாசன், எழுத்தாளர், பொறியாளர் ராசன், ராமனாதன், வடிவமைத்த பூச்சரம் மணிகண்டன், ஆற்றுப் படுத்திய நலாந்தா சம்புலிங்கம் அனைவருக்கும் என் நன்றிகள். என் அன்பு மனைவி மீனாள், மகள் ரேவதி, மூத்த மாப்பிள்ளை பிரவின், மகள் நர்மதா, மாப்பிள்ளை நரேன் கேசவ், பேத்தி தன்வி ப்ரவீனுக்கும் நன்றிகள். நினைவில் வாழும் என் தந்தை ரெத்தினம், தாய் பார்வதி டீச்சருக்கு, என் மூத்த சகோதரர் சுப்பிரமணியனுக்கும் இந்நூல் அர்ப்பணம்.

முனைவர் சந்திரமோகன்

பதிப்புரை

திருக்குறளை மையப்படுத்தி ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட நாவலிது. கதையோட்டத்தோடு கதாபாத்திரங்களின் மூலமாக எண்ணற்ற தகவல்களை உள்ளடக்கியிருப்பது நூலின் தனிச்சிறப்பு.

அறிவியல் - ஆச்சரியம் - திருக்குறள் என மூன்று விதமான கருத்தியல் நுட்பத்துடன் வாசிப்பாளரை புதிய சிந்தனையுடன் கதைக்குள் பயணிக்க வைக்கும் வகையில் கதையாக்கத்தை வடிவமைத்திருப்பதும், கற்பனைகளின்றி உண்மைத் தகவல்களுடனும் எழுதப்பட்டுள்ள நிலை ஒலி தமிழ் எழுத்துக் களத்துக்கு ஒரு புதிய முயற்சி என்றே சொல்லலாம்.

எழுத்துலக வரலாற்றில் தனித்த அடையாளத்தைப் பெறப் போகும் முனைவர் சந்திரமோகன் எழுதியுள்ள இந்நூலை வெளியிடுவதில் இனிய நந்தவனம் பதிப்பகமும் பெருமையடைகிறது.

வாழ்த்துகளுடன்,

நந்தவனம் சந்திரசேகரன்,

பதிப்பாசிரியர், இனிய நந்தவனம்

19.12.2019

அத்தியாயம் 1

'வணக்கம் நல்லா இருக்கீங்களா ஐயா? என்னை வாழ்த்துங்கள்' என்று சொல்லி கைதொழுதவர்களைப் பார்த்ததும் ஒய்வுபெற்ற ஆசிரியர் நாகலிங்கத்திற்கு சந்தோசம் தாங்கல. 'டேய் ராமு எப்படிடா இருக்கே? எங்கே இருக்க?...' என்று வினவினார். 'இது... உன் மனைவியா?'

'ஐயா, நான் உலகம் பூரா சுத்தி முடிச்சு இப்போ நம்ம நாட்டுக்கு திரும்பி வந்துருக்கேன். இவ என் மனைவி சிவகாமி. இவன் எங்கள் பையன். அமெரிக்காவுல கம்ப்யூட்டர் இஞ்சினியரிங் படிக்கிறான். இங்கிலீஷ் மீடியம் படிச்ச உங்க அப்பா தமிழ் ஆசிரியரான என்னைப் பார்க்க வந்திருக்கார்!' 'பாத்துக்க தம்பி' என்று கண்ணனைப் பார்த்து சிரித்த நாகலிங்கம், 'உங்க அப்பாவோட தமிழ்ப் பற்றை சின்ன வயசிலேயே அறிந்தவன் நான். நான் இப்போ ஒண்டிக்கட்டை. கொஞ்சம் உக்காருங்க. வரக்காபி போட்டுத் தரேன்' என்று சமையற்கட்டுக்குள்ளே போக, 'சார், நீங்க இருங்க. சிவகாமி, உள்ளே போய் அடுப்பைப் பார். கண்ணா, ஓடிப்போய் ஒரு பால் பாக்கெட் வாங்கிட்டு வா, நான் கொஞ்ச நேரம் ஐயாவோட பேசிக்கிட்டுருக்கேன்' என்று ராமு உத்தரவு போட்டு இரண்டு பேரும் ஐயா வீட்டு வாசல்ல வேப்பமர நிழலே இரண்டு நாற்காலியப் போட்டு உட்கார்ந்தாங்க.

'அம்மா எங்கே சார், உங்க பையன், எப்படி இருக்கார்?' ராமு வாஞ்சையோடு கேட்டான். இராமு, 'அம்மா மகன் வீட்டுக்கு போய் பத்து நாளாச்சு. பேரப்புள்ளைகளோட சென்னைக்குப் போறதும் வரதும் எங்களுக்குப் பொழுது போக்கு. நான் பென்சன் வாங்கிட்டு வீட்டைப் பத்துநாள் பாத்துக்குவேன். அப்புறம் சென்னை. மாசம் இரண்டு தடவை பேரன்

பேத்திகளைப் பார்த்து கொஞ்சிவிட்டு வந்தா, கொஞ்சம் தெம்பா இருக்கு. சரி, உன்னைப்பத்தி சொல்.'

'ஐயா நான் அமெரிக்காவுல ஒரு பெரிய இன்ஜினியரிங் கம்பெனில போய் வேலை பார்த்தேன். கைநிறையச் சம்பளம். பையன் அங்கேயே படிக்கிறான். நம்ம லெச்சுமணன் அங்கேதான் இருக்கான். நம்ம நோட்சுகாரன், மோகன் எல்லாரும் தொடர்பில இருக்காங்க. எல்லாரும் உங்களப் பத்தித்தான் பேசுவோம். முக்கியமான விசயமா நான் இப்ப வந்திருக்கேன் ஐயா'. 'சொல்லு ராமு' என்றார் நாகலிங்கம். 'என் மகன் நல்லா தமிழ் பேசுவான். தமிழ் தனியாப் படிச்சான். அங்கே ட்ராமா, தமிழ் க்ளப்... இதுலல்லாம் தமிழ்ப்பாட்டு முடியரசன் நாடகம், எல்லாம் போடுவான். அவனுக்கு ஒரு பிரச்சினை, அவனோட அமெரிக்க ப்ரண்ட்ஸ் எல்லாம் இவனோட சேர்ந்து நல்லா தமிழ் பேசணும், படிக்கணும்னு ஆசைப்படுறாங்க. ஆனால் தமிழ்நாட்டுல இருந்து அங்கே படிக்கிறவங்க பல பேருக்கு தமிழ் தெரியல. தமிழ் பேசுவாங்க. ஆனால் தமிழ் படிப்போம் வாங்கன்னா, அவ்வளவுதான் ஆர்வம் காட்ட மாட்டுறாங்கன்னு வருத்தப்படுறான்.'

'நானும் இங்கிலீஷ் மீடியத்தில் படிச்சாலும், தமிழ் இலக்கணம், நன்னூல் சூத்திரங்கள், திருக்குறள், சங்க இலக்கியம், எல்லாம் உங்ககிட்டே கத்துக்கிட்டதை அவனோட பேசும்போது, அவன் ஆச்சரியப்பட்டுப் போயிட்டான். அவன் இப்ப லீவுக்கு வரும்போது அவனோடு ஆரம்பப் பள்ளில படிச்ச பசங்களப் பார்த்திருக்கான். அந்தப் பசங்க கூடப் போய் பேசுனதுல இருந்து அவனுக்கு ரொம்ப வருத்தமாப் போச்சு. அமெரிக்கால உள்ள பசங்களாவது தமிழ் பேசுறாங்க. இங்க உள்ள பசங்க முழுசும் இங்கிலீஷ்லதான் பேசுறாங்க. என்னைப் பார்த்து பத்தாம் பசலின்னு சொல்றாங்களாம்னா பார்த்துக்கங்களேன் என்று என்னிடம் சொன்னான். இதுக்கு ஏதாவது பண்ணனுமானு நீங்க அவன்கிட்ட கொஞ்சம் பேசுங்க, ஐயா.'

பால் பாக்கெட்டோட வந்த கண்ணனைப் பார்த்த உடனே தன் கண்ணாடிக்குள்ள வந்த கண்ணீரைத் துடைத்தபடியே, ஐயா சொன்னார், 'ரொம்ப சந்தோசமா இருக்கு ராமு. அமெரிக்காவில நம்ம பசங்க தமிழ் பேசுறாங்கன்னு. நம்ம நாட்டிலே அரசாங்கப் பள்ளி தமிழ் கற்பிக்குது, தனியார் பள்ளில தமிழ்படிக்க ஆள் சேரல. ஏழைபாழங்க வீட்டுப் பிள்ளைகள் மட்டும் வேற வழியில்லாம சேர்த்தாங்க. வாத்தியார்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளைக்கூடத் தமிழ் மீடியத்தில் சேர்க்குறதுல்ல. அப்ப நம்ம ஸ்கூல்ல ஒரே ஒரு க்ளாஸ் மட்டும் ஆங்கில மீடியம். இன்று புதிசா 20 பள்ளிகள். எல்லாம் ஆங்கிலப் பள்ளிக்கூடம்தான். தமிழ்ல பேசுனா தண்டம் கட்டணும். பசங்களக் குறை சொல்லக் கூடாதுப்பா... குழந்தைங்க... பெரியவங்க சொல்லுறத செய்யுதுங்க. பொழப்பப் பாக்கணும்னு பெற்றோர் நினைக்கிறாங்க. தமிழ் படிச்சா வேலை கிடைக்குதான்னு பெற்றோர் கேட்கிறாங்க, வேலைன்னா என்னான்னு? அரசாங்கம் கேட்குது. வாத்தியார் பேசிக்கிட்டு இருக்கும்போதே டீயை எடுத்துக்கிட்டு சிவகாமியும் கண்ணனும் வந்துட்டாங்க. நாங்களும் கலந்துக்கலாமான்னு? கண்ணன் இரண்டு நாற்காலியைத் தூக்கிவந்தான். டீயை உறிஞ்சியபடி ஐயா சொன்னார், நல்லா டீ போட்டுருக்கம்மா. ராமு இருக்கானே! அவன் எனக்குப் பையன் மாறி. பொங்கலுக்கு எனக்கு வாழ்த்து அனுப்புறத அவன் மறந்ததில்லை.

பள்ளிக்கூட மேடைல அவன் தமிழ் உச்சரிப்பு நல்லா இருக்குனு பார்த்து, நான் அவனைக்கூப்பிட்டு நன்னூல், தொல்காப்பியம் சொல்லிக்குடுத்தேன். அவனோட சேர்ந்து கூட நாலஞ்சு பசங்களும் அரைகுறையாகக் கத்துக்கிட்டாங்க. இவன் மட்டும்தான் இன்னும் அதை நினைச்சுப் பார்க்கிறான். தற்போதைய கல்லூரி முதல்வர் முனைவர் சந்துரு கூட அதில் அடக்கம்.

ஆமாங்க ஐயா, நாங்கள் பேசும்போது எல்லாம், உங்களப்பத்தி அவரு பேசாம இருந்ததில்லை. கண்ணன் தமிழ்ப்படிக்க அதுதான் முக்கியக் காரணம். எங்கள் அப்பாவும்

திருக்குறள் பற்றி எப்பவும் பேசுவார். தாத்தாவும் பேரனும் மணிக்கணக்கா போன்ல பேசுவாங்க.

கண்ணன் சொன்னான், ஐயா, இப்ப நான் வந்திருக்கிறது ஒரு முக்கியமான காரணத்துக்குத்தான். முதல்ல அப்பாவுக்கு அதுல அவ்வளவு உடன்பாடில்லை. அப்புறம் சொன்னாரு, நீ ஐயாக்கிட்ட பேசு அப்புறம் நான் என்ன செய்யனும்னு சொல்றென்னாரு. தாத்தா சாகும்போது எங்கிட்ட சொன்னாரு திருக்குறள் தமிழனின் பொக்கிசம். அதை எப்படியும், தமிழ்க் குழந்தைகள் படிக்கணும். இப்ப இல்லாட்டிலும் பின்னாடியாவது அதோட பெருமையை உணர்வாங்கண்ணு. நானும் 1330 குறளையும் மனப்பாடமா சொல்லுவேன். கொஞ்சம் குறட்பாக்களுக்குப் பொருளும் தெரியும். தாத்தா செத்த பிறகு அவர் சொன்ன வார்த்தைகள் என்னை திரும்பத் திரும்ப திருக்குறள் பத்திய பேச்சுக்கள், தெளிவுரைகளைப் படிக்கத் தூண்டுச்சு. ஒருநாள் எங்க பல்கலைக் கழகத்தில ஒவ்வொரு நாட்டிலும் உள்ள இலக்கியங்களைப் பத்திப் பேசும் போட்டி வைச்சாங்க. நான் திருக்குறளைப்பத்தி ஆங்கிலத்தில் பேசினதுக்கு முதப்பரிசு தந்தாங்க. அப்ப எங்க பேராசிரியர் சொன்னார். தம்பி நீ பேசினதுக்கு மட்டும் பரிசு கொடுக்கல, நீ எடுத்த நூல்ல இருந்து சொன்ன இரண்டு குறட்பாக்களுக்கும் தான் பரிசு. இதைக் கணினி உதவியுடன் ஒரு Powerpointஇல் 1 மணிநேரம் பேசுறதுக்கு இன்னும் இரண்டு பல்கலைக் கழகத்திலே வாய்ப்பு வாங்கித்தரேன். 6 மாசம் டைம் எடுத்துக்க. நல்லா இன்னும் இதுபோன்ற கருத்துக்களை தேடிக்கொண்டுவான்னாரு. எனக்கு ரொம்ப சந்தோசம். தாத்தா இருந்தா உதவுவாறு அப்பாவுக்கு நேரம் இல்ல. அதோட அவரு இந்தக் கருத்துக்களுக்கு முரண்படுறார். ஆதனால உங்கக்கிட்ட சரிபார்த்துக்கலாமென்றுதான் நான் பேசினதப்பத்தி உங்கக்கிட்ட சொல்ல, இதில் கருத்துப்பிழை எதுவும் இருக்கான்னு கேட்க ஆசைப்படுறேன், என்றான். ஐயாவுக்கு இன்னும் ஆச்சரியம். வா, கண்ணா வா, என்று அவன் கன்னத்தைத் தொட்டு முத்தமிட்டார். இதெல்லாம் உண்மையான்னு கிள்ளிப்பார்த்துக் கொண்டார். அயல்நாட்டு

மாணவன் திருக்குறள் பற்றி கருத்துரை நிகழ்த்துவதும், அதன் கருத்துக்களைத் தன்னிடம் கேட்பதும், கனவில் நடப்பது போலிருந்தது. ராமு சொன்னான், கண்ணா, முதலில் உன் தலைப்பைக் கூறு. அதனை விவாதித்த பிறகு ஐயாவிடம் உன் கருத்துரை கூறு, என்றான்.

கண்ணன் பேச ஆரம்பித்தான். ஐயா, இன்று நிகழும் பல நுண்ணிய அறிவியல் உண்மைகளின் அடிப்படை திருக்குறளில் உள்ளது. ஆதனால் தான் தாத்தா அது பொக்கிசம் என்றார். ராமு சொன்னான், அது எப்படி சாத்தியம்?. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் எந்த அறிவியல் சோதனையும் செய்ததாக வரலாறு எதுவும் இல்லை. திருவள்ளுவர் என்பவர் திருக்குறள் இயற்றினார். அவர் இலக்கணப்படி வெண்பாவில் ஒரு வகையான குறட்பாவில், அறம், பொருள், இன்பம் என்று பகுத்துப் பாடியுள்ளார். அந்தந்தக் காலத்திற்கு ஏற்றார்போல் இவற்றை கூறியுள்ளார். சில இக்காலத்திற்கும் பொருந்துகின்றன. எனவேதான் அது ஒரு அரிய நூல். காலம் கடந்து நிற்கக்கூடிய போதனைகளைத் திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது. இன்றைக்கு உள்ள அறிவியற் கருத்துக்கள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. பட்டறிவினால் தமிழன் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் பெற்ற அறிவுகளின் தொகுப்பே திருக்குறள். திருவள்ளுவருக்கு அன்றைய காலத்தில் வழக்கிலிருந்த சங்க நூல்கள், பழமொழிகள், பழக்க வழக்கங்கள் இவற்றிலிருந்து சில அம்சங்களைக் குறட்பாக்களாகத் தொகுத்துள்ளார். அவர் ஒரு விஞ்ஞானி என்று சொல்வதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐயா ஒருமுறை கண்ணனைப் பார்த்தார். கண்ணா, உன் தரப்பு வாதத்தைக் கூறு. கண்ணன் சொன்னான். ஐயா நான் அப்பா சொன்னதை மறுக்கவில்லை. தமிழரின் வாழ்வியல் கூறுகளைத்தான் திருவள்ளுவர் பாடியுள்ளார். ஆனால் யாதும் ஊரே யாவரும் கேளிரென்றும், தீதும் நன்றும் பிறர் தர வாரா! என்ற உயர் நெறிகளைக் கொண்ட சமுதாயத்தில் அறிவியல் கூறுகள் மலிந்திருக்க வாய்ப்பு உளதா? இல்லையா?

கிரேக்க நாட்டில் திருவள்ளுவர் காலத்தில் உலகெங்கும் கிரேக்க வணிகர்கள் சென்று வந்தனர். அந்தக்காலத்தில் துருவ நட்சத்திரம் திசைமாறாது என்பது அறிவியல் உண்மையாகப் பள்ளிப் பாடங்களில் புகட்டப்பட்டது. உலகெங்கும் சென்ற வணிகர்கள் துருவ நட்சத்திரத்தின் உயரம் பூமியின் வடபகுதியில் ஒரு இடத்திலும், இடப்புறத்தில் வேறு ஒரு உயரத்தில் இருப்பதாகவும் தாங்கள் கண்டதைக் கூறினர். அத்தோடு, சூரிய சந்திர கிரகணங்களையும் சேர்த்து கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் பூமி தட்டையல்ல. உருண்டை என்றார். பூமியை மையமாகக் கொண்டு சூரியன், சந்திரன், மற்றும் கோள்கள் சுழல்கின்றன என்றார். பூமி உருண்டை என்று சொன்னதை மதங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அந்த சமயத்தில் உலகம் முழுதும் தமிழன் சென்று யாதும் ஊரே யாவரும் கேளிரென்று வாழ்ந்துள்ளான். சுழன்றும் ஏர் பின்னது உலகம், என்கிறார் வள்ளுவர்.

'ஞாயிறு போற்றுதும்' என்று சிலப்பதிகாரத்தில் போற்றி பின்னர், பிற கோள்களைப் போற்றுதல் மூலம் சூரியனை மையமாக வைத்து அனைத்துக் கோள்களும் இயங்கின என்றும், கிரகணங்களைப் பார்த்து திங்களைப் பாம்பு கொண்டற்று என்ற குறட்பா மூலம் மதங்களை எள்ளி நகையாடுகிற வள்ளுவரைப் பார்த்தால் ஆச்சரியமாக உள்ளதா? இல்லையா?, இவைகள் அறிவியல் கருத்துக்கள் இல்லையா?... என்றான். அருமை... அருமை என்று நாகலிங்க அய்யா கைதட்டினார். சுவாரசியமாக இருக்கிறது. மேலே சொல்லு என்றார்.

ராமு இடைமறித்தான், அய்யா அவன் சொல்வதை நான் ஒப்புக்கொள்கின்றேன். பூமி சுழல்கிறது என்ற கருத்தும், சூரிய சந்திர கிரகணத்தைப் பற்றிய அறிவும் தமிழர்களிடையே இருந்தது. ஆனால், அது ஒருவிதத்தார்க்கு பாதகமாகவே இருந்திருக்க முடியும். அறிவியல் ஒரு பாடமாகவே அந்தக் காலத்தில் இல்லை. எனவே, இப்போது அறிவியல் அப்போதைய விவாதப் பொருள் என்ற அளவில் ஒரு சில கணிப்புகளை அறிவு ஜீவிகளான அரிஸ்ட்டாட்டில்,

திருவள்ளுவர், போன்றவர்கள் தங்கள் நூல்களில் சொல்கின்றனர். அது சோதிக்கப்பட்ட அறிவியல் செய்திகள் என்று நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. மனித இனத்தின் அறிவு பல தவறுகளால் உருவானது. அதில் ஏதாவது ஒரு கருத்து எல்லோரும் ஏற்கும் வகையில் உள்ளது. ஐயா, சொன்னார், ராமு சொல்வது மிகச்சரி. அறிவியல் உண்மை என்பது அந்தக் காலத்தில் இல்லை. சில கணிப்புக்கள் என்ற ரீதியில் இதனை அணுகலாம்.

கண்ணன் கூறினான், ஐயா அரிஸ்ட்டாட்டில் உலகம் உருண்டை என்று சொன்னார். அதற்காக அவரை கிரேக்க நாகரிகம், உயரிய நாகரிகம் என்றும் போற்றப்பட்ட நாகரிகம் பொதிந்த கிரேக்க நாட்டு மத சக்திகள் கல்லால் அடித்துக் கொன்றனர். அதற்குப் பின்னர் பூமி மையமல்ல, என்று கூறிய சாக்ரடீஸ் விசம் வைத்துக் கொல்லப்பட்டார்.

ஆதி பகவன் முதற்றே உலகு என்ற குறட்பா மூலம் சூரியனைத் தலைவனாக்கி கொண்டது நம் உலகு என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். வாலறிவன் என்பது கூர்மையான ஒளிக்கதிர்கள் கொண்ட ஞாயிற்றைக் குறிக்கின்றது எனக் கொள்ளலாம். சூரியனே மலர்கள் மலர்வதற்குக் காரணம், எனவே மலர்மிசை ஏகினான் என்றார். பூமியில் உள்ள தாவரங்கள், உயிரிகள், வாழ்வதற்கும் உணவிற்கான ஒளிச்சேர்க்கைக்கும் நிமித்தக் காரணன் சூரியனே ஆகும். எனவே அவனை வணங்குதல் போற்றுதல் வேண்டும் என்று சூரியனை கடவுளாகப் பாவித்து கடவுள் வாழ்த்துக் குறட் பாக்கள் அமைந்துள்ளன. கிரேக்க சமுதாயம் போல் இல்லாமல் திருவள்ளுவரை சங்கப் புலவர்கள் போற்றித் திரு வள்ளுவமாலை என்ற சிறப்புப் பாடல்களைத் தந்துள்ளனர். கிரேக்க சமுதாயம் போல் இல்லாமல், இத்தத்துவத்தை, அன்றைய அறிவியற் கருத்தை தமிழர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது சிறப்புத்தானே, ஐயா? இவற்றை ஏற்றுக் கொண்டதால் தமிழ்ச்சமூகம் ஓர் அறிவியல் பூர்வமான சமூகம் என்று நாம் நினைப்பதில் தவறுண்டா? ஐயா.

உலகின் அறிவியல் முன்னோடி தமிழன். நாகரீகத்தின் முன்னோடி தமிழன். இதை அறிவியல்பூர்வமாய் நிரூபித்திருக் கிறார் திருவள்ளுவர். ம்... சரியான போட்டி, மெய் சிலிர்க்க வைக்கின்றது பேராண்டி என்றார் நாகலிங்க ஐயா. அதே சமயம், ஆரம்பகால தத்துவங்கள் பின்னர் அறிவியலாய் மாறின. இன்றைய காலத்திலும் நிலைத்து நிற்கும் சில அறிவியல் செய்திகள் சில இருப்பதற்கான வாய்ப்புகள் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்திருக்கலாம். தெய்வப்புலவர் திருவள்ளுவர் நுட்பமானது என்று தாம் கருதிய விசயங்களைக் கருத்தில் கொண்டு, தான் கூற விரும்பிய செய்திகளைக் கூறியிருப்பார் என்று நம்புவதில் காரணம் உள்ளது. அது அறிவியல் செய்தி யாகவும் இருக்கலாம். உதாரணமாக பானை செய்தல், சுடுதல், பசுமட்கலத்தின் பண்பு, அதில் இட்ட தண்ணீரின் குணம், செப்பின் புணர்ச்சி போன்றவை தமிழன் வாழ்வில் பயன்பட்ட மட்பாண்டங்கள், செப்பு பட்டயங்கள், அவைகளில் எழுதும் தொழில் நுட்பம் போன்றவை தமிழ்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகட்டுமுன் இருந்துள்ள அறிவியல் என்பதை உணர்த்து கின்றன. அத்தகைய செய்திகள் இருக்க வாய்ப்புள்ளன.

"யானை மீது எறிகின்ற ஈட்டி, தவறியபோதும், குறிபார்த்து எய்த அம்பு முயலைத் துளைத்தபோதும், யானை மீது ஈட்டி எய்திய வீரனுக்கே பரிசு தரவேண்டும்" என்பார் வள்ளுவர். போர்கள் நிறைந்த காலத்தில் விலங்கினங்கள் நிறைந்திருந்த காலத்தில் இரும்பு ஆயுதங்கள் செய்யும் தொழில்நுட்பம் இருந் துள்ளது, உள்ளங்கை நெல்லிக்கனி. அத்தோடு நோக்கமே, முக்கியம் என்ற குறிப்பையும் இணைத்துக் கூறுகின்றார். இது ஒரு தலைமைப் பண்பு பற்றிய அரிய செய்தி. சமயநல்லூர், கீழடி ஆய்வுகள் தமிழனின் மதுரை வாழ்வியலுக்குப் பல அரிய தொழில் நுட்பங்கள், கொண்ட தமிழ்ச் சமுதாயம் என்றும் அவற்றின் காலத்தை கிறித்துவுக்கு 5000 ஆண்டுகட்கு முன்னர், என்றும் சொல்கிறது. கீழடியில் கண்ட பானைகளில் கரிய நிறமும், அப்பானைகள் மற்றும் செப்பேடுகளில் கண்ட தமிழ் பிராமி, சிந்து சமவெளிக் குறியீடுகள் பற்றியும் ஆய்வுகள் தமிழ் நாகரீகத்தை மேலும் முந்தியதாகக் கொண்டு செல்லும்

என்கிறார் அவைகளை ஆராய்ந்த அம்புரோஸ் என்ற இலங்கை ஆய்வாளர்.

சிவகாமி கைதட்டினாள். அதற்குள் பக்கத்துப் பகுதியிலிருந்து ஒருசில வயதானவர்களும், சிறுவர்களும் சில கல்லூரி மாணவிகளும் கூடிவிட்டனர். நாகலிங்க ஐயா பெரியவர்கள் அமர்ந்து பேச சில நாற்காலிகளைப் பக்கத்து வீட்டிலிருந்து கொண்டுவந்து போடச்செய்தார். பக்கத்துவீட்டு ஆட்டோக்கார ரமேஷ் ஒரு பெரிய சமுக்காளத்தைத் தூக்கிவந்து விரிக்க இளசுகள் உக்காந்தனர். வேப்பங்காத்துல கிரிக்கெட் விளையாட வந்த சிறுவர்கள், இவுங்க, எப்ப உள்ள போவாங்க. கிரிக்கெட் விளையாடலாம்னு நினைச்சுக்கிட்டே உட்கார்ந்தனர். ஒருவரை ஒருவர் மாத்திப் பார்த்துக்கிட்டனர். வாலிபப் பையன்கள் அந்தக் கல்லூரி மாணவிகள் இரண்டு பேரை அடிக்கடி பார்த்துப் பரவசப்பட்டனர். நாகலிங்க ஐயா அந்தப் பசங்களை கண்ணனிடம் அறிமுகப்படுத்தினார். இவன் ஜம்புலிங்கம், பாலிடெக்னிக் படிக்கிறான். இவன், சோசப். இன்ஜினியரிங் பாசாகி வேலை தேடுகிறான். அமெரிக்காவில ஏதாவது வேலை அகப்பட்டாச் சொல்லு. அவ, த்ரிசா என் தங்கச்சி பொண்ணு. இவ பேரு கணிஷ்கா எம் பேத்தி பூங்குழலியோட நண்பிகள். இப்போல்லாம் தமிழ் வாத்தியார்கள் வீட்டிலேயும் தமிழ் பெயர்கள் வைப்பதில்லை. என் பேத்திக்கு சண்டைபோட்டு வைத்தேன். அதற்கே மருமக ரொம்ப கோவிச்சுக்கிட்டா.

கண்ணன் பார்த்தான், “நண்பர்களே, என்பேர் கண்ணன். நானும் உங்களை மாதிரி மாணவன்தான், வாங்க”ணு சொல்லியபடி கீழே பாய்ல உட்கார்ந்துகிட்டு நாற்காலியை நின்னுகிட்டு இருந்த பெரியவருக்குக் கொடுத்தான்.

அவன் தமிழ்ல பேசுனது, த்ரிசாவுக்கு ஆச்சரியம். உண்மையிலேயே இவன் அமெரிக்காவில படிக்கிறானா, இல்லை, டுபாக்கூரா? என்று நைசா கனிஷ்கா காதில் கடித்தாள். கனிஷ்கா சுற்று முற்றும் மருண்டு பார்ப்பதைப்போல் பார்த்துவிட்டு, சுடிதார் சால் தலைப்பை முகம் துடைப்பது போல்

எடுத்து வாயை மறைத்துக்கொண்டு செல்போன் பேசுவதைப் போல் யாருக்கும் கேட்காமல் சொன்னாள், MLA பொண்டாட்டி போல அந்த அம்மாவோட கழுத்தில் உள்ள செயினைப் பார்த்தியா, கீழே வைரடாலர், நிச்சயம் அமெரிக்காதான்.

ஆமா, நம்ம வார்டு கவுன்சிலர் சம்சாரம் இதைவிடப் பெரிய செயின், கிளிமூக்கும், பெரிய மரகதக்கல்லு சேர்த்த டாலரும் போட்டுருக்கா. சொல்ல முடியாது டுபாக்கூரா இருக்கும். என்று கிசுகிசுத்தாள் கனிஷ்கா. நம்ம ஊரு பசங்கலே தமிழில் பேசுவது கிடையாது. இங்கிலீஷ் கலக்காமல் பேசுறானே இவன்.

கண்ணன் கேட்டான். தம்பிங்களா உங்களுக்கு ஏதாவது திருக்குறள் தெரிஞ்சா சொல்லுங்களேன். பள்ளிக்கூடப் பசங்க, ஒவ்வொரு குறளாகச் சொல்ல சிவகாமி சாக்லட் பெட்டியி லிருந்து ஒவ்வொரு Foreign சாக்லெட்டை திருக்குறள் சொன்ன ஒவ்வொரு பசங்களுக்கும், பெரியவங்களுக்கும் கொடுத்தாள். ஜோசப் அகர முதல எழுத்தெல்லாம், அகர முதல எழுத்தெல்லாம்... அதோட நிப்பாட்டிட்டான். கண்ணன் உதவி செய்தான். எனக்குத் தமிழ் தெரியாது என்ற ஜோசப், சாக்லெட்டை வாங்கியபடி சொன்னான், நான் KV student. தமிழ் படிக்கலை. நானும் KV student. தமிழ் படிக்கலைன்னு திரிசா அவனைப் பெருமையாய் பார்த்தாள். எனக்கும் எந்தக் குறளும் தெரியாது நானும் English Medium student தான் என்று கிசுகிசுத்தாள். நானும் KV என்றாள். நாகலிங்க ஐயா விடுவதாக இல்லை. த்ரிசா நீ சொல்லு. ஐம்புலிங்கம் சத்தமாய் சிரித்தான். அவனும் தமிழ் மீடியத்தில் படித்திருந்தாலும் குறள் மனப்பாடம் செய்ததில்லை. திருக்குறள் ஞாபகத்தில் இல்லை. ஒருவழியாய் அகர முதல சொல்லிவிட்டான். அதில் வந்த எகத்தாளம். த்ரிசா எனக்கு வேலையிருக்கு என்று எந்திரிச்சா. கூடவே கனிஷ்காவும் எந்திரிக்க. ராமு, அவங்களுக்கும் சாக்லெட் கொடுத்து அனுப்பி வைத்தான். கண்ணன் அடுத்து அகரம் என்றால் என்ன என்று கேட்டான். அங்கே மயான அமைதி. பள்ளி மாணவர்கள் குறளை மனப்பாடமாக ஒப்பித்தனர். அகரம் எழுத்துக்களின் தொடக்கம். அதுபோல

ஆதிபகவன் உலகின் தொடக்கம் என்று ஒப்பித்தனர். ஆயினும் அகரம் என்ற கேள்விக்கு விடை தெரியாமல் நெளிந்தனர். கல்லூரி மாணவர்கள் ஜுட் விட்டனர். ஐயா கூப்பிட்டார். சோசப் கொஞ்சம் நில். சமஸ்கிருதத்தில என்ன சொல்லிக் கொடுத்தாங்க. ஒரு சுலோகம் சொல் என்றார். அவன் கொஞ்சம் மெதுவாக நடந்தவன் வேகமாக ஓடி மறைந்தான். பெரியவர்கள் சிரித்தனர். லெட்சரூபா கட்டி இன்ஜினியரிங் படிக்கிறவனுக்கு அகரம்னா, அ-ன்னு கூடத் தெரியலையே, என்று ஆரம்பப்பள்ளிக்கூடம் கூட போகாத அம்பலத்தரசு நொந்து போனார். கண்ணன் தன் நோட்டை எடுத்து ஏதோ எழுதிக் கொண்டார். இவ்வளவு தானா? என்றான் நேசமுடன். நாகலிங்க ஐயா சொன்னார். அகரம்ன்னா என்ன?ன்னு நான் பாக்கிற பையன்களையும், பொண்ணுங்களையும் கேட்டு அகரம் னா அ என்று சொல்றவங்களத் தேடினேன். KV மாணவர்கள் மட்டுமில்லை. அரசுப்பள்ளி, மெட்ரிக்பள்ளி, ஆங்கிலப் பள்ளிகள் எல்லாத்திலேயும், மிகவும் குறைந்தவர் களே சொல்கின்றனர் என்று வருத்தத்துடன் கூறினார் நாகலிங்க ஐயா.

கண்ணன் சொன்னான், “இந்த நிலை மாறனும் ஐயா. வாட்ஸ்அப், ஃபேஸ்புக், டிவிட்டர் இதுலே போட்டோம்னா கத்துக்குவாங்க. இப்படி கேட்டால் சொல்ல யோசிப்பாங்க.” ஆனால், அவங்க கேட்கிறது ஒண்ணுதான். நான் ஏன் என்னுடைய முக்கியமான நேரத்தை திருக்குறள் படிக்க ஒதுக்கணும், தமிழ் படிக்க ஒதுக்கணும், எனக்கு வேலை வாய்ப்பைத்தர கல்வி வாய்ப்புக்கள் நிறைய இருக்கு. கணினியியல், புள்ளியியல், தாவரத் தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம், மின்னியல், ஆடிட்டிங், பொருளாதாரம் இவைகள் படித்தால் வெளிநாட்டிலாவது வேலைபெறலாம், தமிழ்ப்படித்தால், திருக்குறள் படித்தால் வேலைவாய்ப்பு ஏது? ஆங்கிலம் தெரிந்தால் ஒரு Tourist Guide வழிகாட்டியாகக்கூட பிழைச்சுக்கலாம். சமஸ்கிருதம் தெரிந்தால் கோவில் கட்டி பிழைக்கலாம்.

நீதிபதி மகாதேவன் ஐயா அரசுக்கு ஒரு உத்தரவு போட்டு விட்டார். திருக்குறள் பாடத்திட்டத்தில் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று. இது இப்ப படிக்கற மாணவர்கள படிக்க வைக்கும். ஆனா? சட்டத்தாலே படிக்கிறவங்க, பிற்காலத்தில் எனக்கு அதனால என்ன பயன்? என்று கேட்கிறாங்க. அதற்கு என்ன பதில் சொல்றது. அதுக்குத்தான்யா நான் ஒரு விசயம் வைத்திருக்கேன். அப்பா அதன் அடிப்படையே தவறுன்னு சொல்றாரு. ஆனால் வெளிநாட்டில் படிக்கும் எங்கள் நண்பர்கள் இது நல்ல விசயம், செய் என்கின்றார்கள். ஆனாலும் தவறா இருந்தா இதைச் செய்யக் கூடாது. அதனால தான் நீங்க இதப்படிச்சுப் பார்த்து சரியான செய்திகளை மட்டும் சொல்லுங்க. அந்தச் செய்திகளை கணினியின் உதவியுடன் உரிய படங்களில் நான் உருவாக்கி அதை மின் ஊடகங்களில் வெளியிட்டால் மாணவர்கள் நிச்சயம் படிப்பார்கள். திருக் குறளின் முக்கியத்துவத்தை உணர்வார்கள். என்றான். நாகலிங்க ஐயா கூறினார். இதைவிட எனக்கென்ன வேலை? அதைக் கொடு என்று வாங்கிப் பார்த்தார். தனக்குக் கிடைத்த பரிசு பெற்ற தலைப்பில் அமெரிக்காவில் தான் நிகழ்த்திய பேச்சின் தமிழாக்கத்தை பேசிக்காட்டினான். ராமு பள்ளிக்கூட நாட்களில் பேசியது போன்றே இருக்கிறது. நல்லா வருவாய் என்று வாழ்த்தி, இரண்டு நாட்களில் வந்து வாங்கிக் கொள். பிறகு எனக்குப் பிடித்த விளக்கங்களை பச்சை மையிலும், பொருந்தாத விளக்கங்களை சிவப்பு மையிலும் கோடிட்டுத் தருகின்றேன். இது தொடர்பாக எனக்குத் தெரிந்த விளக்கங்களையும் தருகின்றேன் தேவையிருப்பின் பயன்படுத்திக்கொள் என்றார். இராமு சொல்வது போல், "திருவள்ளுவர் எல்லாம் தெரிந்த விஞ்ஞானி" என்ற ரீதியில் உனது தயாரிப்பு இருக்காது என்பதை முதலில் தெரிவித்து விட்டு, திருக்குறளில் மறைந் துள்ள அறிவியற் கருத்துக்கள் தமிழ் நாகரீகத்தில் உறைந்திருந்தவற்றிலிருந்து ஒருசிலவற்றைத் தருவது, அது இக்காலத்திற்கும் பொருந்துவதாய் அமைவது வெற்றிகரமான முயற்சியாய் அமையும் என்று பாராட்டிவிட்டு, அவர்களை இன்முகத்துடன் அனுப்பிவைத்தார்.

அத்தியாயம் 2

கண்ணனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி, தந்தையுடன் நடத்திய ஒருவருட தர்க்கம், அதற்காக அவன் உழைத்து சேகரித்த பல அரிய உண்மைகள் வெளிவர வேண்டிய சமயம் வந்துவிட்டது என்று பூரித்தான். சிவகாமியின் செல்வன் பல பாராட்டுக் களைப் பெறப்போகிறான் என்று மகிழ, ராமு சிந்தனையில் ஆழ்ந்தான். மேடைகளில் பேசுவது என்பது வேறு. எழுத்தில் வரும்போது சரியாக இருக்கவேண்டும். கண்ணன் கூறுகின்ற சில அறிவியற் செய்திகள் ராமுவுக்கே புதிதாய் இருந்தது. கண்ணனின் விளக்கம் மிக நுட்பமாய் இருக்கின்றது. அந்த அறிவியல் உண்மைகள் எல்லோருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நவீன அறிவியல் கண்டுபிடிப்புக்கள், தொழில் புரட்சி, இரண்டாம் உலகப்போருக்குப் பின், புதிய இயற்கைச் சூழல், இயற்கை தந்த சவால்கள் காலத்தின் மாற்றம், இவற்றால் உண்டானது. அறிவியல் உலகம், ஏற்கனவே கண்டுபிடிப்பு என்று கருதி பூமியைக் கெடுத்த தொழில் நுட்பங்கள் போன்றவைகள் தமிழனிடமிருந்து வந்தவை என்று சொல்வதில் எந்தப் பெருமையும், வந்துவிடப் போவதில்லை. ஆயினும் அறக்கருத்துக்கள் போதனைகள், காலம் கருதி நிலைத்து நிற்கும் வகையில் திருக்குறள் இருக்கிறது என்று எழுதுவதில் அவனுக்கு ஆட்சேபமில்லை. அறிவியல் கண்டுபிடிப்புக்கள் மனிதனின் வாழ்வில் வசதிகளைத் தந்தாலும், பூமியின் சுற்றுப்புறத்தைக் கெடுத்து வைத்துள்ளன என்பது அவன் வாதம்.

செல்போன் ஒலிக்க கண்ணன் எடுத்தான். அமெரிக்காவி லிருந்து தன்னோடு பயிலும் யாழினி பெயர் கண்டதும் பரவசமானான். யாழினி குரல் யாழ்போல் இனிக்கும். பெயரைப் போன்றே அவள் தோற்றமும் மகிழ்ச்சி தரும். அமெரிக்காவில் இருக்கும் தமிழ்ப்பெண், முற்போக்குச் சிந்தனைகள் கொண்டவள். ஒய்வு நேரத்தில் தமிழ்ப்

பாடங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதில் மகிழ்வாள். நல்ல பழக்கவழக்கங்கள் கொண்டவள்.

கண்ணன் சொன்னான், "ஹாய் யாழினி, எப்படி இருக்கே, நீயும் இந்தியா வருவதாகக் கூறினாயே? எப்ப வர்றே? நான் நல்லா இருக்கேன்" என்றான்.

தோழா, வணக்கம். நான் ஏற்கனவே கிளம்பியாச்சு, நாளை மறுநாள் வருகிறேன். தந்தை உன்னைப் பார்க்க விரும்புகிறார். விமான நிலையத்திற்கு வரலாமா? கட்டாயம் வருகிறேன் என்று கூறிவிட்டு, யாழினி சென்னை விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கும் நேரத்தைப் பற்றிய தகவலை அனுப்பி வை என்று கூறிவிட்டு நாகலிங்க ஐயாவை சந்தித்த விசயத்தைச் சொன்னான். யாழினியும் ''ரொம்ப சந்தோசம்'' என்று மகிழ்ந்தாள். எனக்கும் உன் தந்தை சொல்வதுபோல் ஐயப்பாடு உள்ளது. மாமிசம் உண்ணக்கூடாது என்று சொல்வது, பெண்கள் பற்றிய சில குறட்பாக்கள் திருக்குறள் மீதுள்ள எனது ஈடுபாட்டைக் குறைத்துள்ளது. எனது தந்தை ஒரு முற்போக்கு வாதி. திருக்குறள் முனுசாமி, குன்றக்குடி அடிகளார், ம.பொ.சி. முடியரசனார், புலவர் ஆ. பழனி, வ.சு.ப. மாணிக்கம், 'விஜயதேனு விலாஸ்' ஞானசேகர் பாண்டியன் போன்றவர்களின் நண்பர். உனது முயற்சியைச் சொன்னேன். அவசியம் பார்க்கவேண்டும் என்றார். நான் நமது நட்பு தமிழால் விளைந்தது என்று கூறினேன். அவர் மகிழ்ச்சி அடைந்தார். ஆண், பெண் நட்பு காதலின்றி சாத்தியப்படும் என்பதை அவர் புரிந்துகொண்டார். என்மீது உயிரே வைத்துள்ளார். அம்மாவுக்கும் உனது நட்பைப் பற்றிப் பெருமையே. எனவே நீ அவசியம் வா. முடிந்தால் அப்பா, அம்மாவையும் அழைத்துக் கொண்டு வா. "முயற்சிக் கின்றேன் தோழி", என்று கூறி உந்தன் வரவு நல்வரவாகட்டும் என்று வாழ்த்தி செல்பேசியை நிறுத்தினான். அவனது மனம் பின்னோக்கிப் பாய்ந்தது.

அத்தியாயம் 3

சென்ற வருடத்தில் ஒருநாள்,

முதன் முதலில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது, ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடிக் கொண்டிருந்த சில தமிழ்ப்பெண்கள், இந்தியப் பெண்கள் சாப்பிடும் மேசை அருகில் கோப்பி அருந்திக்கொண்டு இருந்தனர். இரண்டு சிங்களத் தமிழ்ப் பெண்கள் கதைத்துக் கொண்டிருந்த மேசை அருகே நண்பர்களுடன் சென்று அமர்ந்தான் கண்ணன். அந்த சிங்களப் பெண்கள், கண்ணனை அடையாளம் கண்டு கொண்டார்கள். கண்ணன், தங்கள் கட்டுரை வாசிப்பு நிகழ்ச்சியில் நாங்கள் இருந்தோம். மிக அருமையான சிந்தனை! திருக்குறள் பற்றிய உங்கள் ஆய்வு மெய்சிலிர்க்க வைக்கின்றது. எங்கள் யாழ் பேராசிரியரிடம் அதைப்பற்றி பேசினேன். நெகிழ்ந்து போனார். தங்கள் பணி தொடர வாழ்த்துக்கள் என்று வாழ்த்தினர். 'மிக்க நன்றி' என்றபடி அவர்களைப் பற்றி விசாரித்தபோது, தமிழ்ப் பெண்கள் கூட்டத்திலிருந்து யாழினி வந்தாள். நீங்கள் தான் அந்தக் கண்ணனா? என் பெயர் யாழினி, போனவாரம் நடந்த உங்கள் சொற்பொழிவைப் பற்றி என் நண்பர்கள் கூறினார்கள். மிக்க மகிழ்ச்சி. எங்கள் தந்தை, தாத்தா எல்லோரும் திருக்குறள் பக்தர்கள். அப்பா சொன்னார் அமெரிக்காவில் திருக்குறளா? ஆச்சரியமாய் இருக்கிறது என்று. எனக்கும் கூட கொஞ்சம் வாசிப்பு உண்டு. யாழ் பெண்களும் யாழினியுடன் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டனர். "கண்ணன் இனி நம்பளைக் கழட்டி விட்டுருவான்டா" என்று நண்பர்கள் பேசிக்கொள்ள, கண்ணன், விடைபெற்றான். "இன்று மாலை காபி சாப்பிடலாமா, நாம் நால்வரும்" என்று யாழினி கேட்டாள். நிச்சயம்! சந்தோசமாக வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

மாலை 6.00 மணி. நூலகத்தில் சில தேடல்களை முடித்துக் கொண்டு அவசரமாகக் கிளம்பி அதே ஸ்டார் பக்ஸ் காப்பி கடையில் ஒரு நால்வர் இருக்கைக்குச் சென்று அமர்ந்தான்.

சொல்லிவைத்தார்ப்போல் மூவரும் யாழினி தலைமையில் வந்தார்கள். தமிழில் நாங்கள் கதைத்தபோதுதானே நீங்கள் கண்ணனைக் கண்டு கொண்டீர்கள் என்று அந்த யாழ் பெண்கள் சொல்ல, ஆமாம் அப்போதுதான். தமிழ்ப்பேச்சு காபிக்கடையில் கேட்டவுடன் குற்றாலத்தின் சாரலில் குளித்தது போல் உணர்ந்தேன். ஆய்வுக்கூடம், லைப்ரரி, சமையல், வால்மார்ட், இது தவிர காபிக்கடை இப்படியே செல்லும் நம் அமெரிக்க வாழ்க்கையில் ஓட்டமும் நடையுமாக ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைக்கவும், பாடசம்பந்தமாக பேசவும், நமது வேலைகளினூடே வீட்டில் உள்ள பெரியோர்களுடன் வாட்ஸ்அப் உதவியுடன் பேசி உயிர்பெற்றுக் கொள்வதும், கொடுப்பதும், தவிர எதைக் கண்டோம். ஆயினும் பேராசிரியப் பெருமக்கள் நமக்கு கொடுக்கிற சுதந்திரம், ஆய்வுக்கூடங்கள், வசதியான நூலகங்கள், பலவகையில் பரிமாற்றம் செய்துகொள்ள கிடைக்கும் வாய்ப்புகள், சுகாதாரம், நம் உண்மையான திறமைகளை கண்டு, வெளிப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புகள் அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தை உலகத் தரத்தில் முதன்மையாக வைத்து உள்ளது. வேலைவாய்ப்பு படித்து முடிக்கையிலேயே கிடைக்கிறது. அதனால் ஊர்விட்டு ஊர் வந்துள்ளேன்" என்றாள் யாழினி.

"எனக்கு, ஏற்கனவே எங்கள் தந்தை இங்கு குடிபெயர்ந்துள்ளார். எனவே இங்கேயே பிறந்து வளர்ந்தேன்" என்றான் கண்ணன். "தந்தை நல்ல தமிழ் எழுத்தாளர், பேச்சாளர், அதற்கு அவரது தமிழ் ஆசிரியர் தான் காரணம் என்று சொல்வார்" என்றான் கண்ணன். எனக்கு ஒரு காபி லாட்டே என்றாள் யாழினி. யாழ் பெண்களில் ஒருவர் வரிசையில் நின்று கொண்டார். இன்னொருவர் காலில் காயம். அதனால் அவரை இருக்கையில் அமரவைத்துவிட்டு வரிசை யில் நின்றனர். சில மாணவர்கள் காப்பியை உறிஞ்சியபடி மடிக்கணினியில் எதையோ செய்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு வெளி உலகம் இருப்பதாகவோ, சுய உணர்வு இருப்பதாகவோ, யாரும் நினைக்க முடியாது. சிலர் நோட்டில்

வைத்து படம் வரைந்து தாங்கள் கற்றதைத் தெளிவு படுத்திக்கொள்ள பகிர்ந்து கொண்டிருந்தனர்.

வலது கை மூலையில் ஒரு ட்ராமா பார்ட்டி, கல்சுரல்காக கலந்துரையாடிக் கொண்டிருந்த யாழ் பெண் சொன்னாள், “இலங்கைப் போரின் போது எங்கள் அண்ணாவும், அம்மாவும் எங்களைத் தூக்கிக்கொண்டு கனடா சென்ற எங்கள் அத்தை வீட்டில் சேர்த்துவிட்டார்கள். நாங்கள் கனடா செல்லுமுன் அண்ணாவும், தந்தையும் ராணுவத்தால் சுடப்பட்டார்கள். அம்மா மட்டும் கதறி அழுதபடி நிவாரண முகாம்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். கனடா அத்தைக்கு ஒரு வெள்ளைக்காரர் உதவி செய்து எங்கள் அம்மாவையும் கூட்டி வரச்செய்தார். இந்தப் பெண்ணை எங்கள் அம்மா கூட கூட்டி வந்தார்கள். அவர் வீட்டில் ஒருவர் கூட மிஞ்சவில்லை. இருவரும் ஒன்றாகவே வளர்ந்தோம். அவர் பெயர் பூங்கோதை. என் பெயர் பூங்கொடி என்று சொல்லும் போதே, ‘காபி லாட்டே’ என்று சீனப்பெண் சிகப்பு ஆடையில் கத்தினாள். காப்பிகளை எடுத்துக்கொண்டு இருக்கைக்கு வந்தனர். பூங்கொடியும், பூங்கோதையும் காப்பியை கைகளில் வைத்திருந்தார்கள். இலங்கையில் நடந்த குளறுபடிகளும், போர்களின் வெப்பம் இன்னும் அவர்களிடம் குறையவில்லை என்று நினைத்தான் கண்ணன். காபி லாட்டேயும்தான். ஆனாலும் அவர்களது தமிழ்நேசம் நெஞ்சைக் கிள்ளியது அவனுக்கு.

யாழினி கண்களில் நீர் வருவதைக் கண்ட கண்ணன், யாருக்கும் தெரியாமல் கைக்குட்டையை அவள் கையில் திணித்தான். இனிமேல் நாம்ம நண்பர்கள், யாழினி, பூங்கொடி, பூங்கோதை, கண்ணன், அனைவரும் கைதட்டி, காப்பியைப் பருகியபடி கதைத்தார்கள்... கதைத்தார்கள்... கதைத்துக் கொண்டேயிருந்தார்கள். அந்த லேப்டாப் மாணவனைக் காணவில்லை. ட்ராமா குழு அனைவரும் பறந்துவிட்டிருந்தனர். ஸ்டார் பக்ஸ் கடை மூடுவதற்கு 10 நிமிடங்கள் உள்ளன என்ற அறிவிப்பு வந்தது. வேகமாக உடைமைகளை எடுத்துக் கொண்டு விடைபெற்றுக்கொண்டனர். அடுத்த வாரம் இதே

நாள், இதே இடம் உங்களுக்காகக் காத்திருப்பேன் என்று கண்ணன் சொல்லியபடி நடந்தான்.

அந்தப் பெண் யாழினி எவ்வளவு வாசித்திருக்கிறாள். கனடாவில் வளர்ந்திருந்தாலும் பூங்கொடியும், பூங்கோதையும் பேசும் கொஞ்சும் இலங்கைத்தமிழ் எவ்வளவு இனிமையாய் உள்ளது. அவர்கள் தேர்ந்தெடுத்த வார்த்தைகளை எப்படி அழகாகப் பேசுகின்றனர். ஈழத்தமிழர் அனைவரும் இப்படித் தானா? ஏதோ நம் சகோதரிகளைப் போன்ற ஒரு இணைப்பு அவர்களோடு பேசியபோது வருகிறதே. ஏன் நம் பேச்சும் செட்டிநாட்டுத் தமிழிலிருந்து ஈழத்தமிழாய் மாறுகிறதோ? அந்தப் பெண்கள் எவ்வளவு மகிழ்வாகத் தங்களைக் காட்டிக் கொண்டாலும், அவர்கள் நம் இதயத்தின் ஈரத்தைக் காணாதது போல் இலகுவாக பல்வேறு விடயங்களைப் பேசுகின்றனரே! என்று வியந்தபடி நடந்து கொண்டிருந்தான்.

அடுத்த வாரம் அந்த நாளுக்காக அவன் மனம் ஏங்கியது கண்ணனுக்குத் தெரிந்தது. யாழினியின் குரல், அவளது தெளிவு. அவன் மனதில் நிரந்தரமாய்க் குடியேறியது. அம்மா கேட்டாள்... என்ன ஒரே சிந்தனை, சிவகாமி தன் மகனை ஒரு நட்பு வட்டத்தில் வைத்திருந்தாள். ராமுவும் கூடத்தான், இரவு எப்போதும் சேர்ந்தே சாப்பிடுவர். முக்கியமான வேலை நாட்களில் ராமு அவர்களைச் சாப்பிடச் சொல்லி விடுவான். கண்ணனும் அப்படித்தான் நண்பர்கள் காப்பிக் கடையில் தங்களை மறந்து கதைத்துக் கொண்டபோது மட்டுமே கண்ணன் சிவகாமியிடம் போன் செய்ய மறந்து போனான். சிவகாமிக்கு தெரியும், ஏதாவது காரணம் இருக்கும். கண்ணன் வந்து உணவு உண்டுவிட்டுத் துயிலச் சென்றுவிட்டான். அடுத்த நாள் மாலை சிவகாமி கேட்டாள், கண்ணா, ஏதாவது காதலா?... சிரித்தபடி "இல்லை அம்மா" என்றான். "நேற்றிலிருந்து உன் சிந்தனை வீட்டில் இல்லையே? யாரடா அவள்..." என்றாள்? அம்மா, நீ தொலைக்காட்சியை அதிகம் பார்த்துக் கெட்டுப் போய்விட்டாய், இது அதுக்கும் மேலே, நட்பு என்றான். எனக்கு, மூன்று புதிய பெண் நண்பர்கள் கிடைத்துள்ளனர் என்று அவன் சொல்லச் சொல்ல சிவகாமிக்கு பெருமிதமாய்

இருந்தது. தான் தப்பாய் கேட்டதாக உணர்ந்தாள். இராமு வந்து பிறகு நடந்த உரையாடல்களில் சிலவற்றைப் பகிர்ந்தான். யாழ் நண்பர்கள் பற்றிக் குறிப்பிடும்போது இனம் தெரியாத ஒரு உணர்வு ஏற்படுவதை இராமுவும் தன் மகனிடம் சொன்னான். ‘‘நட்பு’’ என்பதை ‘‘காதலுக்கும் மேலே’’ என்று கண்ணன் சொன்னதை சிவகாமி ராமுவிடம் கூற, இராமு சொன்னான். ஆமாம் அவன் என் மகனல்லவா? சிவகாமி உடனே ஏன், அவன் என் மகன் இல்லையா? என்று கேட்க, நம் மகன் என்று அணைத்தபடி விளக்கையும் அணைத்தான் இராமு.

அடுத்தவாரம் யாழினி கேட்டாள், ‘‘எஸ்ராவின் ‘பேசிக் கடந்த தூரம்’ படிச்சீங்களா. நானும் பாதிப் படித்திருக்கின்றேன்’’ என்றாள் பூங்கொடி. பூங்கோதைதான் அந்தப் புத்தகத்தை வாங்கி வந்தாள் என்றாள். அவரது நேர்மை பளிச்சிடுகின்றது என்றாள். ஒரு புத்தகத்திற்குள் எத்தனை புத்தகங்கள். அவருக்கு சாகித்திய அகெடமி விருது கிடைத்துள்ளதே! என்றாள் பூங்கோதை. அவரோட யாமம் நாவல் வாசித்துள்ளேன் என்றாள். யாழினி கூறினாள் அவரது புத்தகங்கள் அனைத்தை யும் வாசித்து விட்டேன். என்ன வாசிப்பு. அவரது அபரிமித மான வாசிப்பும், புனை நேர்த்தியும் என்னைக் கவர்ந்தது என்றாள். அவரது கேள்வி பதிலில் ஒரு புதுமையை நான் கண்டுள்ளேன். யாரும் பார்க்காத கோணத்திலிருந்து ஒரு புகைப்படம் எடுக்கும் ஒரு புகைப்படத் தொழில்நுட்பக் கலைஞன் போன்று அவரது பதில்கள் இருக்கும். பிரபஞ்சன், காலமானது, ‘தமுஎச வெளியீடுகள்’, ‘துளிர்’ என்று பலவற்றைப் பற்றிய தங்கள் வாசிப்புக்களைக் கதைத்தனர். திருக்குறள் பற்றிய உங்கள் எண்ணங்களைத் தாருங்கள் என்றான் கண்ணன். திருக்குறளை நேசிக்கும் ஈழத்தமிழர்கள் அதனை ஆயுதமாய் பிரயோகிக்கவும், தங்கள் வாழ்வியலில் பயன்படுத்தவும் தவறிவிட்டனர். அதனால்தான் இத்தனை துன்பம் என்றாள் பூங்கொடி.

“தீதும் நன்றும் பிறர்தர வாரா, பிறர்தரவந்தால் அது ஏதாவது ஒருவகையில் நாமும் தொடர்புடையவராய் இருப்போம்’’ என்றாள். ‘‘சரி பூங்கொடி என்று உனக்குப் பெயர் வைத்தது

யார்?" என்று கேட்டான் கண்ணன். "என் தந்தைதான்" என்று சொன்னாள். "தந்தை முடியரசன் என்ற எழுத்தாளரின் தீவிர ரசிகர் அவர் பூங்கொடி என்ற காப்பியம் ஒன்றை யாத்திருக் கின்றார் முடியரசனார். அதில் பூங்கொடி என்ற தமிழ்ப் பெண்ணைச் சித்தரிப்பார். சேக்ஸ்பியரின் காவியம் போல் போற்றத்தக்கது. அதை என் தந்தை படித்துக் கொண்டிருக்கை யில் திருமணம் நடந்திருக்கின்றது. அதன் தாக்கம் எனக்கு பூங்கொடி என்று பெயர் வைத்தார்" என்றார். எல்லோரும் கைதட்டினர்.

கண்ணன் கேட்டான். ''நெடுங்குருதி, உறுபசி, துயில் வாசித்திருக்கிறீர்களா?'' ''இன்னும் இல்லை'' என்றாள் பூங்கோதை. ஆனால் தமிழ்நாட்டில் தமிழ்ப்படித்தவள் படும் கஷ்டத்தைப் பற்றியது உறுபசி என்று விமர்சனம் படித்தேன். சுதந்திரத்திற்கு முன் பாரதி போன்றோர் தமிழன் நிலைகுறித்து வருந்தியதற்கு வெள்ளைக்காரன் காரணம் என்று கருதலாம். இப்ப அதைவிட மோசமானதற்கு நாம் தானே காரணம் என்றாள் பூங்கொடி. உண்மை... உண்மை என்றாள் யாழினி. 'அரசியல் பழகு'. ஆசிரியர் சமஸ் அதைத்தானே கூறுகிறார். மக்களுக்கும் அரசுக்கும் என்ன சம்பந்தம் என்பது கொஞ்சக் காலத்தில் கேள்வி கேட்கப்படலாம். வளர்த்த அன்னை தந்தை பிச்சை எடுப்பதைப் போலும் அதைக் கண்டுகொள்ளாத அவர்கள் குழந்தைகள் போன்றும் அரசு தனிமனித உரிமை பற்றிய சிந்தனையற்று விளங்கும். 'அரசியம்' அதுவே என்கிறார் சமஸ். காந்தியின் வழிகாட்டுதலின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார் சமஸ் என்றான் கண்ணன்.

திருக்குறள் பற்றிப் பேசினார்கள். எனக்குத் தெரிந்து எந்தப் படைப்பாளியை பேட்டி கண்டாலும் திருக்குறளை உயர்வாகக் கூறுகின்றனர். லியோ டால்ஸ்டாய், ஐன்ஸ்டீன், மகாத்மா காந்தி என்று அனைவரும் போற்றுகின்றனர். ஆனால் அதைப் படித்து நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை என்று என் நண்பன் கூறுகின்றான். இத்தனைக்கும் அவன் அப்பாவும், ஒரு தமிழாசிரியர். தமிழ் போட்ட சோற்றைத் தின்ற குடும்பத்தில் வந்தவன் இப்படிக் கேட்கின்றான் என்று

கண்ணன் நொந்துகொண்டான். எங்கள் வகுப்பறைகளிலும் கூட கண்ணனின் கூட்டத்திற்குச் சென்றவர்களில் ஒருசிலர் வந்து உலக அதிசயம் போல் திருக்குறளுக்கு பில்டிங் கட்றானே. கண்ணன், அப்படி என்ன இருக்கு அதில் என்கிறார்கள். தமிழ்நாட்டில் திருக்குறள் ஒப்புவித்தல் ஒரு ஃபேசன். கூட்டங்களில் மேற்கோள்களில் ஒரு திருக்குறளாவது கூற வேண்டும். அது சோறு போடுகிறது. அமெரிக்காவில் அது எப்படிச் சோறு போடும். பிற நாடுகளில் அது எதற்கு? தன் அழகுக் குழந்தையைக் காட்டி பிச்சையெடுக்கும் ஒரு தாயைக் கண்டது போல் இருக்குது என்று யாழினி பேசியது இன்றும் நெஞ்சில் இருக்கிறது. இங்கே "திருக்குறள் உலகப் பொதுமறை என்று சொல்லி காசு சம்பாதிக்கணுமா?" என்றாள் யாழினி. அப்போது தான் இத்தத் திட்டம் உருவானது. நாம் திருக் குறளின் மகிமைகளை எடுத்து ஆராய்வோம். அதில் இன்றைய இளைஞர்களுக்கு அவசியமான செய்திகளைத் திரட்டுவோம். ஒவ்வொருவரும் நமது துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு சரிபார்த்து அதனைக் கொண்டு செல்வோம் என்று திட்டம் போட்டு கைதட்டிக் கொண்டு களைந்தனர். இறுதி ஆண்டு பரீட்சைக்குப்பின் பூங்கொடி, பூங்கோதை கனடா சென்று விடுவார்கள். நாமும் இந்தியா சென்று மீண்டும் வந்து வேலையில் சேர்வோம். வளைத்தளத்தில் இணைவோம். இது பிழைப்புக்காக இல்லை. தமிழ் அழியாமல் காக்க. திருக்குறள் மாண்புகளை எடுத்துச் சொல்லும் அக்கினிக் குஞ்சுகளாக மாறுவோம்!! என்று சூளுரைத்துப் பிரிந்தனர். நம் இனத்தின் அடையாளத்தை மறத்தல் கூடாது. மஞ்சளின் மகிமைகள் அமெரிக்காவில் உரிமை கொண்டாடப்பட்டது போல் ஆகிவிடக்கூடாதல்லவா? என்று கண்ணன் நினைத்தான்.

அத்தியாயம் 4

இன்று யாழினி என்ன கருத்துக்கள் கொண்டு வந்திருப்பாள், என்ற ஏக்கம், நட்பைத் தாண்டி அடுத்த நாளுக்காக

கண்ணனைக் காத்திருக்கச் செய்தது. நாகலிங்கம் அய்யா, இன்னும் இரண்டு நாட்கள் பிடிக்கும். நான் சென்னையில் பேரக்குழந்தைகள் பார்க்கப் புறப்படுகின்றேன் என்று குறுஞ்செய்தியில் தன் சேலையூர் முகவரியையும் அனுப்பி விட்டு முடிந்தால் அங்கு வந்து வாங்கிக்கொள் என்று தகவல் கொடுத்தார். தந்தையிடம் ''யாழினியைப் பார்த்துவிட்டு, அய்யாவிடம் நோட்டையும் பெற்றுவிட்டுச் சென்னை நூலகத் திற்கும் சென்று வருகின்றேன்'' என்று கூறிவிட்டு சென்னை விரைந்தான் கண்ணன்.

சென்னை ஏர்போட்ல அடிக்கடி கண்ணாடி விழும். பார்த்து சென்று வா என்று சிவகாமி கிண்டலடிக்க, கண்ணன், போம்மா என்று சிரித்தபடி அழகான சிறிய பையில் உடை களுடன் தன் நோட்டையும் எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

சென்னை ஏர்போர்ட்ல நல்ல கூட்டம். ஒரே நேரத்தில் மூன்று வான ஊர்திகள் துபாய், பிரான்க்ஷ்ஃபர்ட் மற்றும் டோக்கியோவிலிருந்து வந்து சேர்ந்தன. அமெரிக்கா பயணி களுக்கு ரொம்ப பிரச்சனைகள் வராதாம். சீக்கிரமே வெளியே வந்துவிட்டாள் யாழினி. யாழினியின் தந்தையைப் பார்த்ததும் காலில் விழுந்து வணக்கம் தெரிவித்துவிட்டு விரைவாக ஒரு அணைப்பையும் பெற்று நெற்றியில் முத்தத்தைப் பெற்று அம்மாவையும், தாத்தாவையும் கண்டு வணங்கி வாழ்த்துப் பெற்று தனது சிறிய பேக்கை தந்தையிடம் கொடுத்துவிட்டுத் தேடினாள். கண்ணன் பார்த்துவிட்டு, ஓரமா நின்றான். யாழினி கண்ணனைப் பார்த்துவிட்டாள். வா, கண்ணா என்று உரிமை யோடு அழைத்து தந்தையிடம் அழைத்துச் சென்றாள். அவரும் கண்ணனைப் பெருமிதத்துடன் வந்து அணைத்தார். எல்லோர் முகத்திலும் மகிழ்வு. தாத்தா மட்டும் அவர்கள் ஒருவரை ஒருவர் நட்புடன் தழுவிக் கொண்டதையும், பார்த்து, இந்தக் குழந்தைகள் தழுவலில் எந்த விகற்பமும் தென்படவில்லையே. தமிழ்நாட்டில் சாதிப் பாகுபாடு, தீண்டாமை, ஆண் பெண் வாழ்த்துப் பெறல் இயற்கை வழிபாடு எல்லாம் எப்படித் தொலைந்து போனது. போகட்டும் நம்ம காலத்தோடு என்று தாத்தா நினைத்தார். யாழினி தாத்தாவின் மனசைப் புரிந்து

கொண்டு சொன்னாள் தாத்தா, என் நண்பன் இவன். நம்ம வீட்டுக்கு அழைத்துப் போவோம். எங்களுக்கு உங்க உதவியும் தேவை என்றாள். போய்க்கிட்டே பேசுவோம். 'ஊபர் பெரிசு' சொல்லிருக்கேன். நல்லா அழைச்சிட்டுப் போகலாம் என்றார். உடனே கண்ணன், இல்லை தாத்தா, நாளைக்கு வர்றேன். பயணக்களைப்பில் இருக்கா யாழ் நாளை மாலை சோலையூர் சென்று விட்டு உங்க வீட்டுக்கு வருகிறேன். இங்க என் நண்பன் அறை உள்ளது. அவன் ஏர்ப்போர்ட்டுக்கு எதிரில் உள்ள சந்தில் இரு சக்கர வாகனம் வைத்துக்கொண்டு மிதிவண்டி டீ சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறான் என்றான். சரி நீயும் ஏறு. எங்க வீடு ஓ.எம்.ஆரில்தான். நாங்களும் உன்னோடு ஒரு டீ சாப்பிட்டு விட்டு நண்பன்கிட்ட சேர்த்துட்டுப் போகிறோம் என்றார் யாழ் அப்பா.

நண்பனை அறிமுகப்படுத்திவிட்டு டீ சொன்னான் கண்ணன். நிறைய சீனி, குட்டி கப், நல்ல சூடு, பேப்பர்கப் இருந்தா போலீஸ் புடிக்குது, அதான் டம்ளர் கிளாஸ் சுமக் கிறேன். தினம் இரண்டு கிளாஸ் டம்ளர் உடைந்து போகுது என்றார் டீக்காரர். பயணக் களைப்பில் முதல் தடவையாய் அந்த டீயை ருசித்த யாழினி சொன்னாள் என்ன சுகம். இப்படி சைக்கிள் டீ உலகத்திலே எங்கேயும் கிடையாதுப்பா... அதுவும் 10 ரூபாய்ல... நடு ரோட்ல... ஏர்ப்போர்ட் எதிரிலே... இந்தியா... இந்தியா தான், சென்னை... சென்னைதான். சான்சே இல்லே... நாளை பாப்போம்... சோர்வா இருக்கே சீக்கிரம் எந்திருச்சு ஃபோன் பண்ணு என்று சொல்லி விட்டு, கைதட்டிக் கொண்டு, இரு சக்கர வாகனத்தில் ஏறி ட்ரு ட்ரு..னு கிளம்பிட்டான் கண்ணன். தாத்தா நினைச்சுக்கிட்டார். செம பையன்... இவன் மட்டும் நம்ம சாதியா இருந்தா கட்டி வைச்சுடலாம்... ஒருவேளை வேற சாதியா இருந்தா... இருந்தா என்ன? இந்தப் பையன் எவ்வளவு நாகரீகமா நடந்துக்கிறான். இப்படிப்பட்ட பையனா இருந்தா சாதி மாத்திக்கூட கல்யாணம் செய்து வைக்கலாம். நல்ல கலரா இருக்கிறான். வேற கீழ்சாதியா இருக்க வாய்ப்பில்லை என்று தனிப்படத்தை தன் மனசில் ஒட்டிக் கொண்டிருந்தார். தாத்தா மனசுல என்ன

ஓடும்னு யாழினி அப்பாவுக்கும் தெரியும். ஆனால் யாழினியின் தந்தை ஒரு முற்போக்குவாதி. சிகப்பா இருந்தா பொய் சொல்ல மாட்டான். திருட மாட்டான் என்றெல்லாம் ஏமாற மாட்டார். நிறைய உதவி பண்ணுவார். எந்த சாதிப் பையனா இருந்தாலும் யாழினி ஆசைப்பட்டா செய்து வைத்துவிடுவார். ஆனாலும், காதல் செஞ்சா கட்டி வைப்பார். தானாப் போய் எல்லா சாதியிலேயும் என் பொண்ணைக் கொடுக்கறேன்னு நிக்க மாட்டார். அவருக்கு, இந்த ட்ரம்ப் என்னன்ன குண்டைப் போடப் போறாரோ! இந்த வருசம் படிச்சு முடிக்கிறவங் களுக்கு வேலையில்லை. வேலை யிருந்தா சம்பளம் இல்லை என்று சொல்லி விடுவாரோ? லோன் வாங்கிப் படிக்க அனுப்பிய செலவு இரண்டு வருடம் வேலைக்குப் போனா எடுத்துரலாம்... கல்யாணம் 4 வருசமா வது தள்ளிப் போட்டா வீட்டுலோன், கல்யாணச் செலவையும் எடுத்துரலாம். இப்படி நினைப்பை ஓட வைத்துக்கொண்டிருந் தவர், தன்னையே குட்டிக் கொண்டார். சே... ஒரு ஆணும், பெண்ணும் கைதட்டி நண்பர்களாய் பேசியதைக் கண்ட வுடன் ஜோடி சேர்க்கற சாதாரண மனிதனா நான்? ஆண், பெண், திருமணம், இவைகள் தாண்டி வாழ்க்கை இல்லையா? என்று மனதை நொந்து கொண்டு செல்லும்போதே, அம்மாவின் மடியில் கடமையை ஆரம்பித்து விட்டாள் யாழினி. சாதி நம் மனதின் சாக்கடை. ஆயினும் அதிலிருந்து வெளிவரும் மனம் வேண்டும் என்று எண்ணிக் கொண்டார் யாழினியின் தந்தை. காந்தி சொல்கிறார், “அடுத்த பிறவியில் நான் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியில் பிறக்க வேண்டும். அவர்களது வலியை உணர வேண்டும்” என்கிறார். சீனாக்காரனோ அடுத்த பிறவியில், “இந்தியனாய்ப் பிறக்க வேண்டும்” என்று சொல்கிறார். பெர்னாட்ஷா அடுத்த பிறவியில், ‘தமிழனாய்ப் பிறக்க வேண்டும்” என்று சொல்கிறார். தலை சுத்துது.

அத்தியாயம் 5

நண்பன் சங்கரின் அறைக்குச் சென்றபோது இரவு ஆகி விட்டது. ஒரு குவாட்டரில் பாதி அடிக்காமல் தூங்குவதில்லை என்று விரதம் இருப்பவன் சங்கர். அமெரிக்கப் பையில் ஏதாவது இருக்குமா! என்று தேடினான். கண்ணன் சிரித்தபடி என்ன தேடறே உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்துள்ளேன் என்று கூறி தன் பையிலிருந்து ஒரு பரிசுப் பெட்டியை நீட்டினான். மச்சி, பாரின் விஸ்கி, பிராண்டி உண்டா. நான் சாப்பிடுவதில்லை என்றபடி பரிசுப் பெட்டியை வேகமாகப் பிரிக்க கோல்டன் ரேஷியோ என்ற ஆங்கிலப் புத்தகத்தையும், அல்கமிஸ்ட் என்ற புத்தகத்தையும் பார்த்தவுடன் பெருத்த ஏமாற்றம், ஆயினும் தான் மின்னஞ்சலில் சும்மா புருடா விட்டு, இந்தப் புத்தகத்தை படிக்க விரும்பியதாகச் சொன்னதை உண்மை யென்று நம்பி, தேடி வாங்கிவந்துள்ளதை ஏமாற்றக்கூடாது என்று நினைத்து வாவ் சூப்பர். என்றான். பின் ஒரு நிமிடம் இரு என்று ஓடித்தன் விரதத்தை முடிக்க ஏற்பாடு பண்ணிவிட்டு வந்து மணிக்கணக்காய் பேசிக் கொண்டிருந்தான். அமெரிக்காவில் அப்படி இருக்கும், இப்படி இருக்கும் என்று அளந்துவிடும் அவர்கள் செட் முருகப்பன் மாதிரி இல்லை கண்ணன். ஓயாது தமிழ் பண்பாட்டின் உயர்வு பற்றியே பேசும் கண்ணனைப் பார்த்து ஆச்சரியப்பட்டான் சங்கர். இங்கே பெற்றோர் களோடு, உற்றார்களோடு நல்ல வேலையில் இருக்கும் நான் எப்படி சிகரெட், தண்ணியென்று தடுமாறுகிறேன். அரைகுறை ஆடைகளில், பரிபூரண சுதந்திரத்தில் திரிகின்ற நாகரீக அமெரிக்காவில் இருந்தும் தமிழனாய் கட்டுப்பாட்டுடன் வாழும் கண்ணன் எங்கே? நான் எங்கே? மனத்துக்குள் சிறிது சஞ்சலம். அவனுக்கு வெட்கமாகிவிட்டது. நல்லவேலை ஆங்கிலப் புத்தகங்கள் பேரை எழுதியிருந்தான். தமிழ்ப்புத்தகம் எந்தப் பேரைச்சொன்னாலும் முன்னமேயே கண்ணன் படித்திருப் பான். என்னைப் படிக்கச் சொன்னால்

நான் என்ன செய்வேன்... நானோ கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவன் என்று நொந்துகொண்டே உறங்கிப் போனான்.

சங்கர் கூடப்படித்த முருகப்பன் அமெரிக்கா போகும்போது கண்ணன் வீட்டில் உள் விருந்தாளியாக இருந்தான். அவன் மூலம் பழக்கமானான் சங்கர். சங்கருடன் முகநூல், குறுஞ்செய்தி, மின்னஞ்சல் தொடர்புகளில் இருந்தான் கண்ணன். அவர்கள் அனுப்பும் செய்திகளிலிருந்து அவனுக்குச் சமமாக ஆங்கில புத்தகங்களின் நல்ல வாசிப்பு பகுதியிலிருந்து எடுத்து ஏதாவது ஆங்கிலச் செய்திகளாக பகிர்ந்து வந்தான் சங்கர். ஏனோ? இருவருக்கும் ஒரு புரிதல்! சென்னையில் உறவினர்கள் வீடுகளோ ஏராளம். சிவகாமியின் சகோதரி, சகோதரர்கள், வீடு மடிப்பாக்கம். தந்தை ராமுவின் சகோதரர்கள் 5 பேர். இவர்கள் சைதாப் பேட்டை, போரூர், பாடி, சோழிங்கநல்லூர் மற்றும் பல்லாவரம் என்று பரந்து விரிந்தது. ஒரு வீட்டுக்குப் போனால் எல்லோர் வீட்டுக்கும் போகவேண்டும். நண்பர்கள் வீடு என்றால் பிரச்சினை இல்லை. லாட்ஜில் பாதுகாப்பு இருக்குமோ? இருக்காதோ? முருகப்பன் சொல்லிவிட்டான். மெட்ராஸ் போனால் முதல் சாய்ஸ் சங்கர் ரூம் தான். சங்கர் நல்ல பையன்தான். இருந்தாலும், தனிமையில் இருக்கும் இளைஞர்கள் இப்படி எல்லாம் இல்லாட்டி ஒரு நாய் மதிக்காது. தமிழ்நாட்டில் இது இப்போதைய ட்ரெண்ட். அதுக்காகவே இத்துணுண்டு ஊத்துனாலே... பாலையா மாதிரி... பித்த உடம்பா? தூக்கிரிச்சுனு வசனம் பேசறதுக கூட மதுபானக்கடை வாசலில் சென்று திரும்புவது வழக்கம். இப்படிப் போனா ரெண்டு டிக்கெட்கள் (பெண்கள்) இரக்கம் காட்டுங்கலாம்... இதெல்லாம்... சரவணன் சொன்னது. சரவணன் அப்பா ஒரு சாமியார். ஆனால் சரவணனுக்குத் தெரியாத பொண்ணுங்களே இல்லே...

குவாட்டர் மயக்கத்தில் சங்கர் அவனாகப் பேசியபடி இருக்கத் தூக்கம் வராமல் கண்ணன் புரண்டான். தான் வாங்கிவந்த 'கோல்டன் ரேஷியோ' புத்தகத்தை வாசித்தபின் க்ன்வில் திருவள்ளுவர் வந்தார். திருக்குறளில் 'கோல்டன்

ரேஷியோ' இருக்கு கண்டுபிடி என்று சொல்லிவிட்டு மறைந்து போனார். சங்கர் திடீரென்று சொன்னான். ''அமெரிக்கத் தமிழன் புகைப்ப தில்லை. சரக்கு அருந்துவதில்லை. கேட்டால் திருக்குறள் மறுக் கின்றது. திருக்குறள்படி வாழ்ந்தால் எப்படி இருக்கும். பிறகு நற்குணத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்தால் எப்படி இருந்திருக்கும். கண்ணனைப் போல் உயர்வு உள்ளல் வேண்டும். சங்கரின் குறட்டைச் சத்தம்தான் பிளந்தது. கண்ணன் விழித்து எழுந்தான். காலை எட்டுமணி. சங்கரை எழுப்பி குளிக்கச்செய்து தரமணி போறபோது லைப்ரரில இறங்கிக்கிறேன் என்று சொல்லித் தொத்திக் கொண்டு லைப்ரரி சென்றான், நிறைய வாசித்தான். திருக்குறள் பற்றி வ.உ.சி. குன்றக்குடி அடிகளார், கலைஞர் கருணாநிதி, அர. சிங்காரவடிவேலன், மு.வ.பெரியசாமி, காசிநாதன், கு. மோகனராசு, சாலமன் பாப்பையா... என்னென்ன படிக்க முடியுமோ அத்தனையும் எடுத்து, ஆப்பிள் நிழற்படத்தில் சிலவற்றை பதிவு செய்தான். கோவை செம்மொழி மாநாட்டு ஆய்வுக் கோவை, தேவகோட்டை, சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி - அழகப்பா பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய திருக்குறள் தமிழ் ஐகான்-2015 மாநாட்டு NCBH வெளியீடுகள், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலை வெளியீடுகள், என்று பல தொகுதிகளைப் படித்தான். மதியம் ஒரு ஆட்டோ எடுத்து அடையார் ஆனந்தபவனில் ஒரு வெஜ் பிரியாணி, காளான் ப்ரை சாப்பிட்டான். ஒரு ஆப்பிள் ஜூஸ் குடித்து விட்டு மீண்டும் ஆட்டோ பிடித்து ஆழ்வார்பேட்டைக்குப் போனான். ஆர்ட் காலரி கண்காட்சி நடந்து கொண்டிருந்தது. நட்பை பிரதிபலிக்கும் ஓவியம் ஒன்றை ஒரு கரூர் பெண் அழகாக வரைந்திருந்தாள். அதனைப் பார்த்தபடி வாங்கிக் கொண்டான். உயிர்ப்புடன் இருந்தது. எதிரில் கமலஹாசனின் வீடு. கமலஹாசனின் புதிய கட்சிக் கூட்டம் ஏதோ நடைபெறுவது போல் இருந்தது. உயரமாக, தோள்பையுடன் எழுத்தாளர் பாரதி கிருஷ்ணகுமார் கமலஹாசன் வீட்டிற்குள் செல்வது தெரிந்தது. தந்தையின் நண்பர் அவர்.

கண்ணன் வேகமாக ஓடினான். பாரதி கிருஷ்ணகுமார் கண்டு கொண்டார். அடிமட்டத்திலிருந்து வந்துள்ள நல்ல அறிவு ஜீவி அவர். அனைவரோடும் பழமைமாறாமல் பழகக்கூடியவர். அவர் போல் அன்னையையும், திருக்குறளையும், நேசிப்பவர் களைப் பார்ப்பது கடினம் என்று தந்தை ராமுவின் நண்பர் மோகன் குறிப்பிடுவார். என்ன தம்பி, எப்ப அமெரிக்காவி லிருந்து வந்தீங்க, அப்பா நலமா என்று விசாரித்தார். உயரம் ஏற ஏற தங்களையே மறக்கும் தலைவர்கள் போல் இல்லாமல்... உயரத்தில் ஒன்றுமில்லை என்று கவிபாடிய வாஜ்பாய் போல ஒருசிலர் இன்னும் இருக்கின்றனர் என்று கண்ணன் நினைத்தான். 'பாரதி அருந்தவப்பன்றி' என்ற உங்கள் ஆய்வு நூலைப் படித்தேன். ஆகா... எப்படிப்பட்ட புத்தகம்!!... என்று கண்ணன் சொல்ல... ஆச்சரியப்பட்டார் பாரதிகிருஷ்ணகுமார். எனக்கு அவசர மீட்டிங் ஒன்று. தலைவர் உள்ளே இருக்கிறார். இரவு வீட்டுக்கு வாயேன் என்றார். இல்லைப்பா... ஒரு வேலையா வந்தேன். பிறிதொரு நாள் வருகிறேன். "உங்கள் ஆய்வுப் பாணியில் நானும் திருக்குறளில் ஆய்வு செய்கின்றேன்; வாழ்த்துங்கள்" என்றான் கண்ணன். நிச்சயம் தம்பி, திருக்குறளை படித்தாலே வாழ்வில் உயர்வது திண்ணம். அதில் ஆய்வென்றால் சொல்லவே வேண்டாம். தொடர்ந்து செல் என்று வாழ்த்திவிட்டு விரைந்தார். இன்றைய இளைஞர்களுக்கான... மாடல் எழுத்தாளர்களில் அவரும் ஒருவர். மீண்டும் வடபழனி சென்று முருகன் கோவில் தரிசனம் செய்து கொண்டு யாழினி வீட்டிற்கு ஆட்டோ பிடித்து போனான் கண்ணன். மாலை சுமார் 6.30 மணி பழைய மகாபலிபுரம் ரோடு பகுதியின் உள்ளே அடுக்குமாடிக் கட்டிடங்களில்... ஒரு அபார்ட்மெண்ட். ஒருபக்கம் சிறுவர்கள் சைக்கிள் ஒட்டிக்கொண்டிருந்தார்கள். ஆட்டோகாரர்களுக்கு செக்யூரிட்டியிடம் நம்பர் எழுதி உள்ளே வெளியே வந்து சென்று கொண்டிருந்தனர். நீச்சல் குளம் ஒன்று ஆளின்றி இருந்தது. பூங்காவில் தாத்தாக்களும் பாட்டிக்களும் குழந்தைகளுடன்... அம்மாக்கள் எல்லாம் டிவி சீரியல்களில்... ஒருசில இளைஞர்கள் டவுசர் போட்டுக் கொண்டு சிமிண்ட்

தரையில் நடைபயில, பின்னாடியே சில கல்லூரி மாணவிகள்... செல்போன் பேசிக்கொண்டே நடக்க... சி-3 வீட்டைக் கண்டுபிடித்து யாழினி வீட்டிற்குள் சென்றான் கண்ணன். எல்லோரும் ஓடி வந்து வரவேற்றார்கள். சாப்பாடு டேபிளில் டெண்டர் கட் நாட்டுக் கோழி புதுவடிவில். உருண்டை வடைகள் போல் கோலா உருண்டைகள், சுட்டு அடுக்கப் பட்டிருந்தது. அரைமணித் துளிகள் முன்தான் சுட்டது என்று காட்டியது. சூடான கோலா உருண்டைகளைக் கொரித்தபடி ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு, யாழினி மயக்கத்தில் பேசினாள்.

"பிரியாணிக்கும் போதையுண்டுண்ணு" ஒருவர் பேசும் பதிவு முகநூலில் பார்த்த ஞாபகம் யாழினியைப் பார்த்தவர்களுக்கு வராமல் இருக்காது. மதியம் பிரியாணி சாப்பிட்டுத் தூங்கியவள் மாலை 5 மணிக்கு எந்திரிச்சு மீண்டும் பிரியாணி சாப்பிட்டுப் படுத்து... 6.00 மணிக்கு எந்திரிச்சு குளிப்பதற்குச் சமமாய் ஏதோ ஒன்று பண்ணி உட்கார்ந்திருந்தாள். தாத்தா, உள்ளிருந்து வந்தார். 3 அறை வீடு. வீட்டை சுத்திக்காட்றோம் வாங்க என்று யாழினி அப்பா ஒரு ரவுண்ட் கட்டி பால்கனியில் நிறுத்தினார். மூன்று பக்கத்திலும் தண்ணீர் இருந்தது. ஏரிக்கரைச் சாலை என்று பெருமைப்பட்டுக் கொண்டார். சவுக்கு நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டு வயல்கள் காலி இடங்களாகி, வீடுகளாக நிற்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தான். தான் கொண்டுவந்த பரிசை யாழினியிடம், கொடுக்க, சின்னப் பிள்ளை போல் உடனே பிரிக்க அவள் எத்தனிக்க, வேண்டாம்... இப்போ வேண்டாம்... நான் போன பின் பிரித்து பார்த்துக்கோ & என்று இரண்டு பேரும் விளையாட... அம்மா வந்து அதை வாங்கி உள்ளே வைக்கப் பறித்தாள். பரிசுப் பெட்டி தனியாய் விழ, அந்த பெயிண்டிங் வரையப்பட்ட துணியுடன் பைவ் லவ் லாங்குவேஜஸ் என்ற புத்தகமும் கீழே விழுந்தது. சாரி என்று அந்தப் புத்தகத்தை எடுத்து விட்டு அந்த ஓவியம் வரைந்த துணியைப் பார்த்தார். ஆகா... என்ன அருமையான காட்சி, ஔவையும் அதியமானும்

உயிரோவியமாக. ‘‘கரூரிலிருந்து ஒரு மாணவி வரைந்து காட்சியாக்கி வைத்திருந்த அந்தத் துகில், கூறிய கதைகள் ஆயிரமாயிரம். அரசன் என்ற நிலையில் தனக்குக் கிடைத்த ஒவியமான நெல்லிக்கனியை தமிழுக்கு ஒவியமான நூல்களை இயற்றிய நட்புக்கு இலக்கணமாக விளங்கிய பெண் புலவர் ஔவைக்கு பரிசளித்த அந்த ஒப்பற்ற தருணத்தை ஓவியமாக்கிய அந்த ஓவியரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே சமயம் அதனைத் தேடிப்பார்த்து பரிசு வழங்கிய கண்ணனின் புத்திசாலித்தனம் எங்கே! இப்பேற் பட்ட உயர் சிந்தனை கொண்ட புத்திசாலி நண்பனைத் தேர்ந்தெடுத்த யாழினியின் புத்திசாலித்தனம் எங்கே!

ஆயினும்... அத்தோடு அது என்ன புத்தகம் ‘ஐந்து காதல் மொழிகள்’ இதனையும் கொடுத்துள்ளானே? ஒரு வேளை சென்னை வந்தவுடன் இவனும் சராசரி இளைஞனாகி விட்டானோ? என்று தந்தை நினைக்க, கூடவே ஒரு நோட்டும் இருந்ததை அம்மா பார்த்துவிட்டாள். ஏதோ உணர்ச்சி வசப்பட்டு ‘லவ் லெட்டர்’, இல்லை ‘லவ் நோட்’, இல்லை, இல்லை ‘லவ் நோட்டுப் புத்தகம்’ ஒன்றை ராத்திரி பகலா எழுதி வைத்திருக்கின்றான். இதை யாரும் படிச்சு பெரிய பிரச்சினை ஆகப்போகுது என்று அந்த நோட்டை மறைக்க முயல யாழினி, சிம்மமென வேகமாகப் பாய்ந்து அன்னையிடமிருந்து பிடுங்கினாள்.

கண்ணன் சொன்னான்... யாழினி... உனக்கு வேலை கொடுத் திருக்கேன்... இந்த புத்தகம்... ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தாய்லாந்து, கனடா, அமெரிக்கா ஆகிய பகுதிகளில் மில்லியன் கணக்காக விற்றுள்ளது. இந்தியாவிலும் சைனாவிலும் அதிகப் பிரதிகள் விற்றுள்ளன. எனது திட்டத்தின் மிக முக்கிய பகுதி இது. ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் வாங்கியுள்ளனர். எனவே தான் இதனை நான் தேர்ந்தெடுத்துள்ளேன். நாம் பேசியபடி நம் நால்வருக்கும் வேலை செய்யும் நேரம் துவங்கியாச்சு. சிங்கம் கவுண்ட் ஆரம்பித்து விட்டது என்ற விளம்பரம்போல் கர்ச்சித்தான். இந்தப் புத்தகத்தில் உள்ள செய்திகள் திருக்குறளில் இருக்கின்றதா என்று தேடு.

உளவியல் மாணவியான நீ இதனைத் தேடி ஒரு மாதம் அல்லது 30 நாட்களுக்குள் தந்துவிடு என்றான். இரண்டும் ஒன்று தானே என்றார் தாத்தா... சிரித்தபடி கண்ணன் சொன்னான். இந்தப் புத்தகத்தில் உங்களின் பங்கு நிறைய. காதல்பத்தி இன்றைய இளைஞர்களைவிட காதல் வாய்ப்பே இல்லாத நேரத்தில் காதலித்துக் கலியாணம் செய்து கொண்ட தாத்தா... உங்களிடம்தான் நாங்கள் காதல் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. யாழினி தாத்தாவை விடாதே... பிடிச்சுக்கோ... என்றான். ''செம கலாய்'' என்றாள் பாட்டி, இப்போதான் அம்மாவுக்கு விளங்கிச்சு ட்யூப் லைட் என்று கிண்டலடிச்சார் அப்பா... அம்மாவின் சர்ப்ரைஸ்... சப் என்று ஆனது. ஒகே கண்ணன். டிபன் ரெடி என்று அனைவரும் வாழை இலை போட்டு, கேசரி, உளுந்தவடை, தோசை, இட்லி, நாட்டுக் கோழி, கோலா உருண்டை, மீன் குழம்பு, தயிர்ச் சாதம், ஊறுகாய், மீன் வறுவல் என்று பரிமாற... கல்யாண மாப்பிள்ளை விருந்து போல... ஏம்மா இவ்வளவு... இதுக்கு பேறு டிபன்னாம்மா... என்ன கொடுமை இது கண்ணன்... என்றான். சரிசரி... யாழினி மாப்பிள்ளை வரும்போது இதைப் போல டபுள் கிடைக்கும் போல... என்று கண்ணடித்தான்... டேய் உதப்பேன்... என்று அவன் காதைத் திருவியபடி சூப் டம்ளரை நீட்டினாள். யாழினி, ஒரு வழியா யார் மனமும் கோணாம சாப்பிட்டுட்டேன். ஆனால் இது செறிக்க நிறைய நடக்கணும் என்று கூறியபடி கையைக் கழுவினான். யாழினி ஒரு துண்டை நீட்டிவிட்டு, ஜாகர்ஸ் போட்டு வருகிறேன் என்று ரூமுக்குள் ஓடினாள். இரண்டுபேரும் கீழே வந்து அபார்ட்மெண்டை வலம் வந்தனர். கண்ணன் கூறினான். இந்தப்புத்தகத்தை வாசித்தேன். மிக எளிமையாகவும், பயனுள்ள தகவல்களையும் கொடுத்துள்ளார். நம்மைப் போன்ற இன்றைய இளைஞர்கள் படிக்க வேண்டிய புத்தகம். இதில் உள்ள உளவியற் செய்திகளை கண்டு அறிந்து, அவை திருக்குறளில் இடம் பெற்றுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும். ஏற்கனவே என் நண்பன் ஒருவனிடம் 'தங்க விகிதம்'

என்ற புத்தகத்தில் உள்ள செய்திகள் திருக்குறளில் உள்ளதா என்று ஆராயச் சொல்லி யுள்ளேன்.

பூங்கொடி, பூங்கோதை இருவரும், முறையே இரண்டு விசயங்களைத் தேடுகின்றனர். ஒன்று கணிதம் மற்றொன்று கல்வியயல் தொழில்நுட்பம். என்னோடு சில அறிவியல் கருத்துக்கள் குறிப்பாக இயற்பியல் கருத்துக்களைக் கண்டுள்ளேன். அதன் படிகளை ஆராய்கின்றனர். ஒரு பகுதியை நாகலிங்க ஐயா திருத்திவிட்டார். சோலையூர் சென்று 9.30 மணிக்கு வாங்கி விட்டு அப்படியே தாம்பரம் சென்று 11.00 மணிக்கு வைரம் சொகுசு ஊர்தி பஸ்ஸில் காரைக்குடி செல்கின்றேன் என்று கண்ணன் சொல்ல... செய்வோம் என்று யாழினி சொல்ல... இன்றும் 10 நிமிட நடைதான் என்று ஃபிட் பிட்ஸ் சொல்ல... வேகமாய் நடந்தார்கள். சரியாய் ஒன்பதரை மணி. நாகலிங்க ஐயா, மனைவி கொடுத்த பாலின் நிறம் பனங்கல்கண்டு கூடவே ஏலக் காய் தட்டி போட்டிருக்கின்றார் என்று மூக்கு கண்டறிந்தது. பாலை உறிஞ்சும் போது ஐயாவின் கண்களை ஆராய்ந்தான் கண்ணன். நாகலிங்க ஐயா, ஒரு துணிப்பையில் அவன் கொடுத்த நோட்டையும், குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை யிலிருந்து நான்கு தொகுதிகளையும் சேகரித்துக் கொடுத்தார். தம்பி, படித்துப் பார்த்தேன். அத்தனையும் புதுமை... புதுமை யான அணுகுமுறை... கேட்காத செய்திகள். தமிழாசிரியர்கள் எங்களுக்குத் தோன்றாத செய்திகள். சில சமயம் நாங்கள்தான் இதன் பெருமையை உணராமல் இருந்திருக்கின்றோம் என்ற கருதுகின்றேன். சில ஒற்றுப் பிழைகள் திருத்தியுள்ளேன். சில விளக்கங்கள் சரி. ஆனால் திருக்குறள் எடுத்து எழுதும்போது சீர் பிரித்தலில் பிழை இருந்தது. அதனையும் திருத்தியுள்ளேன். கருத்தில் பிழை இருப்பதாகக் காணும் அளவிற்கு எனக்கும் அறிவியல் தெரியாது. ஆயினும், சார்பியல் தத்துவம் பற்றி நீ எழுதியுள்ளது, நானோ தொழில் நுட்பம் பற்றிய கண்டு பிடிப்புகள் குறிப்பிடத் தக்கவையாய் அமைகின்றன. உன் முயற்சி நிச்சயம் வெற்றி பெறும். நல்லா வருவ... முதன் முதலாய் நான்கு இளைஞர்கள் இணைந்து தமிழில் புத்தகம்

எழுதுகிறீர்கள். இதுவே புதுமையான முயற்சி. திருக்குறள் என்ற தேரை இழுக்கும் சக்கரங்களும், கயிறுகளும், மனிதர்களும் இயந்திரங்களும் சேர்ந்த கூட்டு முயற்சி இது.

'ந'ப்போல் வளை' என்ற தமிழனின் அற்புதமான சிந்தனைக்கு உயிரூட்டும் முயற்சி உன்னுடையது. நிச்சயம் வெற்றி பெறும் என்று வாழ்த்தினார். காலைத் தொட்டுக் கும்பிட்டு வாங்கிக் கொண்டான். தமிழ்நாட்டில் நேற்று முதல் பிளாஸ்டிக் தடை. அதனால் பழைய துணிப்பையில் புத்தகங் களை வைத்திருந்தார். நாகலிங்க ஐயா, செட்டிநாட்டுப் பக்கம் எம்ப்ராயிடரி துணி வாங்கி அழகாகவும் நேர்த்தியாகவும் செய்யப்பட்ட அந்தத் துணிப்பை கொசுவம் வைத்து ரிப்பன் கட்டிய பெண் மாதிரி அழகிய பூக்களுடன் தெரிந்தாள் கண்ணனுக்கு, உள்ளே சிங்காரி திருக்குறள். சங்கர் போன் செய்தான். *11.00* மணிக்கு வைரம் வண்டி குரோம்பேட்டை நெருங்கி விட்டது. விரைவாக ஆட்டோவில் ஏறி 'ஹிந்து மிசன்' என்றான். தாம்பரம் நோக்கி ஆட்டோ பறந்தது. ஊபர் வந்து உங்களுக்கு சிரமம் உண்டாக்கிருச்சா! என்று கேட்டான் கண்ணன். உண்மைதான்... ஆனால் இப்ப நாங்களும் கொஞ்சம் கொஞ்சமா... இந்தச் சவாலைக் கடந்து நிற்கப் பழகிட்டோம்.

ஷேர் ஆட்டோ இருக்கு. இல்லாத இடத்திற்கு ஊபர், ஓலா பக்கத்தில் ஊபர் செல்லாத இடத்தில் சின்ன சந்துகளில் வேகமாகச் செல்ல ஆட்டோதான் சாய்ஸ். எந்த தாமதமும் வேண்டாம் என்றால் எங்க மாதிரி ஆட்டோக்கள் இருக்கு. ரெம்ப வெயிட் பண்ணவேண்டாம். கொஞ்சம் நியாயமா வாங்க ஆரம்பிச்சிட்டோம். நியாயமா இருந்தா தொழில் நல்லாயிருக்கு என்றபடி மேம்பாலத்திற்குக் கீழே வந்து ஹிந்து மிஷன் மருத்துவமனை எதிரில் இறக்கிவிட்டார். சரியான தொகையை வாங்கிக்கொண்டு பறந்தார். ஆட்டோ டிரைவர், வைரம் சொகுசு பேருந்து *11.10*-க்கு வந்தது. மேல் படுக்கை வசதி பதிவு செய்திருந்தான். ஏறிப்படுத்தான். ஒரு தண்ணீர் பாட்டில் கொடுத்தார் வைரம் நடத்துனர். கல்லூரி மாணவன் போல் தெரிந்தான், ஜீன்ஸ் போட்டு சினிமா ஸ்டார் மாறி

இருந்தார். முனைவர் பட்ட ஆய்வு மாணவர் பகுதிநேரமாக பணிபுரிகிறார் என்று நினைத்தான். அநேகமாக பொறியியல் படித்து முடித்து வேலை தேடும் இளைஞன் அல்லது வண்டியின் முதலாளி வீட்டுப் பையன்... அல்லது பகுதி நேர வேலை செய்யும் ஆராய்ச்சிப் பட்டயம் பெற்ற மாணவன்... இப்படி ஒருவனாக இருக்க வேண்டும்... ஆமாம் ஆராய்ச்சி முடித்துவிட்டு பல லட்சங்கள் செலவழித்தால் தான் ஆசிரியர், வேலை என்று வெளிப்படையாக எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். இதில் நேர்மை, நாடு. மோழி என்று பேசிக்கொள்ளும் அரசியல் வாதிகள் லஞ்ச ஒழிப்புத்துறை, சி.எம். செல் என்ற பல துறைகள் வேறு செயல்படுவதாகவும், அவர்களுக்கு நாம் தெரிவித்தால் பணம் கொடுக்காமல் காரியம் நடக்கும் என்ற நம்பிக்கை வேறு. கருப்புப்பணம் ஒழிந்தால் இந்தியா வல்லரசாகும் என்று பாரதப் பிரதமர் பேசுகின்றார். நல்ல கூத்து ஒன்று சிறப்பாக நடந்தேறி நான்கரை வருடங்கள் ஆகிவிட்டது. அது பண மதிப்பீடு விலக்கம்.

பெட்ரோல் விலை குறைவடைந்தாலும் விலை குறைக்காமல் பெரும்பணம் ஈட்டி வைத்துள்ள மத்திய அரசு... இந்தப் பணத்தை வைத்து நிறைய வேலை வாய்ப்பை பெருக்க எந்த ஒரு தடையும் இருக்கப் போவதில்லை. ஆனால் அதைப்பற்றி யாரும் பேசுவதில்லையே. உலகத்தின் சொர்க்கமாக இருக்க வேண்டிய இந்தியா... ஏன் வளரும் நாடு நிலையிலேயே தேய்கிறது. ரொம்பக் கஷ்டப்பட்டு ஆட்சி செய்யும் அரசுகள்... மாறணும் என்றபடியே சிந்தனையுடன், நன்றி மெசேஜ்களை சங்கருக்கும், முருகப்பனுக்கும், யாழினி, தந்தைக்கும், நாகலிங்க ஐயாவிற்கும் அனுப்பி விட்டுக் கண்ணயர்ந்தான்... அமைதியாய் அருமையாய் ஓடியது சொகுசுப் பேருந்து வைரம்... கடினமான வைரம்... இங்கே வைரம் கிராபைட் போல் மென்மையாய் வழுக்கியபடி செல்கிறதே... ஆச்சரியக் குறி என்ற புதுக்கவிதை அவனுக்குள் வந்து போனது. கனவில் வளர்ந்த இந்தியா பிரமிப்பாய் தெரிந்தது.

அத்தியாயம் 6

காரைக்குடி காலை நேரத்தில் கண் விழித்திருந்தது. ஆங்காங்கே கணவன், மனைவியர் நடைபயின்று கொண்டிருந் தார்கள். வயதானவர்கள் டீ சர்ட், டவுசருடன் நடந்து கொண்டிருந்தனர். அமெரிக்கா, கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியாவில் அவர்களோ, அவர்களது குழந்தைகளோ வசிக்கின்றன என்பது அவர்களைப் பார்த்தால் தெரியும். கல்லூரிச்சாலையில் நடந்தே வீட்டிற்குச் செல்லலாம். அப்பா சொல்லுவார். ஆரிய பவனில் ஒரு காபி சாப்பிட்டுவிட்டு ஒரு நடை நடப்பவர்கள் அதிகம், அப்பாவின் நண்பர்கள் 3 பேர் நடைபயின்றதில் 6 மாதத்தில் 5 கிலோ கூடி விட்டார்களாம். டாக்டரிடம் போய் காண்பித்ததற்கு, டாக்டர் ஒரு 3 மாதம் காலையில் நடக்காதீர்கள் என்று கூறினாராம். ஏனென்றால் காபியை சாப்பிட்டு நடைப்பயிற்சி சென்று கதைத்து விட்டு மீண்டும் ஒரு சாம்பார் வடை, தயிர் வடை, தேநீர் என்று தினமும் காலையில் ஆரியபவனில் சாப்பிட்டார்களாம். கண்ணனும் காபியை குடித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தான். ராஜன் கடையில் ஒரு தமிழ் இந்து வாங்கிக்கொண்டான். நடைபயிற்சி என்று சொல்லி ராஜன் கடையில் சிகரெட் பிடிப்பவர்கள் அதிகம். அடுத்த மாசம் கடை வேறு இடத்திற்கு மாற்றுகிறேன் சார் என்றார் ராஜன்.

காலை பத்து மணி, கால் வந்தது. மனம் என்று ஒரு படம் பார்த்தேன். இன்னிக்கு விஜய் டீவிப் பாரேன். நாகர்ஜுன் அமிதாப் வர்றாங்க, என்றான்...

இரண்டு விஷயம் அதில் ஞாபகம் வந்தது. அந்த டைரக்டர் • நீ ரசித்த புத்தகமான 5 காதல் ரகசியங்கள் நூலை ரசித்துப் படித் திருக்கிறார். திருவாசகத்தைப் படித்திருக்கிறார். திருக்குறளைப் படித்திருக்க வாய்ப்பு உள்ளது.

நிச்சயம் நானும் பார்க்கிறேன். படம் பார்த்து விட்டு, அடடா உலகம் முழுதும் அறிஞர்கள், புத்திசாலிகள் நிரம்பி

யுள்ளார்கள். ஆனாலும் ஒரு சிலரே அதைப் பயன்படுத்து கின்றார்கள். சாப்மேன் ஆகட்டும், 'மனம்' படத்தின் டைரக்டர் ஆகட்டும், தாங்கள் படித்ததை தங்களைப் பாதித்ததை உணர்ந்து அதனைப் பயன்படுத்துகின்றார்கள் என்றான் கண்ணன். படத்தை பார்த்தவுடன் நீ சொன்ன மாதிரியே மாண்டு மாண்டு மீண்டு மீண்டு மன்ன நின்னை வணங்கவே - என்ற திருவாசக வரிகள் கொஞ்சம் மாறி வந்துள்ளது. யாழினி அடிக்கடி சொல்வாயே, இன்னும் சிலர் திருக்குறளை பயன்படுத்துகின்றனர். அது உண்மைதான். நீ இதனையே உன் கட்டுரையில் பயன்படுத்தி ஒரு 'பவர்பாயிண்ட்' பைல் ரெடி பண்ணி அனுப்பு, 'என்ஜாய்...' என்றபடி போனை வைத்தான்.

மாலையில் பூங்கோதையும், பூங்கொடியும் வாட்ஸ் ஆப்பில் கதைத்தார்கள். நான் ஒரு விஷயம் கூறுகின்றேன். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற சொல் இன்றைக்குத் தமிழனுக்கு பொருந்தாது. அதோடு மற்றும் அல்லாமல் இலங்கையில் சிங்களர்கள் தானே நம்மை புறக்கணித்தனர். ஆரியர்கள் தானே நம்மை சாதிவாரியாகப் பிரித்து உளவியல் ரீதியாக, மனோ ரீதியாக நம்மைத் தாக்கினார்கள். அன்று விவாதம் நீடித்தது. கண்ணன் சொன்னான் ஒரு வகையில் அது உண்மைதான் என்று இப்பொழுது எனக்குத் தோன்றுகின்றது, அண்ணாதுரை, பாவாணர், பாரதி, பாரதிதாசன், முடியரசனார் என்று பல பெரியோர்கள் அவற்றைப் படைப்புக்களாய் ஆக்கியுள்ளார் களே. இல்லாத ஒன்றுக்கு ஏன் இத்தனை போராட்டம் என்று சாதிச் சண்டைகளை ஔடுக்க இளைஞர்கள் சந்திக்க வேண்டும்.

வெள்ளைக்காரத் திருடர்கள் நம் நாட்டைக் கொள்ளை கொண்டது உண்மைதானே, தீதும் நன்றும் பிறரிடமிருந்து தானே வருகிறது. அரசின் கொள்கை முடிவுகள் எத்துணை குடும்பங்களை மாற்றத்திற்கு உள்ளாக்கின. பொறுப்புக்களில் இருப்பவர்கள் பண மோகத்தில் பைத்தியக்காரராகப் போனதால், பல லட்சம் கோடிகள் கருப்புப் பணமாக்கி மக்கள் இன்று ஏழையாகிப் போயினர். அவளது மனம் தீவிரமாக சிந்தித்தது.

தமிழன் அறம் பெரியாரைப் போற்றுவதும் இலமே... சிறியாரை இகழ்வதும் இலமே. ஆனால் இன்று பணப் பைத்தியக்காரனாகப் போனதால், மற்ற நாட்டினரைப் பார்த்து, தன் நிலை மறந்து போனான். இப்ப அவன் பணப்பைத்தியம் பிடித்து அலைகின்றான். அந்நிலை மாறவேண்டும்.

பளிச்சென்று அவன் கண்கள் பனித்தன. அன்று ஒருநாள் ரோட்டில் போன சேட் அந்தக் காலத்தில் நடைபயின்ற பணக்காரர்களில் ஒருவர் தனக்குப் பிறந்தநாள் என்று சொல்லி அனைவருக்கும் ஒரு ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு வைர வியாபாரி. பசங்க நின்னு வாங்கிக்கிட்டு இருக்க, கண்ணனின் அப்பாவும் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு சென்று, போகையில் 10 காசுக்குத் தேங்காய்ச்சில், வெள்ளக்கட்டி, பொட்டுக்கடலை வாங்கித் தின்னுபுட்டு, 90 காசை சட்டைப் பையில் வைத்தபடி வீட்டில் ஆணியில் மாட்டிவிட்டு பள்ளிக்கு சென்று விட்டாராம். அவங்க அம்மா சட்டையைத் துவைக்க எடுத்த போது விழுந்த சில்லரைகளை அள்ளி, அப்பாவிடம் கொடுக்க, அன்று மாலை அவரது அப்பா நையப்புடைத்து விட்டாராம். ஒரு ரூபாயைக் கொடுத்து கோவிலில் கொண்டு போடு, என்று சொல்லிவிட்டு அன்று இரவு தன்னோடு படுத்துக்கொண்டு, தான் அடித்த இடங்களைத் தடவிக் கொடுத்தபடி உறங்கினார் என்று சொன்னது நினைவில் வந்தது. 'ஏற்பது இகழ்ச்சி' என்று அம்மா எழுதச் செய்து, அடுத்தவர்கள் பணம் நமக்கு எதுக்கு 'உழச்சுக் கொண்டு வா', 'எனக்கு சந்தோசம்' என்று சொன்னதோடு நிற்காமல் ஒரு எவர் சில்வர் கடையில் சம்பளம் பேசி சாயந்திரம் 2 மணி நேரம் வேலை செய்யச் சேர்த்து விட்டாராம். மே-மாதம்·லீவுகளில் அந்தக் கடையில் முழுநேர வேலை பார்த்தார் அப்பா. வார லீவு நாட்களில் நோட்டுத் தைத்துக் கொடுத்தேன் என்று அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. இன்றைக்கு திருடி செயிலுக்குப் போகும்போது டாட்டா காண்பித்துவிட்டு டிவி-க்கு போஸ் கொடுத்துகிட்டுப் போறான். கையூட்டு பெறாமல் வீட்டுக்கு சென்றால் சோறு கிடையாது என்ற நிலை இப்போது 'ஏற்பது இகழ்ச்சியை' மறந்தான். அவதிப்படு

கின்றான். 'தீதும் நன்றும் பிறர் தர வரும், நாம் அனுமதித்தால் என்பதை உணர்ந்தேன்' என்ற தந்தையின் சொற்களும் இந்த யாழ் பெண்களின் சொற்களும் ஒன்றுதான் என்று கண்டு கொண்டான்.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்ற கொள்கை உலகத்தை சாதாரண சந்தையாய் பார்க்கிறது, நாம் பொருள் சேர்க்கையே வாழ்க்கை என்று வாழும் போது, அதைச் சார்ந்து வாழும் ஒரு சிலர்க்குத் துன்பம் வருவது இயற்கையன்றோ?... யோசித்தபடி சிறிது கண்ணயர்ந்தான். பழையன கழிதலும் என்ற பொன் மொழியின் பொருளும் மாறுபடுகின்றது. மாலை எப்போ தாவது ஒரு தம் அடிப்பது அவன் வழக்கம். மது அருந்துதல் அமெரிக்காவில் சகஜம். ஆயினும் இவனுக்கு அதன் வாடை பிடிக்கவில்லை. இரண்டாவது, அதற்கு அவனுக்கு நேரமில்லை. சில நண்பர்கள் இரண்டு வரி படித்தாலும் டென்சன் ஆகி இரவு அதை ரிலீஷ் பண்ண ஒரு பீர், பரீட்சை ஆரம்பித்துவிட்டால் பேச்சலர்ஸ் பார்ட்டிபோல ஒரு விருந்து என்று வாழ்வதும், அதுவே சந்தோசம் என்று சொல்வதையும் கேட்டிருக்கின்றான். அவனும் கூட நண்பர்கள் அழுத்தத்தில் ஒருமுறை குடித்துவிட்டு பின் பட்ட அவஸ்தை சொல்லி மாளாதது. தந்தை ரொம்ப ஃபிரண்ட் போல் பழகுவதால், அவனுடைய நண்பர்களுக்கும் தண்ணி போடுறது ஒரு ஹீரோவுக்கானது என்ற நினைப்பே இல்லை. இது எல்லாம் 'ஒரு மனநிலை' என்பான் கண்ணன். நம்ம சினிமாக்கள் அம்மாக் களிடம் 'மது திருடர்கள் குடிப்பது' என்று சொல்லி வைக்க, அவர்கள் இந்தப் பொருட்களைத் தீவிரமா எதுக்க அதன் எதிர் வினைதான், இன்றைய நிலை என்று நினைத்துக் கொள்வான். நம்ம அம்மாவும் ஒரு ஃபிரண்ட்தான். அப்பாவை நன்றாகப் புரிந்து வைத்துள்ளாள்.

கல்யாணமான புதிதில் அப்பாவும், அப்பப்ப பீர், விஷ்கி குடித்தாராம். ஒரு முறை ஒரு பார்ட்டி முடிந்து காரில் வரும் போது, அந்த டிரைவரின் பார்வை ஒரு மாதிரி இருந்தாகச் சொன்னதிலிருந்து தந்தை வீட்டிலேயே பாட்டில் வைத்து குடித்ததாகவும், அம்மா அளவாக, அவர் நிதானம் தவறாத

அளவு என்ன என்பதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துக் கொடுத்து அவரைக் கட்டுக்குள் கொண்டு வந்த கதையை கண்ணனுக்குக் கூறுவாள். ரொம்ப சுவாரசியமாக இருக்கும். சிவகாமி பார்க்க ஒண்ணும் தெரியாதவள் மாதிரி இருந்தாலும், அவளுக்குத் தெரியாத விசயமே இல்லை. திருக்குறள் போல் சுருக்கமாய் பேசினாலும் அவள் பேச்சு ஆழமாக இருக்கும்.

ஒரு படத்தில் ஹீரோ கோபத்தில், அது தணிக்க ஒரு ஃபுல் பாட்டிலைத் தலைகீழாய்க் கவுத்தி காலி செய்வார். அம்மா சொன்னாள் அது அறை பாட்டிலா காண்பிச்சாக்கூட நம்பலாம். இப்படி ஃபுல் குடித்துவிட்டு அவன் சண்டைவேற போடுறானா? நம்ப முடியுமா. ஆனாலும் அதுக்குப் பையன்க காட்டுற வரவேற்பைப் பார்க்கணும். முட்டா பசங்க! என்று அம்மா சொல்வாள். படத்திலே கதையில்லாட்டாலும் இப்படிப்பட்ட லாஜிக் இல்லாம ரீல் உடராங்க பாருங்களேன் என்பார். அப்பா, ரசித்துச் சிரிப்பார். அதுக்குப் பெயர்தான் புனைப்படைப்பு என்பார். பெண்கள் தங்களின் மனநிலையை சீர்கொண்டு வர பாட்டிலின் உதவியை நாடினால் என்னாகும்? திருக்குறட்படி வாழ்பவர்கள் மதுவை நாடுவதில்லை. ஆன்ம பலத்தைக் குறைப்பது மது.

அத்தியாயம் 7

தன் பையிலிருந்து நோட்டை எடுத்தான். நாகலிங்க ஐயா திருத்திக் கொடுத்த கட்டுரையில் சில இடங்களில் மேலும் விளக்கம் தருக என்று கோடிட்டிருந்தார். அந்த இடங்களில் அதிகமாக நுட்பமான அறிவியற் கருத்துக்கள் இருந்தன. ஆயினும் அனைவர்க்கும் விளங்கும் வண்ணம்தான் எழுதி யிருந்த பகுதிகளில் பாராட்டுக் குறிப்புகளும் இருந்தன. ஒரு கட்டுரையை எப்படித் திருத்துவது என்பதில் அவர் நிபுணர். ஆய்வு செய்தது போல் இருந்தது. லீவு முடிந்து விட்டது.

அப்பா, அம்மா இந்தியாவிலேயே இனி இருப்பார்கள். அப்பா காரைக்குடியில் தங்கி இலக்கியப் பணிகளையும், சிறிய

புத்தகக்கடை ஒன்றை நடத்திக்கொண்டு தேவைப்பட்டால் அமெரிக்கா வரலாம் என்றும் முடிவெடுத்து விட்டார்கள். ட்ரம்பை நல்லவனாக்கும் தலைவர்கள் வருங்காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக மாறவும் வாய்ப்பு உள்ளது. மதியாதார் வாயிலை மிதியாதே, நல்லா சம்பாரிச்சாச்சு, இனி நிம்மதியாக பிறந்த நாட்டின் மண் வாசனையோடு இருப்போம். கண்ணன் இறுதியாண்டு முடித்தவுடன் எங்கே வேலை செய்ய விரும்புகின்றானோ அங்கே இருக்கட்டும் என்று கணவனும், மனைவியும் திட்டமிட்டு அரங்கேற்றி விட்டனர்.

ராமு திருச்சி ஏர்போர்ட்டில் கண்ணனிடம் தன் கடன் அட்டை வங்கியின் முகவரி, வீட்டின் விலாசமடங்கிய முக்கிய குறிப்புக்கள் அடங்கிய நோட்டையும் கொடுத்தார். போனில் பேசிக் கொள்ளலாம். எப்போது அம்மா, அப்பா வேணும் என்று என்று நினைக்கிறாயோ அன்று கூப்பிடு. வருகிறோம் என்று சொல்லி அனுப்பிவைத்தனர். அம்மா, அப்பா காலில் விழுந்து கண்ணில் ஒற்றிக்கொண்டு விடைபெற்றான் கண்ணன்.

டெல்லி சென்று, டொரண்டோ சென்று, பின்னர் தங்கள் ஊருக்குப் பயணம் செய்ய வேண்டும். 13 மணி நேரம் தொடர்ந்து பயணம். குளிர்பானம், நொறுக்குத் தீனி சில உணவுப் பொட்டலங்கள், 12 மணி நேரம் இத்தனையும் சாப்பிட்டாச்சு, சிறு நடை, 2 தமிழ்ப்படம் 1 ஆங்கிலப்படம் என்று பார்த்து ஓய்ந்து கண்களை மூடினான்.

கண்கள் சொருக உறங்குகையில் அவரது இந்திய நாட்களின் ஒரு நிகழ்வு வந்து போனது. புதுச்சேரிப் பல்கலைக்கழகத் திருக்குறள் கருத்தரங்கம், கண்ணனும் திருக்குறளில் அறிவியல் செய்திகள் என்ற தலைப்பில் ஒரு 5 குறட்பாக்களைத் தேர்வு செய்து, நாகலிங்க அய்யாவின் ஆலோசனைப்படி மெருகேற்றி ஒரு கட்டுரை எழுதி அனுப்ப அது ஏற்கப்பட்டது. நிறைய கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. திருவள்ளுவர் சிலைக்கு மாலை. ஊர்வலம், திருவள்ளுவர் கழகங்கள் அறிமுகம்,

சுகிசிவம் பேச்சு... என்று களை கட்டியது மாநாடு. கருத்தரங்க அறையில் புதுச்சேரி பேராசிரியர் ஒருவர் தலைமையில் கட்டுரை வாசிப்பு துவங்கியது. கண்ணனின் கட்டுரைக்கு முன் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து வந்த தமிழ்ப் பேராசிரியர் திருக்குறளில் அறிவியல் செய்திகள் என்று கட்டுரை வாசித்தார். திருவள்ளுவர் ஒரு அணு விஞ்ஞானி என்ற அளவிற்குத் தன் புனைப்புத் திறனோடு இணைத்துப் பேசினார். புலவர் சொல்வதும், பொய்யே... பொய்யே என்பது போல் பொய்யா மொழிப் புலவர் பற்றிய கருத்தரங்கின் தலைவர்க்கு பட்டு விட்டது. உடனே இது புனைக்கதை போல் உள்ளது என்று சொல்ல, விவாதமாகிப் போனதரங்கு. பலர் ஒட்டியும் சிலர் வெட்டியும் பேச ஆரம்பிக்க, காலத்தின் அருமை கருதி தலைவர் பிறகு கலந்துரையாடல் கொள்ளலாம் என்று சொல்லி கண்ணனைக் கட்டுரை வாசிக்க அழைத்தார். கண்ணன் கட்டுரை வாசித்து முடித்ததும் தலைவர் மிக நல்ல கட்டுரை என்று பாராட்டினார். உடனே முன்னாள் பேசிய தமிழ்ப் பேராசிரியர் தலைவருடன் பொருத ஆரம்பித்து விட்டார். இதே கருத்தைத்தானே நானும் கூறினேன். நீங்கள் மறுத்தீர்களே. திருவள்ளுவர் ஒரு புலவர். அவர் பட்டறிவின் பால் திருக்குறள் யாத்துள்ளார். அவரை விஞ்ஞானியாக் காட்ட கட்டுரையாளர் முயற்சிக்கின்றார் என்று என் கட்டுரைக்கு விளக்கம் கூறிய நீங்கள், ஒரு அமெரிக்க மாணவன் என்பதால் அதனைப் புகழ்ந்து ஏற்கின்றீர்கள் என்று சண்டை போட, அத்தலைமைப் பேராசியர் கோபமாகக் கூறினார் அவரது கட்டுரையில் உள்ள அறிவியல் செய்திகளை அவர் தகுந்த ஆதாரத்தோடு நிரூபித்துப் பேசியுள்ளார். அதில் அவர் நிபுணர்.

5 குறட்பாக்களில் அவர் கூறியுள்ள அறிவியல் செய்திகள் தன் அறிவியல் பின்புலத்திலிருந்து உணர்ந்து கூறுகின்றார். அதனால் அது ஏற்கப்படுகின்றது. தமிழ்ப் பேராசியர் நீங்கள் அறிவியல் செய்தியை முழுமையாக உணராத நிலையில் எழுதியுள்ளீர்கள். எனவே அதனைச் சுட்டிக்காட்டியுள்ளேன் என்று கூறி முடித்தார்.

கண்ணன் அப்போதுதான் தன் முயற்சியின் முக்கியத் துவத்தை உணர்ந்தான், நாம் முதலில் நம்மைச் சார்ந்த துறையில் ஆளுமை பெறவேண்டும். பின்பு அதில் தேர்ந்த கருத்தினை எடுத்து விளக்கி, அதன் சாரம் திருக்குறளில் உள்ளதா என்று தேடி, அவை இருப்பின் அதனைத் தேடி நிறுவ வேண்டும். அவ்வழி நிறுவும்போது உலகம் அதை ஏற்கும். மருத்துவர்கள், மேலாண்மை அதிகாரிகள், வங்கி மேலாளர்கள் தங்களுக்கு ஏற்படும் சவால்களுக்குத் தீர்வாக, தற்போது உள்ள நடைமுறைகளைத் திருக்குறளில் தேடித்தரலாம். அதனால் தான் கருத்தரங்க மலர்களில் அத்தகைய முயற்சிகள் தென்படு கின்றன. திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். தந்தை ராமு ஒருமுறை இதுபற்றிப் பேசும்போது கூறினார், அப்படிச் சிறந்த ஆய்வாளர்கள் கருத்துக்கள் ஏற்கனவே கொணரப்பட்டிருந்தால் கூட அவர்களிடம் நேரில் சென்று அவர் சொல்ல வந்த செய்தியை தற்காலத் தமிழ் அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துக்கூறும் வகையில் உன் கட்டுரை அமையலாம் என்றார். புதிய முயற்சிகள் என்று வரவேற்கப்படும் என்று ஊக்கப்படுத்தினார்.

சமீபத்தில் காலச்சுவடு பதிப்பகத்தில் எனது பர்மா குறிப்புகள் - மு. இராமனாதன் என்பவரின் புத்தகத்தை வாசித்தேன். அது ஒரு புதிய முயற்சி. யூசுப் முகம்மது என்ற ஒரு 90 வயது முதியவர் விருப்பு வெறுப்பின்றி பர்மாவில் நடந்த போர் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் பேசியதை, ஒரு விமானப் பயணத்தின் போது ஆசிரியர் சந்தித்ததாகவும், அவரின் பேச்சில் பல புதிய செய்திகள் உள்ளன என்பதை அறிந்து, தனது பணிகளுக்கிடையே அவரை அடிக்கடி சந்தித்து, அவரது உரையாடல்களை ஒலிப்பேழைகளில் பதிந்து, அதனை தனது நடையில் எழுதி இணையத்தின் உதவியால் பலரை ஒருங்கிணைத்து அப்புத்தகம் உருவான கதையை நேர்த்தியாகக் கூறியிருந்தார் ஆசிரியர், இராமநாதன் அத்தகைய புதிய முயற்சியைத்தான் தாமும் செய்ய இருக் கின்றோம் என்று நினைத்தபடி கண்ணன் கண்ணயர்ந்தான்.

டொரண்டோ வந்துவிட்டது. சீட் பெல்ட்-ஐ அணிந்து கொள்ளுங்கள் என்ற ஓசை கேட்டு கண்விழித்தான். டொரண்டோவில் இறங்கி வேறு பிளேனுக்கு மாறவேண்டும். இன்னும் 2 மணி நேரம் உள்ளது என்று விமான நிலையத்திற்குள் நடந்தான். அங்கே முதுகுவலியைக் குறைக்க 10 டாலர் குடுத்து குத்து வாங்கிக் கொண்டிருந்தவர்களுடன் தானும் அமர்ந்து கொண்டான். ஒரு ஜப்பானியர்; இல்லை ஒரு சீனர்; இல்லை ஒரு வெள்ளைக்காரர்; இல்லை 'பிலிப்பினோ?' என்ற சந்தேகத்திடையே உள்ள பெண் ஒருத்தி தூய வெள்ளை டர்க்கித் துண்டினை இளம் வெதுப்பாய் மடித்துப்போட்டு, தன் கைகளினால் வித்தை செய்தாள். கண்களை மூடிக் கொண்டு முதுகைக் காட்டியபடி கண்ணயர்ந்தான். தனது பாட்டி சின்ன வயதில் தலையை, கோதிவிட்டு உறங்கச் செய்தது போன்றே அந்தப் பெண் செய்வதாக நினைத்தான். 15 நிமிடம் 1 நொடியாய் தெரிந்தது. உற்சாகம் பீறிட்டது. எழுந்து முகம் துடைத்து, நன்றி கூறி, 10 டாலர் கொடுத்து வெளியே வந்தான். நான்கு பெண்கள் வரிசையாக அமர்ந்து நகம் கழுவிக்கொண்டிருந்தனர்... காப்பி லாடே ஒன்றை அருந்திவிட்டு உரிய டெர்மினலை அடைந்து விமானம் ஏறி, ஒரு மணி நேரத்தில் தன் இலக்கை அடைந்தான்.

தனது ஆயுளில் 12 மணி நேரம் எங்கே போனது. திரும்பவும் இந்தியா செல்லும் போது அதனை எடுத்துக்கொள்ளலாம். இந்த இயற்கை ஒரு கால வங்கி. நாம் நமது நேரத்தைச் சேமிக்க இப்படி பயணிக்கலாம். ஆனால் இறந்த பின் காலாவதியான காலத்தை எப்போதும் எடுக்க முடியாது. அமெரிக்க தெருக்களின் ஓட்டத்தை விட நமது திருக்குறள் லட்சியத்தை சுமந்தபடி ஓட வேண்டும் என்று நினைத்தபடி அன்றைய தினத்தைக் கழித்தான் கண்ணன். தூங்காமல் தூங்கும் கண்ணனாகிப் போனான். இப்படி நிறைய கண்ணன்கள் அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ளனர்.

அடுத்த நாள் கண்ணன் கல்லூரி இறுதி ஆண்டுக்கானத் திட்ட அறிக்கையை ஆராய்ந்தான். பிறகு தனது டைரியில்

குறிப்பெடுத்துக் கொண்டான். ஆண்டுக்கான செயல்திட்டம். அச்செயல் திட்டத்தில் புத்தகம் தயாரித்தலையும் இணைத்தான். அரிஸ்டாட்டில் மாணவர்கள் இப்படி செயல் திட்டம் ஒன்றை இயற்றி பின் ஒவ்வொரு நாளுக்குமான செயல் திட்டங்களைத் தயார் செய்வார்களாம். பின் அச்செயல் திட்டத்தை ஒவ்வொரு நாளும் தூங்கப் போகுமுன் படிப்பார் களாம். நிறைவேறிய செயல் திட்டங்களையும் அடுத்த நாள் செய்ய வேண்டிய செயல் திட்டத்தையும் மாணவர்கள் படித்துவிட்டு உறங்குவர். காலையில் செய்ய வேண்டிய செயல் திட்டத்தை மீண்டும் மூன்று முறை படித்து விட்டு பிற கடமை களைச் செய்வர் என்று கேள்விபட்டுள்ளான் கண்ணன். அதனைத் தன் வாழ்விலும் தவறாது கடைபிடிக்க ஆரம்பித் தான். குருவை மிஞ்சிய மாணவர்கள் அரிஸ்டாட்டில் பிறந்த மண்ணில் உருவானதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நினைத்தான். மாணவர்கள் டாலமி, சாக்ரடீஸ் நிழலாடிச் சென்றனர். கெப்ளர் என்ற மாணவர் மட்டும் வரவில்லை என்றால், டைக்கேபிரேகின் அற்புதச் சோதனைகள் பயனற்றுப் போயிருக்கும். மாணவர்கள்தான் ஆசிரியர்க்குப் புகழ் சேர்க்கின்றனர். நல்ல ஆசிரியர்க்கு சரியான மாணவர்கள் அமையாமல் அவரது கண்டு பிடிப்புகள் வெளி உலகத்திற்குத் தெரிவதில்லை. சில சராசரி ஆசிரியர்கள் தங்களது மாணவர் களால் புகழ் அடைந்து உள்ளனர். மறக்கப்பட்ட விஞ்ஞானி கள், என்ற புத்தகம் அவற்றின் பதிவுகளாகி உள்ளது என்று நினைத்தபடி தனது பல்கலைக்கழகத்திற்குப் பயணித்தான் கண்ணன்.

அத்தியாயம் 8

மாலை யாழினி அழைக்க ஸ்டார்பக்ஸ்ல் காலை மின்னஞ்சலில் காபிக் கடையில் உட்கார்ந்து பேசினான். தனது கட்டுரை 1 மாதத்தில் நிறைவு பெறும். அதனை தனது தந்தையின் உதவியுடன் படி எடுத்து அனுப்பி விடுகின்றேன்

என்று சொன்னது மகிழ்வாய் இருந்தது. அடுத்த நாள் சங்கர் மின்னஞ்சலில் அனுப்பிய செய்தி இன்னும் மகிழ்ச்சியைத் தந்தது. கோல்டன் விகிதம் பற்றி படித்து விட்டதாகவும் அதைப்போன்றே சில தகவல்கள் திருக்குறளில் உள்ளதாகத் தான் கருதுவதாகவும் அனுப்பியிருந்தான். அதோடு மட்டு மல்லாமல், இதை ஆராயும் குழுவினர்கள் இருப்பதாகவும் அவர்களிடம் சில குறட் பாக்களை அனுப்பியுள்ளதாகவும், நிச்சயம், அதனை விரைவில் அனுப்பிவைப்பதாக எழுதி யிருந்தான். நன்றி பாராட்டி பதில் அனுப்பிவிட்டு, பூங்கொடி, பூங்கோதைக்கு மின் அஞ்சலில் தான் அமெரிக்கா வந்த செய்தியைப் பகிர்ந்து விட்டு, தனது காரைச் சோதித்து விட்டு காஸ்ட்கோர் கடைக்குப் பயணித்தான். பிரம்மாண்டமான அக்கடையில் தமது உணவுக் கான அனைத்துப் பொருட்களும் தரமாகவும், சகாயமாகவும் கிடைப்பதாக அமெரிக்கர்கள் நம்பினர். அத்தோடு இந்திய நாட்டிற்கென்று உள்ள பல பொருட்கள் வால்மார்ட் போன்று இங்கும் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். பிரம்மாண்ட மான அந்த இரு கடைகளிலும், சென்று பொருட்களை வாங்கி வருகையில் உணவையும் அங்கேயே முடித்துக்கொள்ளும் வசதி உண்டு. அமெரிக்க இந்தியர்கள் shopping-ஐ ஒரு tourஆக மாற்றி அத்தகைய கடைகளுக்குச் செல்வதை வாடிக்கை ஆக்கி அதிக வரவேற்பு கொடுத்துள்ளனர். இப்போது இந்தியாவிலும் இத்தாக்கம் அதிகமாகி உள்ளது. சிறு கடைகள் மூடப்படும் அபாயம் உள்ளதால் தமிழ்நாட்டில் அத்தகைய கடைகள் பெரிய அளவில் அமையவில்லை. ஆயினும் பெரு நகரங்களில் ரிலையன்ஸ், டிமார்ட், கேமார்ட், ஃபோரம் மால் போல புதிய வரத்துத் துவங்கியுள்ளது. சிறு வியாபாரிகள் அக்கடைகளில் சரக்கை வாங்கி கிராமங்களில் விற்க ஆரம்பித்துள்ளனர். மொத்த விலையில் சகாயமாகவும் சில பொருட்களின் விலை அமைந்துள்ளது. இது வியாபார நுட்பமா? சதியா? என்று அரசியல் வாதிகள் தடுமாறுகிறார்கள். ஆனால் வள்ளுவன் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, வாணிகம் செய்வார்க்கு வாணிகம் செய்தல் பற்றி சிந்தித்துள்ளார். அதாவது மொத்த

வணிகம் பற்றிய சிந்தனை 2000 ஆண்டுகளுக்கு முன் உள்ளது, என்று கண்ணன் நினைத்தான். இதைப்பற்றி பூங்கோதை, வணிகம் பற்றிய கட்டுரையில் பேசுவாள் என்று நினைத்துக் கொண்டே, தனது தேவைகளை சிட்டைப்படி வாங்கி காரின் பின்பகுதியில் அடுக்கினான்.

அத்தியாயம் 9

தனது புத்தகத்தின் முதற்கட்டுரையை எழுத ஆரம்பித்தான். புதுச்சேரியில் கட்டுரைக்கு கிடைத்த பாராட்டினை நினைவு கூர்ந்தான். நாகலிங்கம் ஐயா கொடுத்த பாராட்டினை நினைவு கூர்ந்தான். தனது குலதெய்வம் தடாதகை பிராட்டி துணை என்று எழுதினான். தான் பார்த்த ஆன்மீகவாதிகளில் சொல்வதையே செய்பவராகவும், செய்வதையே சொல்லுவ தாகவும் வாழ்ந்த மானாமதுரை ஞானசேகர சுவாமிகள்-மாதாஜி, மற்றும் தனது குருநாதரான ஆங்கிலப் பேராசிரியர் இரா. திண்ணப்பன் போன்றவர்களை நினைவில் கொண்டான். காரைக்குடி, தேவகோட்டை பகுதிகளில் தங்கள் கொடைச் செயலால் தங்கள் உயிருக்கு ஊதியம் பெற்ற அழகப்பச் செட்டியார், அண்ணாமலைச் செட்டியார் ஆகியோரை நினைவில் தேக்கிக் கொண்டான். தனது குடும்பத்தைச் சேர்ந்த மூத்தோர்கள், தாய், தந்தை, அவர்களைப் பெற்றோர் எல்லோரையும் நினைவில் கூர்ந்து விநாயகர், சூரியன், சந்திர வணக்கங்களை மேற்கொண்டுவிட்டு திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் இருந்த சில புலவர்களையும் வள்ளுவரையும், கணியன் பூங்குன்றனாரையும் நினைவில் கொண்டு தங்கள் குழுவின் ஒவ்வொருவர் குடும்பத்தினரையும், அவர்களது பெற்றோர்களையும் நன்றியுடன் நினைத்து தனது கட்டுரையை ஆரம்பித்தான். தனது நண்பன் கூறிய "அறிவியல் ஆச்சரியம் திருக்குறள்" என்ற தலைப்பில் எழுதத் துவங்கினான். திரும்பத்திரும்ப படித்துப் பார்த்தான். மீண்டும் மீண்டும் எழுதினான். தனது பேராசிரியர் ஒருவர் அடிக்கடி கூறுவதை

நினைவில் கூர்ந்தான். உன் பரீட்சைப் பேப்பரை நீ எழுதிய விடைகளை ஒரு முறை நீயும் படித்துப் பார்த்து பிழை திருத்து. நீயே படிக்க முடியவில்லை என்றால் விடை திருத்துபவரால் படிக்க இயலுமா? என்பார். பல கவிஞர்கள் தாங்கள் எழுதிய கவிதைகளை பல தடவை திரும்ப வாசித்து மெருகேற்றுவார்கள் என்றும் சொல்லுவார். எனவே தனது கட்டுரையைப் பலதடவைப் படித்து சீர்செய்தான். கணினி உதவியுடன் தானே அச்சிட்டுச் சரிபார்த்தான். அகத்தியர் மற்றும் சித்தர் பெருமக்களையும் அவர்களுக்கு தமிழ் போதித்த முருகனையும் நினைத்து அமர்ந்தான்.

திருக்குறளில் இயற்பியல் மற்றும் நானோ அறிவியல் தொழில்நுட்பக் கோட்பாடுகள்- என்று தலைப்பிட்டான்.

அவனது கட்டுரையை முதலில் வைத்தான். அடுத்ததாக திருக்குறளில் உள்ள பிற அறிவியல் செய்திகள் திருக்குறளில் உள்ள பிற துறைச் செய்திகள் திருக்குறளில் உள்ள கல்வியியற் செய்திகள் திருக்குறளில் காதல் ரகசியங்கள் என்ற யாழினியின் கட்டுரை இறுதியாகவும், முடிவுரையில் சங்கர் தரும் தங்க விகிதச் செய்திகளுடன் புத்தகத்தை நிறைவு செய்யவும் தீர்மானித்தான். அந்தப் புத்தகத்தின் வடிவமைப்பைச் செய்து முடித்தான். ஒரு மாதத்தில் புத்தகம் உருவானது.

வெளியீட்டு விழா:

அமெரிக்காவில் அமைந்த ஹார்வர்ட் பல்கலைக்கழகத் தமிழ் இருக்கை உருவாகப் பலர் பொருளுதவி செய்திருந்தனர். அதில் மிக அதிக நிதி நல்கிய கனடா நாட்டின் மதராஸ் அகடமி கல்சுரல்ஸ் அசோசியேசன் தலைவர் மருத்துவர் இரகுராமன் வரதராஜன், சுமார் 8 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளார். அவரது தலைமையில் ஒரு வெளியீட்டு விழாவினை யாழ் சகோதரிகள் ஏற்பாடு செய்தனர். சென்னையில் மின் அங்கத்தினர்கள் பலரும் புத்தக வெளியீட்டை அண்ணா பல்கலைக்கழகம், அல்லது சென்னைப் புத்தகத் திருவிழாவில் ஏற்பாடு செய்கிறேன் என்று யாழினியின் தந்தை கூறினார். காரைக்குடியில் பேரா அய்க்கண்

தலைமையில் அழகப்பா பல்கலைக் கழக துணைவேந்தரை வைத்தும், கோவிலூர் ஆதீனம் அவர்கள் தலைமையில் கோவிலூர் நாச்சியப்பா சுவாமிகள் கல்வி நிறுவனங்களிலும் மற்றும் கரூர் திருவள்ளுவர் கல்லூரி, சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி, புதுவயல் வித்யாகிரி கல்லூரி முதலியவற்றிலும் புத்தக வெளியீட்டு விழாவை குன்றக்குடி அடிகளார் மற்றும் மானாமதுரை ஞானசேகர சுவாமிகள் தலைமையில் நடத்தவும் திட்டமிடப்பட்டது.

முதன்முதலாக மாணவர்கள் இணைந்து ஒரு தமிழ்ப் புத்தகம் வெளி வந்தது. உலகெங்கும் நல்ல வரவேற்பைப் பெற்றது. உலகம் முழுதும் இணையதளத்தில் ஏற்றப்பட்ட புத்தகம், பலராலும் பாராட்டப்பட்டது.

முதல் தமிழ் இணைவுப் புத்தகமும் பல கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது, பத்திரிக்கை பேட்டிகளில் தொலைக் காட்சிகளில் கண்ணன், யாழினி, பூங்கொடி, பூங்கோதை மற்றும் சங்கரின் நேர்காணலில் பிரபலமடைந்தது. பேஸ்புக், ட்விட்டர் இன்ஸ்டாகிராம் போன்ற இணைய மின் மேடைகளிலும் புத்தகம் பற்றிய செய்திகள் தவழ்ந்தது. அவர்கள் நாகலிங்க அய்யாவையும், ஊக்குவித்த பெற்றோர்களையும், உதவிய அத்தனை இதயங்களையும் நன்றியோடு நினைவு கூர்ந்தனர். ஆங்காங்கே திருக்குறளின் பெருமை பேசப்பட்டது. மேலை நாட்டு மற்றும் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் திருக்குறள் ஆராய்ச்சிக்கு நிதி ஒதுக்கினர். தமிழ் கற்றுக்கொள்ளப் பன்னாட்டு மாணவர்கள் ஆர்வம்காட்டினர். இழந்த தமிழ்க் கல்வியை மீண்டும் பெற மாணவர்கள் மற்றும் முதியவர்கள் மாலை வகுப்புகளுக்கு சென்றனர், தமிழ் தெரிந்த வர்களை உலகம் பெரிதும் மதித்தது. 2000 ஆண்டுகட்கு முன் தமிழ் இலக்கியத்தில் மலிந்திருந்த ரகசியங்கள் எவ்வளவு பெருமை வாய்ந்தன.

கண்ணன் சொன்னான் இத்தனைக்கும் காரணம் சந்துரு அங்கிள் நான் பத்தாங்கிளாஸ் படிக்கையில் எழுதிய கடிதம் தான், நான் வாசிக்கிறேன் என்று கடிதத்தை யாழினி எடுத்தாள்.

அன்பு கண்ணன், தமிழ் நாட்டில் மாணவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு. சமஸ்கிருதம் என்று படிக்கின்றனர், மதிப்பெண்கள் அதிகம் பெற தமிழ் விடைத்தாள்களில் அதிக செய்திகளை எதிர்பார்க்கின்றனர், கொஞ்சம் கொஞ்சமாக தமிழ் கற்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. உலக அதிசயமான திருக்குறளை தமிழர்கள் மறந்துவிடுவாரோ என்ற அச்சம் எனக்குள் ஏற்பட்டுள்ளது, நானும் உன் தந்தையும் தமிழின்பால் காதல்கொண்டவர்கள். எங்கள் தமிழ் ஐயா நாகலிங்கத்திடம் தமிழ் பயின்றவர்கள். நீயும் அமெரிக்காவில் வளந்தவன் என்றாலும் தமிழ் படித்து வருகின்றாய் என்று கேள்விப்பட்டு மிக்க மகிழ்வடைகின்றேன். அணுக்களுக்கும் மூலக்கூறுகளுக்கும் இடையில் பல ஆய்வுக்களங்கள் இருப்பதாக நோபல் பரிசு பெற்ற ஆசிரியர் ரிச்சர்ட் ஃபெய்ன்மேன் கூறி எண்ணற்ற கண்டு பிடுப்புக்களுக்கு காரணமானார் என்று நான் இயற்பியலில் படித்துள்ளேன். ஆனால் கண்ணைத் தாண்டி ஒரு உலகம் ஆய்வுக்கு இருக்கின்றது, அதற்கு அளக்கும்கோல் (டெலெஸ் கோபி, மைக்ரோஸ்கோபி) கண்ணை மிஞ்சும் வகையில் தேவை என்று 710 குறளில் சொல்லியிருப்பார், அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்று வேதம் சொல்கின்றது. ஆயினும் கண்ணால் பார்க்கமுடியாத உலகை விண்ணிலும் மண்ணிலும் தேட வேண்டும் என்கின்றார் வள்ளுவர். இது மிக ஆழமான கருத்து. கண்ணால் மைக்ரோவைவிடச் சிறிய பொருள்களைக் காண முடியாது. விண்ணில் ஒரு குறிப்பிட்ட தூரம் தாண்டியும் பார்க்க இயலாது.

வள்ளுவர் திருக்குறளின் மறைபொருட்களை யாரறிவார். யாரறிவார் அதன் பெருமையை, நீ வளர்ந்து பெரியவனானதும் உன்னைப்போன்ற இளைஞர்களை, ஒருங்கிணைத்து திருக் குறளின் மேன்மையை உலகெங்கும் கொண்டுசெல், என்னுடைய வாழ்த்துக்கள், அம்மா, அப்பாவை விசாரித்ததாய் கூறு. விண்ணைத் தாண்டியும், அணுவின் கருவின் உள்ளிலும் நிறைய ஆய்வுக் களங்கள் உள்ளது. அதற்கு அளக்கும் கோல்கள் வடிவமைப்பது அவசியம் என்ற மறைசெய்தி

அடங்கிய குறளின் பெருமையை உலகெங்கும் கொண்டு செல்வோம்.

அன்புடன்
சந்துரு

அத்தியாயம் 10

ஒரு மாதத்தில் புத்தகம் உருவானது. புத்தகம், பலராலும் பாராட்டடப்பட்டது.

இந்நூல் முயற்சி பற்றி

இந்நூல் ஜெயமோகன் அவர்கள் எழுதித் தொகுத்த அறம் நூலைப்போன்றே பலர் ஒரே நோக்கத்தில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. திருக்குறள்! அறிவியல்! ஆச்சரியம்! என்ற இந்தநூலுக்கும் காரணம் ஒருகடிதமே. அறம் இலட்சிய மாந்தர்களான யானை மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி, காரி டேவிஸ், பூமேடை ராமைய்யா, டாக்டர் சாமர் வேல், மற்றும் மார்ஷல் நேசமணி போன்றோரின் வாழ்க்கை பற்றிய உண்மைகள். அடடா... எத்துணை உன்னதங்கள் அவர்கள் வாழ்க்கை என்று ஆச்சரியம் வரவழைப்பது. பல மத நம்பிக்கைகளைக் கொண்ட அறம் கதாநாயகர்கள் உருவான காரணமும் மதச்சார்பில்லாத ஒரு உலகப் பொதுமறையாகத் தான் இருக்கமுடியும். திருக்குறள் மானுடத்தின் வாழ்க்கை உன்னதங்களை மையமாகக் கொண்டநூல். அது ஒரு வாழ்வியல் நூல். இன்றைய இலைஞர்கள் எதிர்பார்க்கும்

அறிவியல் மற்றும் வாழ்வியற் செய்திகள் கொண்ட நூல். மானுடத்தைப் புடம்போடும் நூல். ஒரு அறிவியல் மாணவனாக நான் தேடித் தேடிக் கண்ட ஆச்சரியங்களை தொகுத்துள்ளேன். என்போன்ற இளைஞர்கள் படித்து

உலகெங்கும் கொண்டுசெல்லவேண்டும் என்ற ஆவலுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. கானகம் தரும் ஆட்சி மான்களுக்கானது. வலிமை குறைந்த மானினம் அழிவதில்லை. சிங்கங்கள் அழிந்து வருகின்றன. மனிதனின் ஆட்சி முறை மெலிந்தவர்களை மையமாகக் கொண்டு அமைய வேண்டும். அதுதான் குடியரசு. குறள் உணர்த்தும் ஆட்சிமுறை. 'தங்கள் என்பும் உரிய பிறர்க்கு' என்று நம் நாட்டில் இருந்த வண்ணம் வாழும் தமிழ் மக்களுக்கு நன்றியோடு இதனைச் சமர்ப்பிக்கின்றேன். தாயின் நினைப்பும் தாயகத்தின் நினைப்பும் வதைக்கையில் மன வலிமை தரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வரிகளைத் தந்த கணியன் பூங்குன்றனார்க்கு நன்றி. அகத்தியர் முதல் இன்றைய எழுத்தாளர் வரை தமிழ் வளர்த்த அனைவருக்கும் நன்றி. இந்நூல் ஆக்கத்திற்கு உதவிய எங்கள் பெற்றோர்களுக்கும் ஆசிரியர் நாகலிங்க ஐயாவுக்கும் கடிதத்தால் ஊக்குவித்த பேராசிரியர் சந்துரு அவர்களுக்கும், இணை ஆசிரியர்கள் யாழினி, பூங்கோதை, பூங்கொடி மற்றும் சங்கர் அவர்களுக்கும் நன்றிகள்.

இப்படிக்கு
உங்கள் கண்ணன்

இந்நூலாக்கத்தில் எங்களை இணைத்துக்கொண்ட நண்பர் கண்ணன் அவர்களுக்கு எங்கள் நன்றிகள். 'ங' போல் வளைப்போம். இயற்கை மட்டுமல்ல திருக்குறளுக்கும் தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும் ஆற்றல் உண்டு. நட்பினையும் கற்பாகக்கருதும் இக்கால இளைஞர்களுக்கு உதவும் நோக்கத்துடன் இக்குழு இந்நூலை வெளியிடுகிறது. திருக்குறள் கற்றவர்கள் ஒருங்கிணைந்து அறம் வளர்ப்போம்!

நட்புடன்
யாழினி, பூங்கோதை, பூங்கொடி மற்றும் சங்கர்

புத்தகத் தயாரிப்பு முடிந்தது

அத்தியாயம் 11

புத்தகம் பற்றி பேச்சு எங்கும்...

பல்கலைக்கழகங்களில் உயர்மட்டக்குழுக்கள் கண்ணன், யாழினி, சங்கர், பூங்கோதை, பூங்கொடி ஆகியோரின் முயற்சிகளைப் பாராட்டியது. பல்கலைக்கழகத்தின் தலைவர் பேசுகையில் கூறினார், "இதுகாறும் மறைந்திருந்த அபூர்வமான செய்திகளை எங்கள் மாணவர்கள் ஆழ்ந்து சிந்தித்து, ஆய்ந்து வெளிக் கொணர்ந்துள்ளார்கள் என்பது மகிழ்ச்சி. அதில் சங்கர் என்ற ஐடி ஊழியரும் ஒருவர். மிகப்பெரிய கண்டுபிடிப்புகள் நிகழ்த்த பெரிய பிரமாண்டமான கருவிகள் வேண்டுமென்பது அவசியமல்ல. திருக்குறள் போன்ற மாயக்கண்ணாடிகளை, அலாவுதீனின் அற்புத விளக்குகளை, அட்சய பாத்திரங்களை பயன்படுத்தினாலே போதும் என்று நிலைநாட்டியுள்ளனர். "உலக இரகசியங்கள் அடங்கிய எளிமையான புத்தகம் திருக்குறள்," என்பதை அனைவருக்கும் புரிய வைத்துள் ளார்கள். புத்தகத்தின் ஆக்கத்திற்கான தூண்டுகோளை ஒரு ஆசிரியரின் கடிதமும், தந்தையின் ஈடுபாடும் அவர்களுக்குள் நடந்த விவாதங்களும் செய்துள்ளன. பள்ளிப்பருவத்து ஆசிரியரின் விதை, தங்கள் குழந்தைகளின் மூலமாக விருட்ச மாகியிருக்கின்றது. இதனை மாணவக்குழுமம் செய்துள்ளது. எங்கள் பல்கலைக்கழகத்தில் அதிகமான இந்திய மாணவர் களைக் குறிப்பாகத் தமிழ் மாணவர்களைச் சேர்த்திடுவோம். கூட்டு முயற்சியால் உலகெங்கும் திருக்குறள் தரும் அற்புத ஞான ஒளியை ஏற்றுவோம். உலகம் காப்போம்! இனி திருக்குறள் உலகத்தின் பொக்கிசம். அதைப்படித்து பிறமொழி களிலும் அதன் கருத்துகளை எடுத்துச்சொல்வோம் என்றார்.

அமெரிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழகம் ஒரு 'ட்ரெண்ட் செட்டர்'. பல புதிய ஆய்வுகளை ஆரம்பிப்பது இங்கேதான். ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் என்று எழுதியுள்ளார்கள். உலகெங்கும் எந்தெந்த நாடுகளில் ஈன்ற பொழுதில் தாய்மார்கள் மகிழ்ச்சியாய் வாழ்ந்தார்கள் என்ற ஆய்வினை

நாங்கள் நடத்தியுள்ளோம். சில அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்களை ஒருங்கிணைத்து உலகெங்கும் சென்று சுமார் ஒரு லட்சம் தாய்மார்களிடம் பேட்டி எடுத்தோம். அதில் உலகின் மூன்று பகுதிகளில் மட்டுமே குழந்தை பிறப்பைக் கொண்டாடுகின்றனர். தாயும், தந்தையுமாய் நன்றாக வாழ்ந்து தங்கள் பெருமையைக் கொண்டு செல்ல ஒரு குழந்தை வேண்டும் என்று எதிர்பார்த்து காத்திருக்கும் தாய்க்கே பேருவகை தருகின்றது. அது அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைக் குறிக்கிறது. தாயின் பிரசவகால உவகை, அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் பெருமை'' என்று எங்கள் ஆய்வு சொல்லி யுள்ளது. 5 ஆண்டு கால ஆய்வின் முடிவை ஈன்ற பொழுதின் என்ற இருவரிகளில் அடக்கிய குறட்பா தந்திருப்பது அதிசயங் களில் அதிசயமாகும். ஆசிரியர்க் குழுவினை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். இச்செய்தி முதல் பக்கத்தில் பத்திரிகையில் இடம்பிடித்தன.

பிரான்சு நாட்டு சச்சிதானந்தம், ஜெர்மனி சுபாசினி, மலேசியா நா.கண்ணன் தாங்கள் செல்லுகின்ற கூட்டங்களில் தவறாது இந்த முயற்சியைப் பாராட்டினர். கல்லூரிகளில் இப்புத்தகம் இலவசமாக வாங்கப்பட்டு திருக்குறள் புத்தகத்தோடு இணைத்து வழங்குவதைத் திருக்குறள் பெரியசாமி தம்பதியினர் வழக்கமாக்கினர். ஈரோடு குறள் மலைப்பணிகளுக்காக உலகெங்கும் பயணம் செய்த, ரவிக்குமார், பன்னீர்செல்வம், குறளின் மேன்மை குறித்துப் பேசுகையில் இப்புத்தகம் பற்றித் தவறாது குறிப்பிட்டனர். குறள் மலையைத் தங்கத்தகட்டில் செய்யுங்கள் என்று உலக மாந்தர் அவர்களை ஊக்குவித்தனர். மொத்தத்தில் குறளின் குரலாய் கண்ணன் குழு மாறிப்போனது. ராஜேந்திரன் இ.ஆ.ப. மற்றும் சி. ராஜேந்திரன் ஐ.ஆர்.எஸ். வாழ்த்தினர்.

சங்கரின் நண்பன் சரவணன் கேட்டான். டேய் சங்கர் நீதான் கேந்திரிய வித்யாலயா ஆச்சே. நீ எப்படி இந்த தமிழ் படைப்புக்குழுவில் என்று கேட்டான். ஒரு ரகசியம் சொல்லவா சரவணன்? கண்ணன் என்னிடம் 'கோல்டன் ரேஷியோ'

புத்தகம் கொடுத்துவிட்டு இதன் செய்திகளை உள்வாங்கு என்று சொல்லிவிட்டு நாகலிங்க ஐயாவின் சென்னை முகவரியைக் கொடுத்தான். நான் என் பாஸிடம் கண்ணனின் முயற்சியைச் சொன்னேன். பாஸ் எங்கள் கம்பெனி ட்ரெயினிங் டீமில் என்னை இணைத்து 'வானம் வசப்படுமா? நோக்கம் பெரிதாய் இருக்கட்டும்' என்ற தலைப்பில் பேச ஒரு வாய்ப்புத் தந்தார். நான் நாகலிங்க ஐயாவிடம் உதவி கேட்டேன். அவர் தான் வெள்ளத்தனையது மலர் நீட்டம், எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்.

வேலால் யானை.... முயற்சி திருவினையாக்கும். என்ற குறட்பாக்களை விளக்கத்தோடு நடத்தி தான் சென்னையில் இருக்கும் நாட்களில் வந்து தமிழ் கத்துக்க உனக்கு ஆர்வம் இருக்கு என்றார். அதையே செய்தேன்.

"குறளுக்கு மலையெடுக்கும் குறள்மலைச் சங்கம் நோக்கம் போல பெரிதாய் இருக்கட்டும் உங்கள் நோக்கம்" என்று நான் பேசி முடிக்கையில் பயிற்சிக் குழுத் தலைவரும் என் முதலாளியும் கைகொடுத்துப் பாராட்டினார்கள். நான் நாகலிங்க ஐயாவிடம் சொல்லிவிட்டு தங்க விகிதம் பற்றிக் கண்ணன் தேடச் சொன்னான் என்ற செய்தியைப் பகிர்ந்தேன். தங்க விகிதம் என்றால் என்ன என்று உள்வாங்கிக்கொண்டே ஆசிரியர் உடனேயே அவைகள் உள்ள செய்தியைக் குறிப்பிட்டார். நானும் அவற்றை எழுதிக் கண்ணனுக்கு அனுப்பினேன். எனக்குத் தோன்றிய சில விளக்கங்களைத் தனி கட்டுரையாக அனுப்பி வைத்தேன் என்றான். சூப்பர் என்று கை கொடுத்தான் சரவணன். என் வீட்டில் நிறைய திருக்குறள் உரை நூல்கள் உள்ளன. நானும் இனி என் தந்தையிடம் தமிழ் கற்கப் போகின்றேன். ஜெர்மன் சுகாசினி ட்ரெம்மல் போல ஒன்பது மாதம் அலுவலகப் பணி, மூன்று மாதம் தமிழ்ப் பணி என்று வாழப்போகிறேன்.

தமிழாசிரியர்கள் வீடுகளுக்கு முன்னாள் இந்நாள் கேந்திரிய வித்யாலயா மற்றும் ஆங்கிலப் பள்ளிகளினால் தமிழ் படிக்காத அனைத்து வயதினரும் படையெடுக்க ஆரம்பித்தனர். இங்கு

தமிழ் வகுப்புகள் உண்டு' என்ற ஆங்கில போர்டு அனைத்துப் பள்ளிகளிலும் தொங்கின.

அத்தியாயம் 12

கண்ணன் பல வேலைவாய்ப்புகளை உதறிவிட்டு ஹார்வர்டு பல்கலையில் ஆசிரியராக பணியில் சேர்ந்தான். முதல் நாள் வகுப்பு. கண்ணன் தான் புத்தகத்தில் எழுதியிருந்ததை நினைத்துப் பார்த்து பாடம் நடத்த ஆரம்பித்தான். ஒருநாள் அவனது நினைவுகளில் அவன் எழுதியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. திருக்குறளில் எல்லாப் பொருளும் உள என்பது ஆன்ற அறிஞர்களின் கூற்றாகும். அங்ஙனமாயின் அதில் தற்கால அறிவியல் கண்டுபிடிப்புக்களும் அடங்கி இருக்கக்கூடும் என்று ஆய்ந்தோர் எண்ணற்றோர். 1970க்குப் பின் கண்டு பிடிக்கப்பட்ட இயற்பியல் கூறான நானோ தொழில் நுட்பத் தின் அடிப்படைகள் திருக்குறளில் மலிந்துள்ளது என்பது பல குறட்பாக்களின் மூலம் நிறுவப்பட்டுள்ளது (செம்மொழி மாநாட்டுக் கட்டுரைகள்). தவத்திரு குன்றக்குடி தெய்வசிகா மணி அடிகளார் அவர்களின் உரை ஆழமும், கூர்மையும் செறிவும் மிக்கது என்று அந்த உரையின் வாயிலாகத் தாம் கண்ட அரசியல் கருத்துக்களை பத்மா என்ற ஆய்வாளர் தொகுத்திருந்தார். (மு.பத்மா, திருக்குறள் பன்னாட்டு ஆய்வுக் கோவை, 2016, தொகுதி 2 பக்கம் 453). இக்கட்டுரையில் 1945 உலகப் போரில் ஹிட்லர் படை தோற்ற நிகழ்வை தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும் (497)

என்ற குறள் கொண்டு நிறுவியதும், ஜெர்மனியின் வெற்றியை

கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளம்குன்றா
நாடுஎன்ப நாட்டின் தலை (736)

என்ற குறள் கொண்டு நிறுவியது நுட்பமாகவும் என் சிந்தனையைத் தூண்டும் வண்ணமும் இருந்தது.

1945ல் நடைபெற்ற உலகப் போருக்கு உதவும் செய்திகள் 2000 ஆண்டுகட்கு முன் என் ஐயன் திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பது எனக்குள் பெருமை விதைத்தது. அதுபோன்று நோபல் பரிசுகள் பெற்ற சில கண்டுபிடிப்புக்கள் அல்லது அதன் சாரம் குறட்பாக்களில் மறைபொருளாக இருக்கின்றதா என்று ஆராய முற்பட்டேன். அதில் கிடைத்த சில அற்புத இயற்பியல் தத்துவங்களையும், அதன் அடிப்படை புதைந்துள்ள குறட் பாக்களையும் தருவதற்கான முயற்சியே இக்கட்டுரையாகும். அனைவருக்கும் தெரிந்த குறள்களில் பெரும்பான்மைச் செய்திகள் அடங்கியுள்ளன என்பது மு.வ., கலைஞர் உரை மற்றும் அடிகளார் கட்டுரைகள் கொண்டு இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது... கண்கள் சொருகின. மறுநாள் காலையில், ஒரு தர்க்க மேடை மற்றும் இயற்பியல் வகுப்பு. விரைவாக எழுந்து தயாரானான். இயற்பியல் வகுப்பில் பேச ஆரம்பித்தான். ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவம் 20ம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு. அவருக்கு நோபல் பரிசு 1905ல் வழங்கப் பட்டுள்ளது. ஐன்ஸ்டீன் இந்தக் கோட்பாட்டை நிறுவுவதற்கு மிகவும் உறுதுணையான இரண்டு செய்திகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. இடநிலையாமை
2. காலநிலையாமை

ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கையின்படி அனைத்து இயற்கை விதிகளும் எல்லா இடத்திலும் பொருந்தும்.

நியூட்டனின் புவியீர்ப்பு விசை போன்று நிலவும், சூரியனும் அது அதற்கான ஈர்ப்புவிசை கொண்டுள்ளது.

ஒளியின் திசைவேகம் (velocity of light 'C') ஒரு மாறிலி. ஒளியின் இத்திசைவேகமே உலகில் மிக அதிகம். அதன் வேகமே பெரும் வேகமாகும். ஒளியின் ஒத்த வேகத்தில் செல்லும் பொருட்களில் நீளம் நகராத் தன்மையின் நீளத்தை

விடக் குறைவாகத் தெரியும் (Length Contracion). அதன் நிறை அதிகரிக்கும். நேரம் மாறும் என்ற கண்டுபிடிப்புக்கள் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றது.

இனிநாம் அன்றாடம் பயன்படுத்தும் குறட்பாக்களில் இச் செய்திகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நாம் காண்போம்.

கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல - குறள் *1100*

இக்குறளில் கண்ணால் காட்சியைக் காணப் பயன்படுத்தப் படும் ஒளிப் பரிமாற்றம், கண்ணொடு கண்ணினை நோக்குதல் இது மிகவிரைவில் அமையும். ஒரு நொடிக்கு *3,00,000* கி.மீ வரை பயணிக்கும் ஒளி அலையைப் பயன்படுத்தும் போது வாய்ச்சொற்கள், அதாவது ஒலி அலைகளால், (ஒரு நொடிக்கு *0.330* கி.மீ வரை பயணிக்கும்) உருவான வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல. (300000 + 0.33 = 300000, 300000-0.33 = 300000) இன்றைய optical communication ஆப்டிக்கல் தொடர்புகளுக்கு அடித்தளம் தரும் வகையில் ஒளியின் வேகத் தோடு செய்தி பரிமாற்றத்தில் ஒலி அலைகளோ, வேறுவகை யான மின், எலக்ட்ரான் பரிமாற்றமோ போட்டி போட இயலாது. ஒளியின் வேகமே அதிவேகம் என்ற செய்திகள் அடங்கியுள்ளது உள்ளங்கை நெல்லிக் கனி. கண்ணொடு கண் செய்த வேலையை ஒலி அலைகள் சுமக்கும் சொற்கள் செய்தது போல் நினைப்பது அறியாமையே ஆகும்.

அதனால் தான்,

வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி *(544)*

மன்னனின் கடைக்கண் மூலம் குடிமக்கட்கு பல இன்பம் தரப்படலாம். அதுபோன்று வானத்தை நோக்கி வாழும் மக்கட்கு மழை போன்றதாகுமாம். எனவே நோக்கி என்பதற்கு ஒளியைப் பயன்படுத்துதல் என்று நாம் கொண்டால் பல நுண்ணிய தகவல்கள் கிடைக்கும். உயிரினங்கள் வான் தரும்

மழை நோக்கி வாழுகின்றன. ஒளியைப் பயன்படுத்துகின்றன. ஒளியின் வேகமே அதிவேகம். அந்த வேகத்தில் மன்னன் குடிமக்களைக் காக்கச் செயல்படுதல் வேண்டும். அத்தோடு ஐன்ஸ்டீனின் சிறப்பு சார்பியல் கோட்பாடும் இக்குறட்பாவில் அமைகின்றது. 'என்ன பயனும் இல' என்ற வரிகளில். அதுமட்டுமல்ல,

பொருள் கருவிகாலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் (குறள் 675)

அதாவது ஒரு காரியத்தைத் துவக்கும் போது 1) பொருள் 2) கருவி 3) காலம் 4) வினை 5) இடம் என்ற 5 காரணிகளை ஒரு சேர நினைந்து தொடங்க வேண்டும். இக்குறட்பாவில் கைப்பொருள், வசதிவாய்ப்புக்கள், அதைச் செய்யும் கருவியாக யாரை நியமிக்கலாம், தகுந்த காலம் தானா? இதனைச் செய்ய முடியுமா? இதைவிடச் சிறப்பான இடம் உண்டா? என்று ஆய்ந்து செய்தல் வேண்டும் என்பது ஆன்றோர் தரும் விளக்கம். ஆயின் பொருள் என்பதை பருப்பொருள் (Matter) *என்றும் கருவி என்பது அதனை அளக்கும் கருவி* (Instrument), *எதனை அளக்கின்றோமோ அதை வினை* (work) *என்று கொண்டு காலம், (நேரம்*-Time*), இடம்* (place) *என்று கொண்டு ஒரு சோதனை செய்வோமானால் பிழை (இருள்) இன்றித் தெளிவான விடை தீர வழி கண்டு செய்தல் வேண்டும்.*

காலம் அளக்கும் போது அதில் இடத்தால் பிழை வரும். இடத்தை அளக்கும் போது காலத்தால் பிழை வரும். இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தது என்ற ஹைசன்பர்க் கண்டுபிடிப்பு ஹைசன்பெர்க் நிலையின்மைக் கொள்கை இக்குறட்பாவில் ஒளிந்துள்ளது துல்லியமாய் தெரிகின்றது.

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 423)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 355)

என்ற குறட்பாக்கள் எதை அளந்து கூறினாலும் அளக்கும் போது அதன் உண்மை அளவினைக் கண்டுபிடித்தல் அறிவு என்ற செய்தி ஒளிந்துள்ளது. ஒரு வாரத்தில் அவனுக்கு மேலும் ஒரு அழைப்பு அருகாமை பல்கலைக்கழகத்திலிருந்து நிறுவனர் தலைவர் அவனை பதினைந்திலிருந்து பதினேழு வயது கொண்ட மாணவர்கள் குழுவிற்கு இயற்பியல் நடத்த வேண்டுதல் விடுத்தார். பாடம் நடத்த ஆரம்பிப்பதற்குள், மாணவர்கள், "கண்ணன் சார் வேறு இயற்பியல் கருத்துகள் இருந்தால் சொல்லுங்கள் சார். புத்தகத்தை மட்டுமே படித்து போரடிக்கிறது" என்று கேட்டனர். ஒரு இலங்கை மாணவன் 'ஓமம்' என்றான்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி - (குறள் 118)

மிக்கமிகு புகழ் தாங்குபவோதற் சேர்ந்தார்
ஒற்கம் கடைப்பிடியா தார்.

என்ற ஐந்திணை ஐம்பது பாடல் வரிகளில் கூறியது போல் தளர்ச்சிகளை தவறுகளை அல்லது விலகலைக் கண்டு களைய முற்படுதலே மெய்ப்பொருள் காணும் வழி. இதனை நிலையின்மைக் கொள்கை என்று இயற்பியலில் பகர்வர்.

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லைஎனும்
பெருமை உடைத்து இவ்வுலகு (குறள் 336)

என்று காலத்திற்கேற்ப மாறிக் கொண்டே வரும் பெருமை உடையதேசம். உலகில் மாற்றம் ஒன்றே நிலையானது. நிலையாமையே நிலையானது என்று நம் முன்னோர் கூறுவதே நிலையின்மைக் கொள்கை என்று இயற்பியலில் பகர்வர்.

அதன் வழியிலேயே சார்பியல் காணப்பெற்று, ஐன்ஸ்டீன் பல அறிவியற் கருத்துக்களை ஈன்றார். தொடர்ந்து ஈடுபட்டு நோபல் பரிசு பெற்றார் எனின் வள்ளுவருக்கு அன்றோ அத்தகைய பரிசு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நம் குறை நீக்கிய ஆன்மா மகாத்மா ஆக மாறுவது போல் குறை களைந்து நிறை செய்யும் நல்லாசிரியராய் வள்ளுவர் திகழ்கின்றார்.

கண்ணன் வள்ளுவராக மாறிப் போய் பாடம் சொல்வதை மிக ஆர்வமாய்க் கேட்கத் தொடங்கினர்.

கண்ணன் சொன்னான், "திருவள்ளுவர் மிகச்சிறந்த இயற்பியல் கருத்துக்களை வழங்கியுள்ளார் என்றால் மிகையாகாது."

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தானே வரும். (குறள் 319)

அழக் கொண்டவை எல்லாம் அழப்போம் (குறள் 665)

போன்ற குறட்பாக்கள் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற பழமொழியையும் நியூட்டனின் மூன்றாம் விதியையும் குறிப்பதாகக் கொள்ளலாம். அதை இலங்கை மாணவன் மீண்டும் சொன்னான். 'ஓமம். ஒவ்வொரு வினைக்கு அதற்குச் சமமான எதிர்வினை உருவாகும்' என்று கைதட்டினான்.

இயற்பியல் கருத்துக்கள் என்று சொன்னவுடன் நியூட்டன் விதிகள் தாம் முதலில் நினைவுக்கு வரும். நியூட்டனின் விதிகள் விசை (Force) என்றால் என்ன என்பதை குறித்தது. விசையின்றி எந்தப்பொருளும் தன் நிலையில் மாறாது. அப்பர் தேவாரத்தில் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று தங்கள்தமிழசிரியர் எழுபதுகளில் பாடம் நடத்தியுள்ளதாக என் தந்தை கூறி யுள்ளார். திருக்குறளில் இதே கருத்தை நானும் என் தந்தையும் தேடியுள்ளோம். அப்போது அத்தகைய பொருளைத்தரும் திருவாசகச் செய்யுள் ஒன்று ந.து. சுந்தரவடிவேலு ஐயா கூறுவார்களாம்.

நடப்பன நடாய்... கிடப்பன கிடாய் நிற்பன... சொற்பதங் கடந்த தொல்லோன்... என்ற பாடல்பற்றி நாகலிங்கம் சொன்னார். அது போன்று மறைபொருளாய் இருக்கும் சில குறட்பாக்களைக்கண்டோம். முதல் குறளே காரண காரிய விளக்கம் தருகிறது. உலகின் காரணம் ஆதிபகவன் (நியூட்டன் முதல் விதி.

கடன்என்ப நல்லவைஎல்லாம் கடன்அறிந்து சான்றாண்மை
மேற் கொள் பவர்க்கு. (குறள் 981)

நல்லோர்கள் ஒவ்வொரு நல்ல செய்கைக்கும் கடன்பட்டவர்கள் போல் நினைத்து கைமாறு செய்வர். அது சான்றோர்க்கு அழகு.

யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (குறள் 641)

ஒவ்வொரு பொருளுக்குள்ளும் பிற விஷயங்களும் உண்டு.

அழக்கொண்டவை எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பாலவை. (குறள் 659)

பிறர் கண்ணீர் விட அவன் பொருளைக் கவரும் ஒருவனின் செல்வம் அதே போன்று அவன் கண்ணீர் விடத் தொலையும். நன்றாக ஈட்டப்பட்ட பொருள் இழக்க நேரிட்டாலும் நல்ல காரியத்திற்கு பயன்படும் வகையில் திரும்பக் கிடைக்கும் என்றும் இக்குறள் நியூட்டனின் முதல் மற்றும் மூன்றாம் விதியை நினைவில் கொண்டுவருகிறது. ஒவ்வொரு வினைக்கும் காரணம் உண்டு. ஒவ்வொரு வினைக்கும் அதற்கு சமமான எதிர் வினை உண்டு. காரணம் விசை இது நியூட்டனின் முதல் விதி.

இயற்பியலில் ஒரு முக்கிய கூறு தொடர் சமன்பாடு (சீரோடைக் கொள்கை).

ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை. (குறள் 478)

வரும் வழி சிறிதாயினும் செல்லும் வழி அகலமாகி விடக் கூடாது. தொடர்ந்து செல்வதற்கு வரும் அளவும் செல்லும் அளவும் சமமாக இருக்கவேண்டும். இதுவே தெளிவான ஓடைக்குத் தேவையான சமன்பாடு ஆகும். இது மின்னோட்டத்திற்குப் பொருந்தும் கிர்ச்சாஃபின் முதல் விதி.

இன்னும் சில குறட்பாக்கள் காணலாம். ஒருவன் எவ்வளவு தான் உறுதியாகப் பற்றினாலும் செல்வம் நில்லாது. நல்வினையின் மூலமே நிலைத்த செல்வம் பெறலாம்.

இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினை உலந்தக்கால்.

என்ற பாடல் கூறுவது போல் செல்வத்தின் நிலைப்பாடு மாறாது. நேரம் வந்தால் தங்காது. மாற்று வினையின்றி நல் வினையின்றி செல்வம் நிலைக்காது என்பது நியூட்டன் முதல் விதியின் குறிப்பே ஆகும். திரவத்தின் பண்பு குறித்த குறள் என்றும் கூறலாம்.

முதல் இல்லார்க்கு ஊதியம்இல்லை மதலையாஞ்
சார்பவர்க்கு இல்லை நிலை. (குறள் 449)

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)

உலகம் இயங்கக் காரணம் பொருள். இதுவும் காரண காரியம் பற்றிய சிந்தனைதான். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார் பெறின். (குறள் 709)

கல்வி கண் போன்றது. கற்ற அமைச்சன் கண் போன்றவன். ஆயினும் உலகம் நிலைக்க புவி ஈர்ப்பு விசை வேண்டும். அன்பே புவியீர்ப்பு விசையாக திருவள்ளுவர் கருதுகின்றார். 'பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்' 996 என்பர் வள்ளுவர். பண்புடையார் இல்லையேல் பூமி இயங்காது. இதற்கு விடையை குறள் 992ல் தருகின்றார்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள் 912)

பண்புடைமை கொள்ள அன்புடைமை ஒன்றே வழியாகும். ஆன்ற குடிப்பிறத்தல் நம் கையில் இல்லை. எனவே அன்பின் வழியது உயிர்நிலை. உயிர் இயக்கம். உலகியக்கம். இதுவே வள்ளுவம். தான் ஒரு நல்ல ஆசிரியராக மாறி வருவதை மாணவர்கள் பகர்ந்துகொள்வதை கண்டுகளித்தான் கண்ணன்.

அவன் தேடல் நிறைவுபெறவில்லை. 'அன்புடையார் எண்பும் உரிய பிறர்க்கு'. கலீல் ஜிப்ரான் சொல்வார் "Love Gives Naugt; but itself takes naugt; but from itself" என்று கூறி முடித்தான். மாணவர்களிடையே கரகோசம்.

அத்தியாயம் 13

'அடுத்த போர் நீருக்காக' என்ற தலைப்புடன் ஒரு சஞ்சிகை அவன் கண்ணில் பட்டது. அடுத்த பல்கலையில் அதைப் பற்றி நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். நவீன இந்தியாவைப் பொறுத்தமட்டில் மே மாதம் வந்து விட்டால் பல பாகங்களில் நீர்த்தேவை. சுமை ஊர்திகளில் பல கிராமங்களுக்கு குடிநீர் எடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை. மழைநீர் சேகரிப்பு, சுத்தமான குடிநீர், போன்ற திட்டங்கள் நீர் மேலாண்மையின் இன்றியமையாமையை குறிக்கின்றன. அதிகப்படியான நிலத்தடி நீர் உபயோகத்தினால் பூமிக்கடியில் உள்ள நீரின் அளவுகளில் மாற்றம் ஏற்பட்டு, நீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உள்ளதாக இன்றைய விஞ்ஞானிகள் எச்சரிக் கின்றனர். ஆனால் இந்த முடிவினை தங்களின் அறிவியல் தேடல்கள், சோதனைகள், கணினிகள் மூலம் ஆய்வுசெய்து கூறியுள்ளனர். நம் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன் இக்கருத்தை எப்படிக் கூறுகிறார் என்று பாருங்கள் என்று பாடத்தை ஆரம்பித்தான்.

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. (குறள் 11)

வானிலிருந்து பெய்யும் மழையினால் தான் உலகம் நிலை பெற்று உள்ளது. அதனால் அவ்வானத்து நீரே அமிழ்தமாகக் கருதப்படுகின்றது.

அமிழ்தம் சாவா மருந்து. அதற்கு ஒப்பானது நீர். அது வானத்திலிருந்து பூமிக்கு வந்தது. ஆதனை அமிழ்தம் போல்

சேமித்து அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். உயிர்கள் இந்த பூமியில் நீடித்து வாழ நீர் அவசியம் என்பதும் அதனை அமிர்தமாய் போற்றுவோம் என்ற செய்தியும் இக்குறட்பாவில் உள்ளது.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்காதாகி விடின். (குறள் 17)

மேகமானது மழையாகப் பொழிந்து நீரைக் கடலில் கொட்டாவிட்டால் பெரிய கடலும் நீர்வற்றிப்போகும். இங்கே ஒரு ஐயம். கடல் நீர் ஆவியாகி மேகமாகிறது. மேகம் தன்னுடைய செறிவினைப் பெருக்கி தடித்து ஒரு குறிப்பிட்ட அளவு பெருகியபின் மழையாய் கொட்டுகிறது. இப்பொழுது நாம் அதிகப்படியான நீரை சில இடங்களில் செலவு செய்தோமாயின், அந்த இடங்களில் இருந்து ஆவியாகும் நீர் குறிப்பிட்ட தடிமனுக்கு பெருகுவது இல்லை. நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தினால் மேகம் தடிக்காது. அத்தகைய நிலையில் அழகிய மேகம் மழையாவது இல்லை. அப்படி தன்னைத்தானே பெருக்கிக் கொள்ளும் வேலையை மேகங்கள் செய்துகொள்ள வாய்ப்பு இன்றிப் போனால் என்ன நடக்கும். விவசாயம் செய்ய இயலாது போகும். பசிப்பிணி கொடுமை அதிகரிக்கும். உயிரின ஒழுக்கம் மாறுபடும். இத்துன்பங்களால் உயிர்கள் மாயும்.

நீரின்றி அமையாது உலகெனில் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு. (குறள் 20)

ஒழுக்கம் விழுப்பந் தரும். எனவே மனிதன் நீரைப்போற்றி பயன்செய்தல் வேண்டும். அதில் தான் உலக ஒழுங்கு அமைந்துள்ளது. எனவே நீரை சேமிப்பீர் என்று திருவள்ளுவன் அன்றே கூறியுள்ளார் அழகாக.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (குறள் 5)

கரும் பொருட்கள் (டார்க் மாட்டேர்ஸ்) என்றாலும் அவைகள் சேருவதற்கு உண்டான தேவையைத் தீர்மானிப்பது ஒளிப்பொருளான இறைவனே ஆகும்.

இலம் மென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும். (குறள் 1040)

என்ற குறட்பாவின் மூலம் பூமி சிரிக்கின்றது என்ற செய்தியை வள்ளுவர் உணர்த்துகிறார். சூரியனின் பொறுமல்கள் (சோலார் பிளேர்ஸ்) போது சூரியனில் இருந்து சமிக்ஞைகள் பூமியின் அதிர்வினை தூண்ட வாய்ப்புகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய் வருத்த கூலி தரும்" என்ற குறட்பா மூலம் 'எதுவும் முடியும்' என்ற கருத்தினை வள்ளுவர் வருங்கால இளைஞர்களுக்கு தருகின்றார்.

நேராக செல்வது எல்லாம் நல்லது. வளைந்து செல்வது எல்லாம் கெட்டது. சிவப்பாய் இருப்பவன் எல்லாம் நல்லவன் அல்ல. கருப்பாய் இருப்பவன் எல்லாம் கெட்டவன் என்ற கொள்கைகளை எல்லாம் நகையாடுவது திருக்குறள்.

கணை கொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல். (குறள் 279)

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் புரட்சி செய்துள்ளது என்பதே புதுமைதானே.

மூலக்கூறுகளுக்கு அறிவு உண்டா?

வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (குறள் 271)

இலனென்று அசையி இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். (குறள் 174)

நிலம் நகும், பூதங்கள் ஐந்தும் நகும் என்று வள்ளுவர் உயிர்ப்பொருளுக்கான பண்பினை, சடப்பொருள்களுக்கு இருப்பதாக நகும் எனும் சொல்லால் குறிப்பிடுகின்றார்.

நிலம், மூலக்கூறுகளின் தொகுதியாகும். மூலக்கூறுகள் அடர் அடர்த்தியிலிருந்து குறை அடர்வு இடம் நோக்கி நகரும். இது பறவைகள் மற்றும் விலங்குகள் வலசையை ஒத்து இருக்கிறது.

எனவே உயிரற்ற பொருள்களுக்கும் அறிவு இருக்கிறதாகக் கருதும் இயற்பியலார் (மூலக்கூறுகளுக்கு அறிவுண்டு) ஒரு சிலர் உள்ளனர். அவர்கள் கருத்துக்களுடன் ஒத்திருக்கின்றது. இக்குறட்பாக்களில் வளி மண்டலம், கோள்கள், விண்மீன்கள் அனைத்தும் விண்ணில் மிதக்கின்றது. எனவே அவைகள் ஒன்றனுக்கொன்று முரண்படாமல் இயற்கை விதிகளோடு நடந்துகொள்வதும் இக்கூற்றுக்கு வலு சேர்க்கின்றது. வகுப்பு நிசப்தமாய் இருந்தது. கண்ணன் குறள் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் ஒருவர் உள்ளே வந்து அமர்ந்ததைக் கூட கண்ணன் மற்றும் மாணவர்கள் உணரவில்லை. இறுதியாக வில்லியம் பிளேக்கின் சொற்றொடரைச் சொல்லி, 'உங்களின் உள்முகப் பயிற்சியில் உங்களை மட்டுமல்ல, இயற்கையையும் உணரலாம் என்று வள்ளுவர் கூறுகின்றார்' என்று முடித்தான். அந்தப் பேராசிரியர் கண்ணனிடம் சொன்னார். 'நீ ஹார்வர்டுக்கு மட்டும் சொந்தமல்ல. நீ உலகெங்கும் சென்று பாடம் நடத்த ஏற்பாடு செய்கிறேன்.'

அத்தியாயம் 14

முயல் ஆமைக் கதைகள் கேட்டுள்ளீர்களா... முயல் ஒளி, ஆமை ஒலி. ஆமை பந்தயங்களில் சில கதைகளில் வெல்லும். அதுபோன்று ஒளியை ஒலி முந்தும் - சில இடங்களில் என்று ஆரம்பித்தான் கண்ணன். அன்று யாழினியும் வந்திருந்தாள். யாழினியே இந்தப் பாடத்தை நடத்துவதற்கு அனுமதி வாங்கியிருந்தான். யாழினி ஆரம்பித்தாள். வணக்கம் மாணவர்களே. தமிழ்ச் சமுதாயம் நயத்தக்க நாகரீகம் வேண்டும் சமுதாயம், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று 'ங'ப்போல் வளைக்கும் சமுதாயம். அதன் ஒப்பற்ற பெருமையைப் பறைசாற்றும் நூல்களுள் மிகச்சிறந்தது தொல்காப்பியம், மற்றும் திருக்குறள் என்பது எனது கருத்து. மனித இனம் பரிணாம வளர்ச்சியில் உருவாகி, உடல்பலத்தால்

மட்டுமின்றி அறிவு ஆற்றலால் மேம்பட்டது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வரும் வாழ்க்கைப் போராட்டத்தின் விளைவாக மிருகங்களிடம் இருந்து மேம்பட்டு, உயிரினங்கள் அனைத்தும் பாதுகாக்கும் நிலைக்கு மனிதன் உயர்கின்றான். காலப்போராட்டத்தில் கருத்துக்களால் மேம்பட்ட சமுதாயமாக, உலகைக் காக்கும் சக்தியாக விளங்கும் சொற்களால் உருவான இலக்கியங்கள் கொண்டதால் தமிழ்மொழி செம்மொழி என்று உரைக்கப்படுகிறது.

குறள்-69 எனக்குப் பிடித்த குறள், அனைவருக்கும் தெரிந்த ஒரு குறள் ஆயினும் அதில் மறைந்திருக்கும் நுட்பமான பொருள்கள் என்னை அதிரவைக்கின்றன. அந்தகுறள்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்டதாய் (குறள்-69)

ஒரு குழந்தையை ஒரு தாய் ஈன்கின்ற சமயத்தில் பிரசவ நேரவழி, குழந்தை பிரசவித்துவிட வேண்டும் என்ற பயம், தாதி மற்றும் மருத்துவரின் அறிவுரைப் பேச்சு, அந்த ஒரு பொழுதிற்காகப் பத்துமாதங்கள் காத்திருந்த நிலை, இதற்குக் காரணமான கணவன், தானும் இவ்வாறுதானே நம் தாயிடம் இருந்து பிறந்தோம் என்ற நினைவு, தந்தை, தாய், பக்கத்துவீடு, எதிர்த்த வீட்டுக் குழந்தைகள், எளிதாகக் குழந்தையைப் பெற்று வந்த தன் தோழி, என்று பல நிலைகளைச் சிந்தித்து, விலா எலும்புகளை வளைத்து, முண்டி வரும் குழந்தையை முழு சக்தியையும் உபயோகப்படுத்தி வெளிவரச் செய்த அந்தக் கணத்தில், அந்தப்பொழுதில், கண்கள் சோர்ந்து மூடியிருக்க, மயக்கத்தில் பசியும் சூழ்ந்து உடல்முழுக்க வலியால் துடித்த நிலையில், கண் பார்க்க இயலாத நிலையில் வீல்... என்ற குழந்தையின் அழுகுரல் கேட்ட பொழுதில் கிடைக்கும் இன்பம் உணர்ந்தவர்க்கே விளங்கும்.

ஐயன் வள்ளுவன் தானே தாயாய் மாறி அந்த பொழுதிற்கு சென்று அந்தத் தாயின் இன்ப உணர்ச்சியை உணர்கின்றார். பெரிதுவக்கும் நிலைகள் பெண்ணுக்கு பல இருப்பினும்,

அவள் தாய்மை அடையும் அந்தப் பொழுதில் கிடைக்கும் உவகை பெரிதாகும்.

சாமான்ய மனிதன் ஒருவனுக்கு வயிற்றுப்பகுதியில் ஏற்படும் வலி அவனை தற்கொலைக்குத் துண்டிவிடும். சில சமயம் கொண்ட கொள்கைகளை எல்லாம் கூட அழித்துவிடும். திருநாவுக்கரசர் அப்பராய் மாறியது வயிற்று வலியால்தானே? ஆனால் குழந்தை ஈனுகின்ற நேரத்தில் வந்த வலியை மிகச் சிறிதாய் போகச் செய்யும் அந்த நேர உவகை.

ஆனால் அதை விட ஒரு பேருவகைக் காலம் எப்பொழுது வரும்? தன்மகன் திருமணத்தில்? அவனுக்கு குழந்தைப் பேறு கிடைத்த நேரத்தில்? அல்லது அவனுக்கு வேலை கிடைத்த நேரத்தில்? அமையுமா? என்றால் ஒரு போதும் இல்லை எனலாம். அதற்குச் சமமான ஒரு நிலை தாய்க்குத் தலைமகன் பிறந்த பொழுதிற்கான இன்பம் ஒருபோதும் பின் வாராது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் அதனை விட ஒரு பொழுது உண்டு என்கிறார் வள்ளுவர் எங்ஙனம்? கண் குழந்தையை பார்ப்பதற்கு முன்பு குழந்தையின் வீல்... என்ற சத்தம் அவளுக்கு இன்பம் தருகின்றது.

கண் பார்த்த போதும், குழந்தை உயிருடன் இருப்பதை தாய் கண்டாலும், குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்ட 'நிமிடமே' மிக முக்கிய தருணம்.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (குறள்-1100)

என்ற காதல் நிலை மாறி கண்பார்க்கும் முன்னே ஒலி தந்த சுகம் ஈன்ற பொழுது. அது ஒளியை புறம் தள்ளிய 'ஒலியின்' தருணம். அதே போன்ற தருணம் ஒலியின் மூலமாகவே வருதல் வேண்டும். அது குழந்தை வளர்ந்து மனிதனாகி, தன் செயல்களால், அறிவினால் அன்பால் கனிந்து தலைவனாகி சிறந்த பண்புடன் திகழும் போது, ஆன்றோர் அவையில் 'இவன்தந்தை என்னோற் றான் கொல்' என்று அவை வியப்ப, அவ்வவையில் 'இவன் சான்றோன்' என்று ஒரு தாயின் காதில்

சான்றோரின் வாக்கு விழும் சமயத்தில் 'ஈன்ற பொழுதினும் பெரிதுவப்பாள்' என்கின்றார் திருவள்ளுவர்.

ஒரு வயது முதிர்ந்த தாய் கண் பார்வையின்றி, கூட்டம் நிறைந்த அரங்கில் தொலைதூரப் பார்வையின்றி தன் மகன் எங்கிருக்கின்றான் என்று தட்டுதடுமாறும் நிலையில் வேறொரு வரின் குரலில் இவன் சான்றோன் எனக் கேட்ட நேரத்தில் உள்ள இன்பம் அளவிடற்கரியதுதான். ஆனால் பெரிதுவத்தல் என்றால் பேரின்ப நிலை என்று கொள்ளலாம். உயிரோடு இருக்கின்றேன் என்று மெய்ப்பிப்பதற்காக குழந்தை ஒலி யெழுப்பியதும், ஆம் அவன் உயிரோடும், மக்கட்பண்போடும் வாழ்ந்தான் என்று சான்று தந்த சான்றோரின் வாக்கு பேரின்பம் தருவது என்பதை எந்த வலியும் இல்லாமல் வந்த உவகை. வலியில்லாமல் நல்வழியில் கிட்டிய சன்மானம், வலியில்லா இன்பம்.

இன்னும் ஒரு நுட்பமான செய்தியும் இந்தக் குறட்பாவில் ஒளிந்துள்ளதாக நான் கருதுகின்றேன் நமது தமிழ்ச்சமூகம் தாய் வழிச்சமூகம், சிக்மன் ப்ராய்டு என்ற மேல்நாட்டு அறிஞன் பால் கவர்ச்சியினால் தந்தையின் பாசம் தலைமகள் மீதும், தாயின் பாசம் தலைமகன் மீதும் அதிகம் இருக்கும் என்றும் அது ஒரு இனக்கவர்ச்சியின் தாக்கம் என்ற கொள்கையைக் கூறியுள்ளார்.

ஆயினும் பாச உணர்ச்சி என்ற ஒரு நிலை தந்தையைவிடத் தாய்க்கே தருவது தமிழினம். கருணை, அன்பு மற்றும் பாசம் என்று சொல்கின்ற நேரத்தில் பெண்ணும், தாயுமே மனக்கண் முன் வருவர். குறிப்பாக ஒரு பெண்ணுக்கு 2000 ஆண்டுகட்கு முன் தமிழினத்தில் மரியாதை தருவது நன்மக்கட்பேறு ஆகும். எனவே தான் மலடி என்ற சொல்லை நீக்கியது, அதுவும் ஓர் ஆண் மகவு, என்ற நிலை உயர்ந்த நிலையாகக் கருதப்பட்டது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற தமிழன் பெண்டிற்கு தரும் உயர்வு மாநிலத்தை பெருமைப் படுத்துவதாகும்.

இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தார். (குறள்-270)

என்று வாழ்ந்தது திருவள்ளுவர் காலம். துறவு நிலையில் உள்ள சிலரைக்காப்பதற்காக பலர் இல்லறத்தில் வாழ்ந்த காலம். இல்லறத்தின் மாண்பு விருந்தோம்பல்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (குறள்-86)

என்றெல்லாம் வாழ்ந்த காலம். ஒரு பெண் திருமணம் புரிந்து கணவனுடன் பெருமையோடு வாழ்வதை விருந்தினரும், துறந்தாரும் வாழ்த்துவார்கள். ஆயினும், கணவன் இல்லாத நேரத்தில் விருந்தினர்கள் வீட்டிற்கு வருவதில்லை.

கண்ணகி கோவலன் பிரிந்த நிலையில் கலங்கியது கூட ஆன்றோர்க்கு அமுது படைத்திட இயலாமைக்கே... ஆயினும், ஆண்மகன் வீட்டில் இருக்கின்றபோது விருந்தினர் வருவதற் கான வாய்ப்பு அதிகமாகின்றது. எனவே தான் தலைமகனின் வரவு தலைமகளின் வரவைவிட தாய்க்கு இனிமை தருகின்றது. தமிழனின் இந்த உயர்வு நிலை எங்கே!

ஆண்மகன் உணவிற்கு தேவையான வேலைகள், இலைபறித்தல், மரத்திலிருந்து கனி பறித்தல் போன்ற வேலைகளை செய்வதால் ஆண்கள் உள்ள வீடுகளுக்கு விருந்தினர் செல்வர். 'மோப்பக் குழையும் அனிச்சம் போல்' முகம் நக விருந்து படைத்தல் எளிதாகும். இளையான்குடி மாறனார் வைத்த விருந்தினை இங்கே எண்ணுதல் நலம்.

சிக்மன் ப்ராய்டின் பாலுணர்ச்சி தத்துவம் எங்கே?..

தமிழனின் வாழ்வியல் உன்னதம் எங்கே! இச்சிறப்பினை இக்குறட்பாவில் தருகின்றான் வள்ளுவன்.

அத்துடன், தன்மகன் பொருள் ஈட்டி விருந்தோம்பல் செய்ய வழிவகுப்பான் என்ற பெருமையும் ஒரு சேர அவளுக்கு உவகை வரும் தருணம். பயணத்தை ஆரம்பித்து மீண்டும் சிறப்பாக வீடுவந்து சேர்ந்தபிறகு, இறைவனுக்கு நன்றி கூறுவதைப் போன்று தனது பிறவிப்பயனை அடைந்ததாக உணர்கின்றாள் தாய். பெண்ணின் அணிகலன்களை சீவகசிந்தாமணி, வளையா பதி, குண்டலகேசி. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்று

பெரும் காப்பியங்களாக ஆக்கிய தமிழன் பெண்கள் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்பது பிறர்வாயால்தான். குறிப்பாக, கணவன் அல்லது அக்கம்பக்கத்தினர் கூறுகின்ற சொற்களால் என்று பெரும்பாலோர் பொருள் கூறுகின்றனர். என்றாலும் அதனை நேரடியாகக் கேட்கும் இன்பத்திற்கு, ஈடாகுமா? சபைகளில் பெண்கள் இல்லை என்பர் சிலர்.

ஆயினும். எனக்கு அதற்கு மாற்றுக் கருத்து உண்டு. பெண்ணைப் போற்றுகின்ற சமூகத்தில் ஒரு மனிதனைச் சான்றோன் என்று சான்றளிக்கும் தருணங்களில் அவைகளில் தாயின் முன்னிலையில் செய்வதற்கான அமைப்பு இருந் துள்ளது. தாயின் முன்னிலையில் தன் கண்ணால் குழந்தையைப் பார்த்து, அவன் அழுகைக் குரலால் உவகை எய்திய உலகை, அதே கண்களால் வளர்ந்த தலைமகனைப் பார்த்து அவனைச் சான்றோன், என சிறப்பு, செய்யும் அவையில் சான்றோன் இவன் என்ற அறவிப்பைக் கேட்கும் தாயின் உவகை பேருவகை. அத்தருணத்தில் நன்றிப் பெருக்குடன் தாயை அணைக்கும் தருணம் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் தருணம். அந்தக் காலத்தில், சான்றோன் எனச் சிறப்புச் செய்கின்ற அவை திருவள்ளுவர் காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

ஈன்றவள் கேட்க விருதுகள் (பட்டமளிப்பு விழா) வழங்கும் மரபு தமிழ்மரபு. அது சிறிது சிறிதாக மாறிப் பெண்களை புறந்தள்ளிய காலமாக மாறிப்போனது என்றும் நான் கருதுகின்றேன். அத்தோடு தாய்மார்கள் குழந்தை பெறுகின்ற போது உவகை கொள்கின்றனரா? என்று பல பல்கலைக்கழங்கள் ஆய்வு செய்துள்ளன. ஹார்வர்டு பல்கலைக்கழகமும் அதில் ஒன்று. சமூகம் ஏற்றுக் கொண்ட தம்பதிகள், குழநதை வேண்டி காத்திருக்கும் தாய்மார்கள் மட்டுமே பிரசவ வலியைக் கடந்து உவகை கொள்கிறார்கள் என்பதே அவற்றின் முடிவு. சமுதாய வன்முறையில் குழந்தை ஏந்திய தாய்மார்கள் குழந்தைப் பருவத்தில் கருத்தரித்தலில் உவகை கொள்வதில்லை. 48 பிரிவுகளாக உலகம் பிரிக்கப்பட்டு பல லட்சம் தாய்மார்களைச் சந்தித்து

ஈன்றபொழுது உவகை தந்தது 3 பகுதிகளில் மட்டுமே என்றும் கண்டறிந்தனர்.

இக்குறட்பாவின் நுட்பமான செய்திகள்:

1. ஒளியை ஒலி முந்தும் - சில இடங்களில்

2. துன்பம் கூடிய இன்பம் - துன்பமில்லா இன்பம் என்ற நிலை உண்டு

3. தமிழன் விருந்து போற்றும் மாண்பால் சிக்மன் ப்ராய்டு சொல்லும் கோட்பாட்டை வென்றவன்

4. தகுந்த அரங்கில் தாயின்முன் சான்றோர் தரும் பாராட்டும் அவை அமைப்பு தமிழர்கள் வாழ்வின் ஒரு பகுதி.

5. பெண்மையைப் போற்றுவதின் மூலம் ஆண்மையைப் போற்றுவது இக்குறள்.

எனவே, தமிழனின் நாகரிகத்தை பெருமைப்படக்கூறும், இக்குறட்பா எனக்குப் பிடித்த குறட்பாவாகும். காந்தியைப் போல், அப்துல்கலாம் போல் உலகம் முழுதும் தன்மகனைச் சான்றோன் என்று ஒலிக்க அவ்வொலியைக் கேட்டதாயின் செவி தரும் இன்பம், பேரின்பம் என்றால் மிகையாகாது. சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடன். ஆதை மெய்ப்பிக்கும் அரங்கு ஈன்று புறந்தந்த தாய் தமிழனின் மாண்பு என்னே! என்னே!!

வாழ்க வள்ளுவம்...!

வளர்க பாரதம்...!

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை' என்ற சீர்களின் மூலம் ஆய்வு கீழ்க்கண்ட வினாக்கள் எழுப்பப்படுகின்றது.

குழந்தை வெளிவரும் தருணத்தில் தாயின் நிலை

1. வயது

2. நாடு

3. மொழி

4. இனம்

5. கல்வித்தகுதி சார்ந்ததா.

6. தாய்மை ஆனதற்கான காரணம் நியாயமானதா? நியாயமாயின் ஆண் பெண் குழந்தைகளுக்கு ஏற்ப வேறுபடுமா? அதனை எவ்வாறு கணிப்பது.

7. உண்மையான தாய் எப்போது பிறக்கிறாள்?

ஆம் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்ற பாடல் இச்சிந்தனையிலேயே உதித்திடும் என்றாள் யாழினி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிற நாட்டு அறிஞர்கள் இந்தியாவை நோக்கி படையெடுத்து பல அரிய செல்வங்களைக் கொள்ளை கொண்டனர். பொன்னும், வைரமும் கொட்டிக் கிடந்த செல்வங்களும் கொண்டு செல்லப்பட்டன. ஆயினும் ஞானச் செல்வம் தேடியும் சிலர் வந்தனர். இந்தியாவில் தென்பகுதியைத் தேடியவர் கொலம்பஸ். அவர் இந்த மண்ணில் இறங்கினார் என்று யாழினி முடித்தார். கண்ணன் பாராட்டினான். தொடர்ந்து மாணவர்களோடு கலந்தாய்வு செய்தனர்.

அத்தியாயம் 15

தொடர்ந்து உரையாடல் நடந்தது. உலகப்பொதுமறையாம் திருக்குறளில் 'உலகம்', 'உலகு' எனும் சொல் பலபொருட்களில் கையாளப்படுவதைப் பல குறட்பாக்களின் மூலம் அறியலாம். வையம் போற்றவாழும் கலை கற்பிக்கவே தமிழ் மறைகள் தோற்றுவிக்கப் பெற்றுள்ளன. உலகத்தோடு ஒட்டவொழுகல் வேணும் எனில் உலகம் யாது? என்று உணர்தல் வேண்டும்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என சேக்கிழார் பெருமான் சிவபிரானின் பெருமையைப்பேசுவார். உலகம் பிறந்தது எனக்காக, ஓடும் நதிகளும் எனக்காக என்ற உணர்வில் வாழ்பவர்கள் நம்பிக்கை ஊட்டுபவர்களாகத் தலைவர்களாக

உருவாகின்றனர். வள்ளுவர் உலகம் பழிப்பதை ஒழித்துவிடு என்று கூறுகின்றார். அவரது பல குறட்பாக்களில் யாதும் ஊரே! யாவரும் கேளிர் என்ற செய்தியும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற செய்தியும் எங்கும் மிளிர்கின்றது. கம்பனின், உலகம் யாவையும் தாமுளவாக்கலும் என்ற பாடலும் நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையை 'உலகம் உவப்ப...' எனத் தொடங்குவதும், உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே-என்ற தொல்காப்பியர் கூற்றும் ஒத்த செய்தியைத் தருகின்றன. இவ்வழி நல்லோர்கள் நிறைந்தது உலகம் என்பது வள்ளுவரின் கூற்றாக இருப்பதைப் பலகுறட்பாக்கள் மெய்ப்பிக்கின்றன.

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் (குறள் 504)

எனும் குறட்பாவில் ஒவ்வொரு மனிதனிடமும் குணமேமிகும் எனும் செய்தியும் மறைந்திருப்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இவை, வள்ளுவர் காட்டும் 'உலகு' என நாம் தொல்காப்பியம் வழி தீர்மானிக்க வாய்ப்பு இருந் தாலும், அதனினும் நுட்பமான செய்திகளையும் வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

உலகம் பற்றி கண்ணன் பேசுகையில்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (குறள் - 1)

கடவுள் வாழ்த்து முதல் பாடல் மிகஆழமான கடலை ஒத்த பாடலாகும் என்று குறிப்பிட்டான். இதனை ஆராய முற்படுகையில் பாற்கடலைக் கடைந்த கதையே நினைவுக்கு வருகின்றது. இனி இக்குறட்பா வில் கூறப்படும் உலகு எனும் சொல் தொல்காப்பியம் காட்டும் 'உயர்ந்தோர்' எனும் நோக்கில் இல்லாமல் அண்டத்தின் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிப் பேசுவதாகக் கொள்ளலாம்.

'அகரம்' என்பது 'அ' என்ற எழுத்தின் ஒலிவடிவம். முதலில் ஒலிஎழுப்பின உயிர்கள். இன்றும் மனிதனைத் தவிர ஏனைய உயிர்கள் ஒலியினாலே தொடர்பு கொள்கின்றன. ஒலிகளின் தலைவன் 'அகரம்'. ஒலிவடிவத்திற்குப் பின் 'வரிவடிவம்'

(எழுத்தெல்லாம்) உருவானது. அதுபோன்றே இந்த பிரபஞ்சமான உலகும் தோன்றியதற்கான அடிப்படை ஒலியாகும். ஆதியில் தோன்றிய பகவன் Big Bang (பேரண்டப் பிளவு) என்ற அதிர்வே உலகம் (பேரண்டம், அண்டம், பால்வெளி, நட்சத்திரங்கள், சூரியன், கிரகங்கள், பூமி, நிலா, விண்கற்கள்) தோன்றுவதற்கு அடிப்படை. ஏனவே எழுத்துகளைப் போன்றே, உலகம் தோன்றுவதற்கும் காரணம் ஒலியே, அதிர்வே, என்றும் பொருள் உணரலாம்.

'அண்டப் பிளக்கத்து உண்டைப் பிறக்கம்' என்ற மணிவாசகர் வாக்கும், திருமூலரின் தமிழ்வேதத்தின் உட்கிடக்கையான அகரஉகரமகர உட்சேர்க்கையை 'ஓம்' எனும் மந்திர ஒலியாகக் குறிப்பதை ஈண்டு நினைத்துப் பார்க்கலாம்.

கிறித்துவத் திருமுறை ஜ *1:1* ன் படி

In the beginng there was a word and the word was me!

இத்திருமறைச் செய்தியை உற்றுநோக்கின் நம் உலகம் நம் வார்த்தைகளே என்றாகிறது. எனவே 'அ' என்ற எழுத்தைப் போல் எழுத்துக்களுக்கும் வார்த்தைகளுக்கும், அடிப்படை 'அகரம்'. இறைவனே உயிர்களின் தலைவன். இன்சொற்கள் வழியாக இறைவனைஅடையலாம் என்றோ இறைவனுக்கு ஒப்பான தலைவன் ஆகலாம் என்பதும் இதன் மூலம் உள்ளங்கைநெல்லிக்கனி. எனவேதான் தாள் போற்றி, கழல் வெல்க, என்று மணிவாசகரும், எண்ணியவர் திண்ணியராகப் பெறின் என்று உயர் எண்ணத்தால் எதையும் பெறலாம் என்றும் வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

முதற்குறட்பாவில் பேரண்டத்தின் பிளவைப்பாடிஅதன்பின் நிலமிசை நீடுவாழ்வார் என்ற குறட்பாவிற்குப்பின் பூமி, உயிர் கூட்டம், உயர்ந்தோர் எனும் பொருளில் உலகம் என்ற சொல்லைக் கையாளுகின்றார் என்றும் தெளிவாகிறது.

அகரம் இறைவனுக்கும், உயிர்க்கும் பொது. சொற்களே உலகம் - எனில் சொல்லுகசொல்லில் என்றுஅதன் பொருளை விரித்து பலகுறட்பாக்களைச் செய்துள்ளார்.

"கற்றிலன் ஆயினும் கேட்க"
"சான்றோன் எனக் கேட்டதாய்"
"என்னோற்றான் கொல் எனும் சொல்"
"நாகாக்க!"

புறங்கூறாமை, வாய்மை, இனியவைகூறல்... போன்ற அதிகாரங்கள் எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும்... என்று சொற்கள், கேட்டல் ஆகியவற்றின் உயர்வை விளக்க பல குறட்பாக்களைச் சமைத்துள்ளார்.

உலகம் என்ற சொல் பிரப்ஞ்சம் என்ற நிலையில் முதல் குறட்பாவில் கையாளப்படுகின்றது.

திருக்குறள் இயற்றப்பட்ட காலத்தில் பூமி தட்டையாக கருதப்பட்டது. பின்னர் அரிஸ்டாட்டில் காலம் வரை பூமி உலகின் அண்டத்தின் மையம் என்றும் சூரியன், சந்திரன் மற்றும் கிரஹங்கள் பூமியைச்சுற்றி வருகின்றது என்றும் கருதப் பட்டன. சுழன்றும் ஏர் பின்னது உலகம் என்ற குறட்பாவின் மூலம் பூமி சுழல்கின்றது என்ற வள்ளுவன் 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பது பேரண்ட பிளவின் பின் பல மில்லியன் ஆண்டுகட்கு பின் சூரியன் (பகவன் -பகலவன்) தோன்றியது. ஈர்ப்பு அலைகளை வளைத்தது. பின் கிரகங்கள் தோன்றின. அதனால் கிரகங்கள் அதைச்சுற்றிவந்தன. கிரஹங்கள் ஈர்ப்பு அலைகளை வலைத்தன. அவற்றை நிலாக்கள் சுற்றி வந்தன என்றும் கருதலாம்.

முதற் குறளிலேயே இன்றைய விஞ்ஞான உலகத்தின் அடிப் படைத் தேடலின் விடையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எம் ஐயன் வள்ளுவன் தந்திருக்கின்றான் என்ற செய்தி கரும்பாய் இனிக்கின்றது இல்லையா? என்று இடைமறித்தாள் யாழினி. ஆமாம் என்றனர்.

படைக்கப்பட்ட உலகம்

இனிஉலகம் தானாய் தோன்றியதா? படைக்கப்பட்டதா? இந்தக் கேள்வி இன்றும் சர்சைக்குரிய கேள்வி. standard model என்ற கொள்கை பேரண்டப் பிளவுவெற்றிடத்திலிருந்து

தோன்றியது என்றும், பேரண்டப்பிளவின் நுண்துளிகள் சில வினாடித் துளிகளில் சமச்சீர்கேடு உருவாகி, அதிலிருந்து கடவுள் துகள், மற்றும் நுண்துகள்கள் உருவாகி, அதனின்று இன்றைய அண்டம், விண்வெளி, பால்வெளி, நமது சூரிய குடும்பம் மற்றும் பூமி, உயிர்கள், தோன்றியது என்றும் நிறுவ முயற்சி மேற்கொண்டு பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆதிபகவன் என்ற சொல்லாட்சி மூலம் இறைவன் என்ற சக்தியையே குறிக்கின்றார் என்று எடுத்துக்கொண்டாலும் வகுத்தவன், பகுத்தவன் என்ற இறைவன் அல்லது இயற்கை உலகின் நாதன் அல்லது தலைவன் இறைவன், என்ற செய்தியும் மறைந்துள்ளது.

''விச்சதன்றியே விளைகு செய்குவான்'' என்ற மணிவாசகர் ''விண்ணும் மண்ணும் வைத்து வாங்குவான்'' என்று சொல்வதைப் போல்

பேரண்ட உலகைப் படைத்தவனே... உலகையும் படைக்கின்றான். அகரத்தைத் தலைவனாகக் கொண்டது போல், இறைவனைத் தலைவனாக ஏற்றுக்கொள்பவன் நல்லுலகமாகி உயர்ந்த நெறிகளுக்கு வழிவகுக்கின்றான், என்றும் சொல்லலாம்.

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லைஎனும்
பெருமைஉடைத்து இவ்வுலகு *(336)*

என்று காலத்திற்கேற்ப மாறிக் கொண்டே வரும் பெருமை உடையதே இப்பூமி என்று வள்ளுவம் பகர்கின்றது. இக்குறட்பாவில் நேற்று இருந்தவன் இன்று இல்லை எனும் பெருமை கொண்டது என்று உயிர் பொருளைக் குறிப்பதால் உலகு என்பது பூமியைக் குறிக்கும். ஆன்மாக்கள் அழிவதில்லை என்ற நிலையைப் பார்த்தால், பேரண்டம் குறிக்கும்.

மேலும், சிந்திக்க குறள் 101ஐ ஆய்வோம்.

செய்யாமற் செய்தஉதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது (101)

என்ற குறட்பா கூறுவதுபோல் வள்ளுவர்காட்டும் உலகம் பெரும்பான்மையாக, வானுலகம், மண்ணுலகமாகும்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றும் கொல்லோ உலகு. - (211).

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு- (23)

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. (27)

போன்ற குறட்பாக்களில் மண்ணுலகைச் சுட்டும் குறட்பாக்கள் என்று கொள்ளலாம். ஏனெனில் இது உயர்ந்தோர் மாட்டே என்ற நிலையில் உள்ளது.

பெற்றால் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு. (58)

குறள் 58 பெண்ணின் பெருமை புவி கடந்த வான் செல்லும். எப்பொழுதென்றால், நல்ல துணைவன் அமைந்தால். இது வானுலகைச் சுட்டும் குறட்பா. என் நண்பி யாழினி மற்றும் இங்குள்ள அனைவருக்கும் நல்ல துணை அமைய வேண்டும் என்று சொல்லிவிட்டு, இறுதியாகக் கூறுகிறேன் என்று பேச ஆரம்பித்தான் கண்ணன்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (குறள் 1)

என்ற குறட்பா குறிப்பிடும் 'உலகு' எனும் சொல் பேரண்டமான பிரபஞ்சமாகும் என்பதும் அதன் உள்ளிடக்கை அறிவதே கற்றதனால் ஆய பயன் என்பதே வள்ளுவரின் வாக்கு என்றும் அறிந்து இன்புறுவோம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்ற வகையில் பல குறட்பாக்களை யாத்துள்ளார். 'ஒலி' முதல் மொழி போல்; 'அ' முதல் அண்டம்.

ஒரு மொழி என்பதை மனிதர்களுக்கு இடையேயான தொடர்பு சாதனமாகவே 2000 வருடத்திற்கு முன் கருது கோளாக இருக்கும்பொழுது அகரம் முதல் உலகம் என்பதன் மூலம் உனது மொழியே உனது உலகம். உன் உலகத்தை உன்

வாக்கால் உருவாக்குகிறாய் என்றும் வள்ளுவர் போதிப்பது புரிகிறதா? யாகாவராயினும் நாகாக்க! 'அகரம்' உன் உலகின் துவக்கம். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' உன் உலகில் என்ற சிந்தனைகள் இனிமை பயப்பன. ஸ்டீபன் ஹாக்கிங் என்ற அறிஞன் தேடிய முடிவு முதல் குறளில் அமைந்துள்ளது எனில் மிகையாகாது. முதல் குறளில் முதல் அடி 15 எழுத்து. இரண்டாவது எடி 11 எழுத்து. வகுத்தால் 15/11=1.36363636... என்ற முடிவுறா எண். எனவே இக்கேள்வி முடிவுறாக் கேள்வியே என்று சொல்லாமல் சொல்கிறாரோ வள்ளுவர் என்று முடித்தான்.

அத்தியாயம் 16

கண்ணன் பெற்றோர், பூங்கொடி, பூங்கோதை மற்றும் கண்ணன் அனைவரும் அன்றைய தினம் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்துள்ளனர். இன்று ஒரு தேசியக் கருத்தரங்கம். இதில் ஒரு கலந்துரை ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. எல்லோரும் வாருங்கள் என்று அழைத்துச் சென்றிருந்தான். உலகுக்கே நயத்தக்க நாகரிகம் கற்பித்த தமிழ்ச்சமுதாயத்தில் இன்று நடந்துவரும் சீர்கேடுகள் ஏராளம். காரணம் பிற மொழிப்பற்று, பிறகலாச்சார ஆதிக்கம். அத்தோடு பொருள் மயமாக்கல், வணிகமயமாக்கல், உலக மயமாக்கல் என்ற போர்வையில் சில நாடுகள் கீழை நாடுகளைச் சந்தைகளாக்கி விட்டன. அதற்கு அடிமையானது தமிழினம். பூங்கொடி பேச ஆரம்பித்தாள். அக்காலம் முடியரசனார் காலம். சாதிச் சண்டைகள் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தமிழ்நாட்டில் மலிந்திருந்த காலம். கவிஞர் முடியரசர் பள்ளி ஆசிரியராய் பணியாற்றிய காலம். சாதிச்சண்டைகள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் திணிக்கப் பட்ட காலம். அறிவியலில் ஆபத்துக்கள் துவங்கிய காலம். அரசியலில் பொது நாகரிகம் நலியத் துவங்கிய காலம். மறைந்து, தளர்வடைந்தது தமிழர் மட்டுமல்ல. தமிழும் தான்.

தமிழனுக்கு வீரத்தை அள்ளித் தந்த கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன் என்ற வழியில் தரமான கவிதைகளை யாத்தவர் வீறுகவி முடியரசனார். கவிஞர் முடியரசனாரின் பாடு பொருட்கள் பல இருக்க, தமிழின் நிலையையும் தமிழனின் நிலையையும் கண்டு பொறுக்காமல் நெஞ்சு பொறுக்கு தில்லையே என்ற பாரதியின் வரிகளைத் தலைப்பாக்கி பாடிய அவரது படைப்புக்கள் காலத்தை விஞ்சி நிற்கின்றன.

சாதிகள் தமிழனின் வாழ்வில் இடைச்செருகல்கள். அந்நியம். அதை அனைத்து பாடல்களிலும் அவர் குறிப்பிடு வார். தம் வாழ்விலும் சாதிமறுப்பினை கடைபிடித்தார். அவரது கனவு தமிழ்நாடு வள்ளுவர் நெறியை போற்றும் நாடாக வேண்டும் என்பது. அதில் இருந்து விலகியவர்களை ஆள்பவர் ஆயினும் கடுமையாக எதிர்த்தார். வள்ளுவர் வழியில் இருந்து மாறுபடும் செயல்களைச் செய்யும் பொழுது, தான் சார்ந்த நிறுவனங்கள், ஆள்பவர்கள் யாராயினும் திருந்துமாறு வலியுறுத்துவார். திருவள்ளுவர் தின திருக்குறள் மேடைகளில் அவரது அபரிதமான ஆற்றல் வெளிப்படுவதை பலர் கண்டுள்ளனர்.

இன்பச்சுவை இருக்கும்-வெப்பரிய
முப்பால் நல்ல அறம் இருக்கும், நாடும் பொருள் இருக்கும்
சொல்லரிய அமுது அருந்தி மொய்ம்பு பெற வளீரோ!
எப்பாலும் சொல்லேல் இனி.

-என வள்ளுவர் கோட்டம் என்ற கவிதையில் பதிவு செய் கின்றார் முடியரசனார்.

வள்ளுவர் நெறியில் ஆட்சி வரவேண்டும் என்பது முடியரசனாரின் ஆசை. தனக்கு ஒரு நாட்டை அவர் கற்பனை செய்கிறார்.

பேரால் முடியரசன் பேரிடர்கள் உற்றாலும்
பேரா முடியரசன் பெற்று வந்தேன் கொற்றத்தை,
....
வள்ளுவனார் சொல்லி வைத்த வாழ்வு குறள் நெறியில்
எள்ளளவும் கோடாது ஒழுகிவரும் கொற்றவன் யான்!

முப்பால் முகிலாகி மும்மாரி திங்கள்தோறும்
தப்பாமல் பெய்வதினால் தண்ணீர் நிறைந்திருக்கும்.

கம்பனின் ராமராஜ்யம் விஞ்சும் நாட்டினை வள்ளுவர் நெறியில், அன்பு அரசனும், மதிகொண்ட அமைச்சர்களும், நெஞ்ச வயலில் அன்புநீர் பாய்ச்சி, உழவு செய்து உலகெங்கும் கொண்டு செல்லும் இன்ப உலா காட்சி நம்மை பரவசப் படுத்தும். துன்பத்தை நீக்கி இன்பத்தை ஊட்டும் திருவள்ளுவர் நெறியில் ஆட்சிகள் இல்லையே என்ற ஏக்கம் முடியரசனார்க் கும் நமக்கும் வருவது இயற்கைதானே!

வெண்ணிலவை வள்ளுவர் கோட்டம் கவிதையில் நான்கா வது பகுதியாக ஏன் சிரித்தேன் என்று பாடியுள்ளார். பாடல் திருவாசகத்தை போன்று நம்மை உருக்கும்.

அண்டப் பெருவெளியில் ஆடிச்சுழன்றுவரும்
உண்டைப் பெருவடிவம் உற்றதொரு பூதலத்தில்

என துவங்கும் பாடல் தொடர்ந்து புல்லினங்கள், கடல் பகுதி, காற்று என்று இயற்கையின் காட்சிகளை நம் கண்முன் கொண்டுவரும். நமக்கு கனவுக்காட்சி தரும். உதாரணமாக நிலாவை பற்றிய அவர் பாடல்

மேகத் திரைக்குள் மேனி மறைத்தாலும்
வேகத்தோடு மீண்டும் விண்ணுளவி வந்து வந்து காட்டி நலம்
கொட்டும் குளிர்மதியைக் கோதிலா வெண்ணிலவைக்
கண்டுகளிப்பதற்கும் காட்டும் அதன் எழிலை
உண்டு சுவைப்பதற்கும் உற்ற வழி இல்லை
....
பண்டைத் தமிழ் தந்த பண்ணமைந்த யாழ் இருந்தும்
சுண்டி தெளித்து இன்பம் துய்க்க வரவில்லை.........

என்ற வரிகள் நெஞ்சை பிளக்கும்.

பாருலகப் பேரறிஞன் பாவலனாம் வள்ளுவன்தான்
கூரறிவுப்பேருணர்வால் கூறிவைத்த பொன்மொழியை
மாநிலமே காணாத மாநிதியை பெற்றிருந்தும்
அப்பெருமை தேர்ந்து உணர அவ்வழியில் சென்று ஒழுக
எப்போதும் சிந்திக்க இங்கே திறன் இல்லை

என்றும் பணக்காரன் பட்டினி கிடப்பது போல், எல்லாம் இருந்தும் சோமாலியா குழந்தைபோல் நைந்து இருக்கும் தமிழன் நிலை குறித்து சிந்தித்த மாபெரும் கவிஞர் முடியரசனா ரென்பேன். இடைச்செருகலாய் சில வரிகள் உரிமையோடு கேலி செய்யும். இந்த ஏளனக் கேள்வியை பாருங்களேன்!!

பிறப்பொக்கும் அனைத்துயிர்க்கும் என்று சொல்லிப்
பேராசான் ஆண்டு இரண்டாயிரங்கள் செல்ல
இறப்புக்குள் போய்விட்டான் என நினைத்தே
எத்தனையோ ஆயிரங்கள் சாதிசொல்லிப்
பிறப்பிக்கும் ஆற்றலினைப்பெற்றுவிட்டோம், ...
பிறகெதற்கு வள்ளுவர்க்கு த்திருநாள் ஒன்று?
என்று எனக்கு தெரியவில்லை!!

இப்படி ஏளனம் செய்த கவிஞர் உடனடியாக ஒரு வீச்சோடு நம்மை அறைவதுபோல் ஓரிரு வரிகள் சொல்வார்.

வேதியனைப் பஞ்சமனைப் படைக்கும் வேதம்
வேற்றுமையை நமக்குள்ளே இன்னுமோதும்,
மேதினியைப்பால்படுத்த வந்த சாதி
மேலும் இனி வாழ்வதுதான் என்ன நீதி?
ஓதிவரும் குறளுக்குத் திருநாள் என்றால்,
உண்மையில் சாதியினி ஒழிதல் நன்றாம்.

என்பார். அடித்தகை அணைப்பது போல், இறுதியில் குழந்தையை தாய் கொஞ்சுவது போல் மென்மையாய் முடிப்பார் ‘சாதியினி ஒழிதல் நன்றாம்’ என்று. 2000 ஆண்டு களுக்கு பின்னர் வள்ளுவர் முடியரசனார் வடிவில் பிறந்தாரோ!! என்று ஐயம் தோன்றும் அளவிற்கு கவிஞர் முடியரசன் கடிதோச்சி மெல்ல இதமாய் முடிப்பார்.

திருவாசகம்-மணிவாசகரின் திருப்புலம்பல் என்பர். அதுபோன்று தமிழுக்காக புலம்பியது முடியரசன் கவிதைகள்.

சிறக்கின்ற வாழ்வியலைக் கற்றோமல்லோம்
சிறு விலங்குக்கூட்டம் என வாழ்ந்து விட்டோம்

என்ற சொல்லைக் கூறிய மறுகணம்

வாழ்வைப் பிணி என்றும் பிறவாமை வேண்டும் என்றும் பாடல்களைக் கேட்ட நாம் வாழ்க்கை இன்பம்என்று கூறிய வள்ளுவன் பாடல்களை மறந்தோமே!! தமிழர்களே? என்று வாஞ்சையோடு கேட்பார். பூங்கோதை இலங்கையில் தங்கள் உறவினர் படும் கஷ்டங்களை நினைத்தாள். தொடர்ந்து பேசினாள்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இரும்பூது எய்திய நிலை என்ன? இன்றைய தமிழனின் நிலை என்ன? உலகம் எங்கும் ஓட ஓட விரட்டி விட்டனர். தமிழ்நாட்டில் ஒருபுறம் கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவி, பேழையில் இருக்கும் பாம்பென வாழ்கின்றான். விவசாயி கிடக்கின்றான். இளைஞர்களுக்கு வேலை இல்லை. பசியும் பஞ்சமும். இலவசங்களுக்காக மக்கள் கை ஏந்தக் காத் திருக்கும் அவல நிலை. காசு என்றால் பிணமும் வாய் திறக்கும். காரணம் பணம் பதவி. இருக்கிறவன், இல்லாதவன், ஆள்பவன், ஆளப்படுபவன் அனைவரும் கையேந்தும் அவமானம். கல்விக் கூடங்கள் வியாபார க் கூடங்களாய் பரிணமிக்கின்றன. கல்விக்கடவுள் பிரம்மன் அடிமுடி விசயத்தில் பொய் சொன்னான். அதனால் பொய் சொல்லும் போட்டி உயர் கல்வி கூட்டங்களில். ஒருகாலத்தில் அறிவும் அருளும் செல்வமும் நிறைந்த தமிழனை உலகம் கைகூப்பி வணங்கியது. ஆனால் அந்நிலை நீங்கி இன்றைய நிலையில் தமிழன் வாழ்வில் நடந்ததுதான் என்ன? சரி, செல்வத்தின் கடவுள் திருமால் உண்மை சொன்னாரே. இப்ப அவரும் மிலேச்சர்கள் கைக்குப் போய்விட்டாரே என்று கேட்டாள்.

குறள் மனப்பாடம் செய்து ஒப்பிப்பது, திருக்குறளுக்கு கோவில் அமைப்பது, திருக்குறள் உரைகள் எழுதுவது, மேற் கோள் காட்டிப் பேசுவது, இவை மட்டுமே குறள் வழி நடப்பது ஆகாது. கையேந்துவதும், கையூட்டு வாங்குவதும் தமிழன் அறியாப் பண்பாடு.

தன் நெஞ்சறியப் பொய்யற்க,
கற்பெனப்படுவது சொல் திறம்பாமை,
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.

என்று உலகளாவிய தமிழர் வாழ்வியலில் உதித்த திருக்குறள், அதன் உதயத்திற்கு களமான தமிழ்நாடு, இக்காலத்தில் இருக்கும் நிலையை நினைத்தால் நெஞ்சு பொறுக்கு தில்லையே. அவளது கலக்கத்தைக் கண்டு பூங்கோதையும் கண்ணீர் விட்டாள்.

அந்த ஒப்பற்ற தன்மானத் தமிழன் எங்காவது உள்ளானா? உலகின் எந்த மூலையிலாவது இருக்கின்றானா? என்ற சந்தேகம் அனைவருக்கும் உள்ளது. தமிழ்நாட்டில் வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் எங்கும் காண்கின்றோம். உண்மைத் தமிழன் கடல்கோளினால் அழிந்துபோயினனா?

நாமெல்லாம் தமிழர்களா? என்ற நிலையில் குருதி கொதிக் கின்றது. ஆனால் அத்தனையும் தாண்டி தமிழன், வள்ளுவரைப் போற்றும் தமிழன், தமிழர்கள் ஒரு சிலர் உலகில் உள்ளனர். நல்லார் ஒருவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை போல் உலகைத் தாங்குகின்றனர், என்பார் முடியரசனார்.

இதோ அப்பாடல்

குறள் பிறந்ததிரு நாட்டில் பிறந்த மாந்தர்
குறையுடைய வாழ்வினராய் வாழ்ந்தாரேனும்
அருள் நிறைந்த மனத்தினராய் குறள் காட்டும்
அருநெறியில் வலுவின்றி ஒழுகும் சான்றோர்
ஒரு சிலர் தாம் ஆங்கே வாழ்தலாலே
உலகம் இன்னும் அழியாமல் நிற்க கண்டோம்!
தெருளறிவு தருநூலை ஓதி ஓதித்
தெளிந்தொழுக முயன்றிடுவோம் வாரீர்! வாரீர்!
....
,,,,,,,,
உள்ளமது குழைந்து உமை வேண்டுகின்றேன்
ஒப்பரிய குறள் நெறியை உடைமையாக்கி
அள்ளு தமிழ்ப்பா மொழியை நெஞ்சில் தேக்கி
அளப்பரிய இன்பத்தில் திளைப்போம் வாரீர் !!

திருக்குறள் பற்றிய முடியரசனார் கவிதைகள் அனைவரும் படிக்கவேண்டிய கவிதைகள் எத்தனை கவிதைகள் என்று

எண்ணுவதை விட ஏதாவது ஒரு கவிதையை இக்கால மாணவருக்கு எடுத்து இயம்புதல் தமிழ் வளர்க்கும் பணியாகும்.

திருக்குறள் உலகப்பொதுமறை. இதனைப் பாடும் முடியரசனார் கவிதையை இன்றைய இளைஞர்க்கு எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

இயேசு பெருமான் ஏத்தும் முகமதுவும்
பேசும் உலகப் பெருநெறியின் தத்துவமும்
போதி முனிவன் புகன்றவையும் மாவீரர்
ஓதி உணர்த்தும் உயர்ந்த அருள்நெறியும்
நெஞ்சைக் கனிவிக்கும் நேர்மை மிகு ஆத்திகமும்
நெஞ்சத்துணிவுரைக்கும் நேரில்லா நாத்திகமும்,
நின்று உலகம் நோக்கும் நிலைத்த சமத்துவமும்,
எல்லாப் பொருளும் இதன்பால் உள

என்ற வரிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மொழியில் திருக்குறள் என்ற நூலிருந்தது. அதன்கண் இன்றும் கோலோச்சும் தத்துவங்கள் பல இருந்தன என்றும் சொல்லி நம்மை தலைநிமிர்ந்து வாழ சொன்ன வரிகள். அவைகள் தமிழனின் முகவரிகள். அதைத் தன்மானக் கவிஞர் முடியரசன் குரலில் கேட்ட பலர் இன்றும் உளர். குறள் வழி ஆட்சி அமைய குறளின் பெருமையை வருங்கால தமிழருக்கு எடுத்துச் செல்வோம். சாதி மதம் மறப்போம். சங்கத்தமிழ் வளர்ப்போம். இவ்வழியில் ஆய்வோமானால் சிறந்த படைப்பாளர்களான பாரதி, பாரதிதாசன், முடியரசனார், வ.சுப.மா. அனைவரின் படைப்புக்களிலும் திருக்குறளின் தாக்கம் பற்றிய கட்டுரைகள் நெஞ்சையள்ளும் என்றால் மிகையாகாது. ஒரு இலக்கியம், பல இலக்கியங்களுக்கு இலக்கினைக் காட்டும் என்றால் அத்தகைய இலக்கியத்தில் திருக்குறள் முதலிடம் பிடிக்கும். பூங்கொடியின் பகிர்தலை அபாரம் என்று பாராட்டிய ராமு, தொடர்ந்தார். இதேபோன்று முடியரசனார் தவிர, பிற கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன் போன்றோர் திருக்குறளைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை கலந்தாய்வோம் மீண்டும் ஒருநாள் என்று கூறி முடித்தார்.

அத்தியாயம் 17

அடுத்த நாள் ராமு சாப்பாட்டு மேஜையில் கூறினார். நீயும் பூங்கோதையும் இன்னும் நுட்பமான அறிவவியல் கருத்துகளை மாணவர்களுக்குக் கொண்டு செல்லுங்கள் என்றார். சரி என்று கூறியபடி பூங்கோதையை ஏற்றிக் கொண்டு தனது காரில் பயணித்தான் கல்லூரியை நோக்கி. அன்றும் இயற்பியல் பாடம். பூங்கோதையும் கண்ணனும் சென்றனர் முன் அனுமதியுடன். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது செம்மொழித் தமிழ்.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து (குறள் 353)

என்ற குறட்பாவிற்கு மாண்புமிகு கலைஞர் இப்படி உரை எழுதுகிறார். ஐயப்பாடுகளைத் தெளிந்த ஆராய்ச்சி வாயிலாகத் தீர்த்துக் கொள்பவர்களுக்கு 'பூமியை விட வானம் மிக அருகில் இருப்பதாகக் கருதுகின்ற ஊக்கம் ஏற்படும். அதன் மூலம் அவர்கள் செயற்கரிய செய்வர் என்றும் விளக்கமளிக்கிறார். ஆராய்ந்து தெளிந்த பல அறிவியற் கூறுகள் 'காலந்தோறும் நிறுவுப்பெற்று வருகின்றன. அவ்விதமான விஞ்ஞான முடிவுகள் எதையும் வள்ளுவன் நிறுவவில்லை, ஆனால் தீர்க்க தரிசியான வள்ளுவன் அவற்றில் பலவற்றை முன்கூட்டியே அறிந்திருந் தான்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (குறள் 475)

என்பது ஒரு புகழ்பெற்ற குறட்பா. நிறை அற்ற மயிலிறகே யானாலும் அது ஒரு வண்டியில் அளவிற்கு அதிகமாக ஏற்றப் பட்டால் அதன் அச்சு முறிந்துபோகும். இவ்விதமான அறிவியல் செய்திகள் பல குறள்களில் காணக்கிடைக்கின்றன. இதை தமிழர்களும் எடுத்துச் சொல்லி வந்திருக்கின்றனர். பொதுவான அறிவியல் உண்மைகளுக்கு அப்பால் 35 ஆண்டு களுக்கு முன்னர் கண்டுணரப்பட்டு இன்று பெரும் வளர்ச்சி கண்டுவரும் நானோ தொழில்நுட்பத்தின் கூறுகளைப் போலும்

வள்ளுவன், திருக்குறளில் நேராகவும் மறைபொருளாகவும் உள்ள நானோ அறிவியல் நுட்பங்கள் நுனியைத் திருக்குறளில் காண்போம்.

நானோ தொழில்நுட்பம்

நோபல் பரிசு பெற்ற ரிச்சர்ட் பெயின்மேன் தனது புகழ்பெற்ற caltech விரிவுரையில் there is plenty of room at the bottom என்று குறிப்பிட்டுள்ளார். அவர் அவ்வாறு சொன்னது 1959இல். இதன் பொருள் அணுக்கரு அளவிலான 10^{-15} மீட்டருக்கும் மூலக்கூறு அளவிலான 10^{-6} மீட்டருக்கும் இடையே ஏராளமான இடங்கள் புதிய கருத்து ஊன்றுவதற்கு வாய்ப்பாக இருக்கின்றன என்பதும், இந்த இடைவெளியில் ஆய்வுக்கான களம் இருப்பதை பல விஞ்ஞானிகள் உணர்ந்து கொண்டனர். இடைவிடாத ஆராய்ச்சி மேற்கொண்டனர், 10^{-9} மீட்டர் அளவிலான நானோ தொழில்நுட்பத்தை கண்டறிந்து அதை உலகுக்கு அர்ப்பணம் செய்தனர். 1974ஆம் ஆண்டு எரிக் ட்ரிக்ஸ்லர் என்பவர்தான் நானோ தொழில்நுட்பத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தினார். இன்று நானோ தொழில் நுட்பம் அளப்பரிய வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. நானோ தொழில்நுட்பத்தின் வாயிலாக முதுமை தடுக்கப்படும் சாத்தியமும் இன்னும் இறவாநிலை, ஆயுள் நீட்டிப்பு, நோயற்ற வாழ்வு, மரபணு மருத்துவம் போன்ற பலவும் பேசப்படு கின்றன. இனிவரும் காலத்தில் மரபணுக்களின் குறைபாடு நீக்குவதும் கார்பன் நானோகுழாய்களின் வழியாக புற்று நோயை அழிக்கும் தொழில் நுட்பம் போன்றவையும் இயல்வ தாகும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

குறளில் நானோ

மெய்ப்பொருள் என்ற அதிகாரத்தில் உள்ள அனைத்துப் பாக்களிலும் நானோ தொழில்நுட்பத்தின் கூறுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - குறள் 355

எப்பொருள் எத்தன்மை உடையதாகத் தோன்றினாலும் அந்தத் தோற்றத்தில் உண்மையெனக் கொள்ளாமல் அதன் உண்மைத் தன்மையை காணவேண்டும் என்பது இக்குறட்பாவின் கருத்து. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தன்மை இருக்கும் என்பது மேலோட்டமான பொருள். அடுத்ததாக ஒரே பொருள் பல தன்மைகளை பெற்றிருக்கும் என்ற செய்தியும் இக்குறட்பாவில் இருக்கிறது. நீர் என்ற ஒரே பொருள் பனிக்கட்டியாகவும் தண்ணீராகவும் நீராவியாகவும் மூன்று தன்மைகளையும் பெறும். அதாவது ஒரு பொருள் பல தன்மைகளைப் பெறலாம். இது சராசரி ஆய்வாளர் கொள்ளும் பொருள் எனில் வள்ளுவன் இக்குறட்பாவில் இன்னும் ஆழமான அறிவியல் செய்திகளை புரிந்து வைத்துள்ளார். ஒரு பொருள் நானோ அளவுகளில் அமையுமானால் அவற்றில் அளவிற்கு ஏற்ப அவற்றின் தன்மை யும் மாறுபடும். எடுத்துக்காட்டாக காட்மியம் சல்பைடு அளவிற்கு ஏற்ப ஒளியியல் பண்பு மாறுபடும். (12 நானோ மீட்டர் - சிவப்பு; 7 நானோ மீட்டர் - நீலம்) ஒரு பொருளின் அளவையும் அதன் மூலம் அதன் தன்மையையும் அறிந்தால் தான் அப்பொருளின் மெய்த்தன்மையை உணரலாம். அப்போ தெல்லாம் இந்த செய்தியில் நானோ தொழில்நுட்பம் இருக்கிறது என்று யாரும் கருதவில்லை. ஒரு பொருள் பல தன்மை என்பது நானோ தொழில்நுட்பத்தில் பெறப்பட்ட அறிவாகும்.

இதே அதிகாரத்தில் இன்னொரு குறள்,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு -குறள் 358

பிறப்பிற்கு முதற்காரணமாகிய அவிச்சை கெட வீட்டிற்கு நிமித்த காரணமாக செவ்விய பொருளைக் காண்பதே மெய்யுணர்வு என விளக்குகிறார் பரிமேலழகர். அறியாமையை நீக்குவதால் மெய்யுணர்வு பிறக்கிறது. இதனால் அறிவுடை யோர் வெளித்தோற்றத்தில் மயங்காமல் பொருளின் தன்மையை காண்பார்கள் என்று வள்ளுவன் சொல்வது இந்த மெய்த்தன்மையைதான். புறத்தோற்றத்தில் காணக் கிடைக்காத

ஒரு பொருளுக்குப் பல தன்மையுள்ள நானோ நுட்பமாகும். மேற்கூறிய குறளுக்கு அடுத்ததாக வரும் குறள்

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் -- குறள் 359

நோய் சார்ந்துள்ள டிஎன்ஏக்களை கண்டுணர்ந்து அதன் சார்பு கெடக்காரணமானவற்றை அழித்தால் பின்வரும் சந்ததி களை நோயற்றவர்களாக மாற்ற முடியும் என்று இந்த குறட் பாவிற்குப் பொருள் கொள்ள முடியும். அடுத்து நானோ அறிவியலால் டிஎன்ஏக்களை துண்டித்துச் செப்பனிடும் நுட்பம் நிலையாமை என்னும் அதிகாரத்தில் வருகிறது.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளாது உணர்வார்ப் பெறின் (குறள் 334)

உயிரீரும் என்பது உயிர் செல்களில் உள்ள டிஎன்ஏக்கள் என்று எடுத்துக்கொண்டால் நுண்ணிய வாள் கொண்டு அவற்றை சரி செய்யலாம் என்று வள்ளுவர் சொல்கிறார் என்பது புலப்படும். 'நாள் என' என்பதற்கு கலைஞர் கூறும் தெளிவுரை வாழ்நாள் என்பதாகும். எனவே மாலைக்கண், சர்க்கரை வியாதி போன்ற பிறப்பின் மூலம் ஒருவர் பெற்ற நோய்களைக் களைவது சாத்தியம் என்ற செய்தி இக்குறட்பாவில் உள்ளதைக் காணலாம். ஒவ்வொரு வினாடியும் காலத்தை, வாழ்நாளை கூறிய வாளால் வெட்டப்பட்ட துண்டுகளாக நினைப்பது அறிவியலார்க்கு சாத்தியமான நினைப்பாகும்.

இதுபோலவே நானோ தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டமான முதுமை தடுக்கப்படும் சாத்தியமும் குறள்களில் இடம்பெறுகிறது. அமிர்தத்தை குறித்து தமிழில் எண்ணற்ற கதைகளும் பாடல்களும் உள்ளன. சில சுவையுள்ள பொருளை அமிர்தம் என்று கூறுவோம். மரணத்தை வெல்லும் அமிர்தத்தை பாற்கடலிலிருந்து தேர்ந்தெடுத்ததாக கூறுகின்றன புராணங்கள். வள்ளுவரும் அமிர்தத்தை குறித்துப்பேசுகிறார்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (குறள் 64)

தம்முடைய குழந்தைகளின் பிஞ்சுக்கரத்தால் அளாவப்பட்ட கூழ் அந்த அமிழ்தத்தை விட இனிதாக ஆகிவிடுகிறது. இது நமக்கு தெரிந்த பொருள் இதில் மக்கள் என்பதை சந்ததியினர் ஆகவும் சிறுகை என்பதை நுண்கை என்றும், அமிர்தத்துக்கு சாவா மருந்து என்றும் பொருள் கொண்டால் வரும் காலத்தில் அறிவியலாளர்கள் தமது கைகளால் நானோ தொழில்நுட்பத் தின் வழியாக சாவா மருந்தை கண்டடைவர் என்று பொருள் பொதிந்து இருப்பதை அறியலாம். இன்னும் நானோ தொழில் நுட்பத்தில் ஆதாரமாகிய நுணுகி நோக்குதலைக் குறித்தும் பேசுகிறார்.

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற -- (குறள் 710)

நுண்ணறிவு பெற்ற அமைச்சரை அளக்கும் கோல் அரசனின் கண் அன்றி வேறல்ல. அது போல மனிதனின் பார்க்கப்படும் மைக்ரோ அளவில் 10^{-6} மீட்டர் முதல் 10^{-10} மீட்டர் வரையிலான அளவீடுகளை காண வேண்டி வரும். அரசனின் கண்கள் சாதாரண கண்கள் போலன்றி இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவதாகப் பொருள் கூற முடியும். ஆயினும்

கண்ணைத் தாண்டி உலகம் உள்ளது

என்றும் இக்குறட்பா கூறுவதாகக் கொள்ளலாம். கண்ணால் காண இயலா உலகம் நானோ உலகம் மற்றும் விண்ணுலக கருந்துளைகள் இவற்றைக் காண நுண்ணோக்கிகள் வடிக்க வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுவதாகப் பொருள் கொள்ளலாம். மேலும் மருந்து என்னும் அதிகாரத்தில் வரும் குறள்கள் அனைத்திலும் நானோ தொழில்நுட்பத்தின் கூறுகளை காணலாம்.

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. - குறள் 941

இக்குறட்பாவின் பொருள் உணவும் உழைப்பும் மிகின் நோய் செய்யும். அதுபோல வாதம் பித்தம் சிலேத்துமம் மூன்றும் மிகினும் குறையினும் நோய் செய்யும் என்பதாகும்.

இதை டிஎன்ஏவில் உள்ள புரதத்தை மிகினும் குறையினும் நோய் செய்யும் என்றும் கொள்ளலாம். இது நானோ பயோ தொழில்நுட்பத்தின் ஓர் அங்கமாகும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. குறள் 950

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிலிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை நால்வகை பாகுபாடு உடையது என்று இதற்குப் பொருள் சொல்கிறார் வரதராசனார். இதில் முக்கியமானது மருந்தாகும். டிஎன்ஏ தொடரில் தவறை சரி செய்தலே மருந்தாகும். இது நானோ சொல்லாடலில் மரபணு எனப்படும். மரபணு நாடி, அது தணிக்கும் வாய் நாடி, புதிய மருத்துவங்களை இன்றைய நானோ அறிவியல் தந்துள்ளது.

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு -- (குறள் 425)

உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கி கொள்வது சிறந்த அறிவு. முன்னே மகிழ்ந்து விரிதலும், பின்னே வருந்திக் குவிதலும் இல்லாதது அறிவு. அதாவது உண்மை அறிவு என்பது உலகத் தோடு இயற்கையோடு இயைந்து இருக்க வேண்டும். இதைத்தான் nano ethicsஉம் கூறுகிறது. நானோ ஆய்வில் நாம் சொல்ல வேண்டியதில் ஒரு கோட்பாடு இருக்க வேண்டும். அது உலகத்தோடு ஒத்து இருக்க வேண்டும். உலகை அழிக்கும் ஆய்வுகளை தவிர்க்க வேண்டும் என்ற நெறியை பல்வேறு குறட் பாக்களில் நாம் காணலாம். "இல்நுழைக்கதிரில் நுண்ணிய தெரியின்" என்ற திருவாசகத்தின் கூற்று போல் அறிவியல் என்ற ஒளியுடன் குறட்பாக்களை பார்க்குமிடத்து அவற்றில் பல அறிவியற் கூறுகள் தென்படுகின்றன.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர் -- (குறள் 427)

இதற்குப் பரிமேலழகர் வரக்கடவதை முன் அறிவதே அறிவு என்றும் வருமுன் அறிவதும் அதை எண்ணுவதும் அறிவுடைய வர்களின் சிறப்பு என்றும் பொருள் கூறுகிறார். வள்ளுவர்

மானுடத்துக்கு வழிகாட்டியாக பல்வேறு செய்திகளை அறிவுறுத்துகிறார். அதில் வள்ளுவருக்குப்பின் ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின் வந்த நானோ தொழில்நுட்பமும் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது என்று பூங்கோதை சொன்னாள். குறள் 198ல் வள்ளுவரே சொல்லுவது போல் பெரும் பயன் இல்லாத சொற்கள் குறட்பாவில் இல்லை. தன் தந்தையின் நண்பர் காளைராஜா சொன்னதாக கண்ணன் கூறி வகுப்பை முடித்து வைக்கையில் கூறினான் கலீல் ஜிப்ரானின் கீழ்க்கண்ட வரிகளை. And Let today embrace the past with a remember and a future with longing.

அத்தியாயம் 19

அடுத்த நாளும் பூங்கோதை தனியாக கல்வியியல் மாணவர்களைச் சந்தித்தாள். இன்றைக்கு கருத்தரங்கங்கள் புத்தாக்கப் பயிற்சிகள் அனைத்து துறைகளிலும் நடத்தப் பெறுகின்றன. ஒவ்வொரு துறையிலும் மிகச் சிறந்த ஆசிரியர்களை கொணர்ந்து பயிற்சி பெற வந்த ஆசிரியர்களிடம் அளவளாவ விடுவார். இதன் மூலம் பல ஆய்வுக்களங்களைக் கண்டறியவும், மனிதகுலம் தனது கல்வி அறிவை மேம்படுத்தவும் வாய்ப்புகள் தோன்றும். அத்தகைய கருத்தரங்கங்களில் உரையாற்றுவோர்கள், நிறைய படித்தவர்களாகவும் தமது துறையில் ஆய்வு செய்தவர்களாக வும் இருப்பர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்கம் வளர்த்த தமிழ் அறிஞரிடையே இத்தகைய ஏற்பாடுகள் இருந்துள்ளன. ஆன்மிகத்தில் சத்சங்கம் என்றும் அறிஞர் பெருமக்கள் பகர்வர். திருக்குறளில்

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல் - குறள் 724

எவரொருவர் கற்றார் அவையின்கண் பேசி அவர்களது கவனிப்பை பெறுகிறாரோ அவரையே கல்விநிலையங்களில் தலைமைப் பதவிக்கு நியமிப்பர். பல்கலைக்கழகத் துணை

வேந்தர் போன்ற பதவிக்கும் இது பொருந்தும். தமிழகத்தின் இன்றைய நிலை கவலைக்குரியது.

படிப்பவர்கள் படித்துக் கொண்டு சென்றாலும் ஒரு குறிப்பிட்ட எல்லையில் நின்று, தாம் கற்றவற்றை அசை போட்டு, அவற்றைச் சமுதாய மாற்றத்திற்குப் பயன்படும் சித்தாந்தங்களாக மாற்றி புத்தகங்கள் படைத்து, வரும் சந்ததியினருக்கு வழங்கி வாய்ப்புத் தருதல் வேண்டும். மாற்றத் திற்கான கல்வி தருபவர்கள் கல்வியை கற்றுக் கொண்டே செல்வதை விட புத்தாக்கம் செய்யும் விதத்தில் படைப்புகளை செய்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

கல்வி கற்கும் மாணவர்

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. (குறள் 725)

அவையஞ்சா மாற்றம் பெறுதற்கு எவ்வளவு விவரங்கள் தேவையோ அவற்றைத் தருதல் வேண்டும். இப்போது mind valley courses, land mark forum, advanced learning techniques போன்ற தலைப்புகள் குறள் 725ல் இணைந்தவை என்றால் மிகையாகாது.

ஆயுள் முழுக்க கற்க வேண்டிய விஷயங்கள் உள்ளன. Centre of c"ontinious and life long learning என்று பல புதிய மையங்கள் பல்கலைக்கழகங்களில் துவக்கப்பட்டு நடை பெற்று வருகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் கூறுகிறார் பாருங்கள்.

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். *(குறள் 721)*

அதாவது கற்க விரும்புபவர்களை வகைப்படுத்தி அவர் களின் கவனிக்கும் திறனைப் பொறுத்து உழைக்கும் நல்லாசிரி யர்கள் வேண்டும். அதுவே தொடர்ந்து பலர் விரும்புவதற்கான ஆசிரியர். இத்தகைய ஆசிரியர் கற்றறிந்தார் மட்டுமல்லாமல் தன் போன்ற கற்றறிந்தாரிடம் விளக்கிச் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும்.

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து -குறள் 717

பயின்ற ஆசிரியர் மத்தியில் விளக்கி உரைக்க உரைக்கப் புதிய பொருளும் வளமும் அக்குறட்பாவிற்கு கிடைப்பது போல சத்சங்கம் போன்றவைகள் பற்றி வள்ளுவர் பேசுகிறார். மாணவர்கள் தாம் புத்தகத்தால் கற்றுணர்ந்தவற்றை வெளி யிடும் வாய்ப்பாகவும் அவர்களை முறைப்படுத்துவதற்கும் இது வாய்ப்பாகும். கல்வி கற்று செய்முறைகள் பல செய்து அதோடு நிற்காமல் தாம் உணர்ந்த பொருளை கற்றறிந்த தம்மைப் போன்ற கல்வியாளர்கள் மத்தியில் உரைத்தல் வேண்டும் என்பார் வள்ளுவர். சிம்போசியம் போன்ற அவைகளில் புதிய கண்டுபிடிப்புகள் அரங்கேறுவது போல,

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. (குறள் 718)

எனவே

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள் 2)

என்ற குறட்பா, "தூய அறிவினை நுண்ணறிவு" கூர்மையான அறிஞர்களைப் போற்றாவிட்டால் அதனால் என்ன பயன். கற்றவர்கள் போற்றப்படாத நாட்டில் கல்வி வளராது என்றும் பொருள் கொள ஏதுவாகவும் உள்ளது. எங்கள் ஈழத்திலும் கற்றவர்கள் போற்றப்படல் வேண்டும் என்று பூங்கோதை பேசினாள்.

இது தவிர திருக்குறள் கணிதக்கல்வியின் அவசியத்தை வழியுறுத்துகின்றது.

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)

லார்ட் கெல்வின் சொல்வது போல் 'எண்ணில்' சொல்லத் தெறிவது கல்வி. (True knowledge is to express in numbers -Lord Kelvin) இதனை வள்ளுவர் எண்ணை முதலாவது வைத்து ஏனை எழுத்துக்களைப்பின்னால் வைத்து கணிதக் கல்வியின்

முக்கியத்துவத்தை தெரிவிக்கின்றார். எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என்ற தமிழ் ஆன்றோர்கள் கூறிய கருத்தை வாழும் மனிதர்க்கு என்று வலியுறுத்துகின்றார் வள்ளுவர்.

கல்வியை கற்காதவர்களை முகத்தில் கண்ணிலாதவர்கள் என்றும், கல்வியின் மேன்மை செவியின் சுவையுணர்தல் என்றும் புதிய வியத்தகு செய்திகளைக்கூறி எப்படியாவது படியுங்கள். ''பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்ற புறநானூற்றுச் செய்தியை வலியுறுத்துகின்றார் வள்ளுவர். மற்றபடி 9310 வார்த்தைகளில் 420 வார்த்தைகளில் எண்களின் முக்கியத்துவத்தையும் ஒன்று முதல் எட்டு வரையான எண்களையும் எழுபது கோடி என்ற எண்ணையும் எவ்வெவ் விடங்களில் பயன்படுத்துகின்றார் என்ற விவரங்களை செந்தமிழ்ப்பாவை என்ற பேராசிரியை (கருத்தரங்க சிறப்பு மலர் 1, TAMILICON 2015, பக்கம் 24) பட்டியலிட்டு உள்ளார். அதனைத் தாண்டி எண்ணல் அளவை, எண்ணிலடங்கா அளவை, நீட்டல் அளவு, கனம், நிறையளவு என்பது பற்றி விரிவாகவும் குறிப்பிட்டுள்ளார்.

'இண்பிநிட்டி' என்ற அளக்க இயலா நிலையை 'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' என்ற குறட்பாவின் மூலம் குறிப்பிடுகின்றார். வையத்து இறந்தார் எண்ணிக்கையை எண்ண முடியுமா? திரு கணேசன் என்பவர் ராமானுஜர் போல திருவள்ளுவர் பெயர் 7 எழுத்து. 1330 வெண்பாக்கள் கட்டமைப்பு, 133 அதிகாரங்கள் எவ்வாறு வந்தது. குறட்பாக்களில் எண்களின் கூட்டுத் தொகைக்கும் அதில் உள்ள செய்திக்குமான தொடர்பு என்ன என்று கண்டு விரிவான காணொளிக்காட்சியை யூ டியூபில் முஸ்தபா அறக்கட்டளைச் சொற்பொழிவாக பதிவேற்றி யுள்ளார். அவர் திருக்குறள் ராமானுஜம் போன்று பல செய்திகளை எண்களோடு தொடர்புப் படுத்தி விளக்குகின்றார் என்று கடகடவென்று பேச ஆரம்பிக்க பிரியாணி வாசத்தால் நிறுத்தினார்கள். உணவுக்குப் பின் மீண்டும் பேச ஆரம்பித்தான் கண்ணன். உணவு இடைவேளையில் அதை பூங்கோதையுடன்

பகிர்ந்துகொண்டு வந்திருந்தான். எடுத்தவுடனேயே குறட்பாவுக்குள் ஓடினான்.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப்பெரிது. (குறள் 124)

என்ற குறட்பாவின் நுட்பத்தைக்காண்போம். போல, பொறைய, ஒப்ப, ஓடுப்ப, மான இவைகள் உவமை உருபுகள். உவமைக்கு எடுக்கும் பொருள் தனிச்சிறப்பு கொண்டதாய் இருக்கவேண்டும். எனவே இங்கே மலை என்பது உலகின் உயர்ந்த மலையான இமயமலையைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இமயமலையைவிட நிலையில் திரியாது அடங்கிய சான்றோரின் உயரம் எப்படி மேம்பட்டதாய் இருக்கமுடியும். வள்ளுவர் சொல்கின்றாரே என்று ஆய்ந்தபோது ஒரு உண்மை பிடிபட்டது. இமயமலை உலகிலேயே இளமையான மலை. உறுதியற்ற மலை. இமயமலையின் உயரம் ஆண்டுக்கு சில மில்லி மீட்டர் அதிகரிக்கின்றது. இது யூரோஏசியா பூமி தகடுகளின் நுண்ணிய வேக வேறுபாடுகளால் என்று 'கண்டங்களின் இடப்பெயர்ச்சி' (Continental Drift) என்று நவீன ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். மற்றும் கோடைகாலத்தில் மிக அதிகவுயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரம் சில சமயம் அதிக எடை பனிக்கட்டிகள் உடைவதினால் கே2 என்ற சிகரத்தின் உயரத்தைவிட குறைந்து போகின்றது. காந்தி போன்ற தலைவர்களின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது. ஆனால் இந்த மலையின் உயரம் மாறும் என்ற அறிவியல் உண்மையை எப்படி குறட்பாவில் தந்துள்ளார் வள்ளுவப் பெருமகனார்!! அதுவும் 2000 ஆண்டுகளுக்கு முன். நினைத்து பார்க்கின்றேன் என் நெஞ்சம் இனிக்கின்றது. தற்போது 'குசான் டார்ஜி செர்ப்பா' என்ற மலையேறும் சாதனையாளர் பற்றிப் படித்தேன். டென்சிங் ஹிலாரி ஏறிய எவரெஸ்ட் மலையை பலமுறை பல வழிகளில் ஏறியவர், குசான் செர்ப்பா என்ற பழங்குடி இனத்தவர். ஆயிரம் மனிதர்களை மூடிய பனிமலை இவருக்கு மட்டும் வழிவிட்டிருக்கிறது. மலை சில சமயம் மண்டியிடும். காந்தி அப்படியல்ல. வட்டமேஜையில் சட்டையின்றி கலந்துகொண்டார் என்று முடித்தான்.

அத்தியாயம் 18

யாழினி எனக்கு ஒரு வாய்ப்பு உளவியல் மாணவர்களிடையே கலந்துரையாட வாங்கித் தா கண்ணா என்று கேட்டதன் பேரில், கண்ணன் அந்த வாய்ப்பினை வாங்கித்தந்தான். யாழினி வணக்கத்தோடு தனது பகிர்வினை ஆரம்பித்தாள்.

மதுரைத்தமிழ் நாகனார் திருக்குறள் பாயிரத்தில் எல்லாப் பொருளும் இதன் பாலுல என்று மொழிந்தார். இதனை மெய்ப்பிக்கும் வகையில் 'காதல் மொழிகள் ஐந்து' என்ற கேரி சாப்மேனின் புத்தகத்தில் கண்ட காதல் பற்றிய செய்திகள் திருக்குறளில் உள்ளதா? என்று ஆய்ந்தேன், வியந்தேன்!

காதல் பற்றிய புரிதலை இன்றைய இளைஞர்களுக்கு விதைக்க ஐந்து காதல் மொழிகளை பேச வேண்டும் என்று ஆசிரியர் கேரி சாப்மேனின் அழகாக விவரிக்கிறார்.

1. காதல் முதல் மொழி: காதலர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது உறுதியான நல் வார்த்தைகள் பேசப்பழகுதல். (Affirmative Words.): தமிழன் எப்போதும் ஒரு நல்ல காதலன். யாதும் ஊரே: யாவரும் கேளிர் ... என்ற ரீதியில் வாழ்ந்தவன். தமிழ்க்காதலர் திருவள்ளுவர்காதல் முதல் மொழிஎப்படிச் சொல்கிறார் என்று பார்ப்போம்.

சமீபத்தில் புலவர் நா.முத்துக்குமார் அங்காடித்தெரு என்ற படத்தில் எழுதிய பாடல் வரிகளைப்போன்று அவள் அப்படி ஒன்றும் அழகில்லை... அவளுக்கு யாரும் இணையில்லை... ஆனால் அது ஒரு குறையில்லை... என்று பாடுவார். காதல் உலகில் முதலில் நுழைந்த இளைஞனுக்கு மட்டுமே தனி அழகாய் தெரியும் காதலிபற்றி பாடுவதைப் போல....வியந்து போகவேண்டும்... பின் காதல் வசனம் பேச வேண்டும்..

திருக்குறள் *109* அதிகாரத்தில் நகை அணங்கு உறுத்தல் தலைப்பில் அசத்துகின்ற குறட்பாக்கள் இதோ!

அணங்குகொல்? ஆய்மயில்கொல்லோ? கனங்குழை
மாதர்கொல் மாலும் என்நெஞ்சு -1081

காதலியின் அழகை விவரிக்க நெஞ்சு தடுமாறுகிறதாம். இவ தேவலோகப் பெண்ணா? அழகிய மயிலா? (கிள்ளிப் பார்த்துக் கொள்ளுதல்) மானுட ப் பெண்ணா? அடடா... அடடா... என்ன அழகு! நெஞ்சு தவிக்குதே... மலைக்குதே... இப்படி காதல் வார்த்தைகள் பேச வேண்டும்... என்று கற்றுக் கொடுக்கிறார் வள்ளுவர்.

1106 குறள் இதை தூக்கி சாப்பிடும் பாருங்களேன்!!

கண்ணே! மணியே! அப்படின்னு அங்க அங்க போட்டுக்குங்க...

இவள் தோள் சேர்ந்தலில்தான் நான் உயிரோடிருக்கின்றேன். அதனால் நான் நினைக்கிறேன் இவள் தோள் அமிழ்தத்தால் 3D தொழில்நுட்பத்தில் செய்யப்பட்டுள்ளதோ என்று வியக்கிறேன்!

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் (1106).

குறட்பாக்கள் *1105, 1082, 1115, 1116, 1122...*" எங்கெங்கும் காதல்... என்று பாடத்தூண்டுகிறது.

1122 குறள் கூறுகிறது காதலை உறுதி செய்யும் வார்த்தைகள் பேசவேண்டும்... உங்கள் காதல் உறுதியானது தானே என்று கேட்கும் காதலிக்கு (affirmative words)

உடம்பொடு உயிரிடை என்ன மற்றுஅன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. (1122)

என்று காதலன் பேசவேண்டும்.

உடம்பும் உயிருமாய் நாம் இருப்போம். ஒன்று நீங்கின் மற்றொன்றும் நீங்காது என்றுகாதலை உறுதி செய்யும் வார்த்தைகள்! அதற்கு அவள் என்ன பேசவேண்டும் குறள் *(1127)*

கண்ணுள்ளார் காத லராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து,

மற்றும்

நெஞ்சத்தார காதலராக வெய்துண்டல்
அஞ்சுதம் வேபாக்கு அறிந்து (1128)

நீ இருக்க வேண்டும் என்று என் கண்ணில் நீ இருக்க, கண்மை தீட்ட மாட்டேன். என் நெஞ்சில் நீ இருக்க சூடாக உண்ணமாட்டேன் என்று ஒருவர் மாற்றி ஒருவர் காதல் மொழி பேசுதல் காதல் மொழிகளில் முதன்மையானது என்று வள்ளுவர் கூறுகின்ற மொழிதான். காதல் மொழி ஒன்று. (Affirmative Words)

2. காதல் மொழி இரண்டு- பரிசுகள் வழங்குவது: காதலர்கள் தங்கள் காதல் நிலைத்து நிற்க அடிக்கடி பரிசுப்பொருட்களை பரிமாறி அன்பை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிறார் சாப்மேன். திருவள்ளுவர் அத்தகைய செய்தியை கூறி யுள்ளாரா? என ஆய்ந்தேன். முதல்முறை வாசிக்கின்ற பொழுது காதல் மொழி ஒன்று அளவுக்கு காதல் மொழி இரண்டு அவருக்கு அவசியம் தேவையில்லை என்று கருதியிருக்கிறார் வள்ளுவர் என நினைத்தேன். மீண்டும் தேடினேன். அப்பொழுது அவர் காதல் பரிசாக கூடல் அமையவேண்டும் என்று கூறியதாக உணர்ந்தேன்.

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி -1192

என்ற குறளில் காதலில் வீழ்ந்தார்க்கு சரியான தருணத்தில் பெய்யும் மழை உயிர்களைக் காப்பது போல் சரியான தருணத்தில் கூடுதலே காதலின் பரிசு என்பார் வள்ளுவர். 116,117,118,119 அதிகாரங்களில் வருவது போல் பிரிவு ஆற்றாமையில் தவிக்கும் காதலியின் பசலை நோய் சில நேரம் உயிரையும் காவு கொள்ளும் வகையில் அமையும் என்று வலியுறுத்தி சரியான தருணத்து மழை போல் வந்து கூடல் காதலின் மிகச்சிறந்த பரிசு என்பார் வள்ளுவர்.

1164ம் குறளில்,

“காமக்கடல் மன்னும் உண்டே அது நீந்தும்
ஏமப்புணை மன்னும் இல்.”

இக்குறள் மூலம் கடல்போல் ஆசை கொண்ட காதலர்க்கு அக்கடலை கடக்கும் களமாக கூடல் பரிசு அமையவேண்டும் என்று குறிப்பிடுகிறார். இதில் மிகுந்த சலனத்துடன், அலைகளுடன் தன் காதலர்க்காக காத்திருக்கும் காதலியை உடன் காக்க தன் வருகையை தெரிவிக்க பரிசு, கடிதம், கவிதை, கட்டுரை என்ற சாதனங் களை களம் என்ற சொல் மூலம் குறிப்பிடுகிறார் என்றும் கொள்ளல் தவறன்று.

இன்பத்துப்பால் பசலை நோயின் கொடுமை உணர்த்து கிறது. அறத்துப்பாலில் அல்லது பொருட்பாலில் மேலும் சில குறட்பாக்கள் மனைவிக்கு பரிசுகள் தருவது பற்றியோ அல்லது என்னென்ன பரிசுகள் தரலாம் என்ற குறிப்புகள் கொண்ட குறட்பாக்கள் அமைந்துள்ளனவா என்று தேடினேன்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள். -குறள் 751

என்று அனைத்து பொருள்களுமே வாழ்வை பொருளாக்கும். காதல் இல்லா வாழ்க்கை பொருளில் வாழ்க்கை. காதல் வாழ்க்கைக்கு பொருள்ஈட்டி சரியான தருணத்தில் பரிசுப் பொருட்கள் கொடுத்து காதலியின் உயிரினை உறுதிப்படுத்த வேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறார் என்றும் கொள்ள லாம். அதனால் தான் வள்ளுவர் உத்தரவு போடுகிறார் ‘செய்க பொருளை’. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற நிலை தமிழனின் பெருமையை பறைசாற்றுவது. அவனிடம் இருந்த உயர் ஞானம், கடல் போன்ற செல்வம் இவற்றினால்தான். உலக மாந்தர் கேளிராக கொள்வதற்கு பொருள் அவசியம். எனவே ‘செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும் எஃ க தனில் கூரியது இல்’ என்று ஆணை இடுகிறார்.

அதோடு மட்டும் அல்ல. நல்ல பொருளை திறலாகப் பெற்றவர்க்கு அறமும் இன்பமும் ஒருங்கே கிடைக்கும் என்ற பொருள் தரும்.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (குறள் 760)

ஆனாலும் எனக்கு பரிசு பற்றி நேரடியாக குறள் சொல்ல வில்லை என்றே பட்டது.

திருவள்ளுவ முனிவர் சில விசயங்களை குறிப்பு கொண்டு உணர்த்துவார் என்பதால் குறிப்பறிவுறுத்தல் (127) என்ற அதிகாரத்தில் எதாவது குறிப்பு தெறிகிறதா என்று பார்த்தேன். அயர்ந்தேன்...

குறள் 1271 நீ மறைக்க விரும்பினாலும் உன்னை மீறி என்னை உண்கின்ற உன் மையிட்ட கண்கள் எனக்கு என்ன சொல்கிறது என்று அறிவேன்...

கரப்பினும் கையிகந் தொல்லா நின் உண்கண்
உரைக்க லுறுவது ஒன்றுண்டு (குறள் 1271)

எனவே கண்ணுக்கு பரிசு தரவேண்டும். கண் கவர் அணிகள், கண்மைகள், மையிடும் சாதனங்கள், கண்ணாடிகள் என்று பரிசு பட்டியல் நீள்கின்றது.

கண் நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண் நிறைந்த நீர்மை பெரிது. (1272)

இக்குறள் தோளுக்கு அணிகலன், ஆடைகளை குறிப்பிடுவ தாக அமைகிறது.

மணியில் திகழ்தருநூல் போல் மடந்தை
அணியில் திகழ்வது ஒன்றுண்டு. (1273)

மணிக்கோவையில், மணிகளுக்கு இடையே நூலுள்ளது போல் இவளது அழகே ஒரு குறிப்பினை சொல்கிறதே! திருவள்ளுவர் தாத்தா என்ன சொல்லறாருன்னு தெரியுதா. பர்ஸுக்கு தெரியலையே! நகைக்கடை விளம்பரம் போல உடம்பு பூரா மறையிரமாதிரிநகைகளை வாங்காமல் மணி களால் ஆன லேட்டஸ்ட் டிசைனா பார்த்து சின்னதா ஒன்னு போதும் என்கிறார்.

மனம் கோணாமல் இருக்க மணம் கொண்ட செண்ட் வாங்கி அனுப்பலாம் என்கிறார். (1274)

1275ல் அடர்ந்த வளையல்கள் பற்றி பேசுகின்றார். அதோடு மருந்து பொருள் பற்றியும் சொல்கிறார். இவ்வளவு பரிசுப் பொருட்கள் சரிக்கட்ட மட்டுமே. இதோடு கூடல் பரிசும் தரவேண்டும் (1276). அப்பொழுது அவள் ஊடுவாள். மீண்டும் என்னைவிட்டு நீங்குவேன் என்பதைத்தானே இக்கூடல் குறிக்கின்றது. அப்போதும் கூட நான் விரைவில் வந்து விடுவேன் என்ற உறுதியையும் பரிசோடு கூறு என்று தாத்தா தலையணை மந்திரம் சொல்லித்தருகிறார். ஆண்களுக்கான அற்புத இன்பக்கல்வி 1276ம் குறள் என்றால் மிகையாகாது.

காதல் மொழி மூன்று:

சேவை: இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொருவர்க்கும் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே பெரிய விசய மாகிறது. ஒரு குடும்பத்தின் தேவை மிக அதிகமாகிப்போனது. அவரவர் தேவைகளை அவரவர்கள் செய்துகொள்வது அவசியம். ஆயினும் மனிதர்களின் மனங்களைக் கொள்ளை கொள்ள சிவனும் பெருமாளும் சேவகர்களாய் வந்ததைப் போன்று நீடித்த காதலுக்கு சேவை பரிமாறுதல் அவசியம். என் நண்பன் எனக்கு வேண்டுவதும் அவனுக்காக நான் பிரார்த்திப்பதும் நல்ல நட்பிற்கு உரமாவது போல காதலனுக்கு வேண்டிய உதவிகளை நினைந்து செய்வதும் காதலிக்கு வேண்டிய உதவிகளை காதலன் செய்வதும் மிக அவசியம் என்கிறார் சாப்மேன். வள்ளுவர் சொல்லுவார்,

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை? -1195

இக்கேள்வி வராவண்ணம், நம்மால் காதலிக்கப் பட்டவர் மாறாக நம்மீது காதல் கொள்ளாவிட்டால் அவர் நமக்கு என்ன இன்பத்தை செய்வார் என்ற நிலை வாராது ஒருவருக்கு ஒருவர் சேவை செய்தல் அவசியம்.

அப்படி காதலைப் பரிமாறிக்கொண்டவர் காதல் எப்படி அமையும்

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்கும்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து. -1218

நனவினால் நல்காரை நோவர் கனவினால்
காதல் காணா தவர். -1219

சேவை பரிமாறல், அவரவர் குடும்பங்களே பெரிது என்று நினையாமல் இருவர் உடலும் உள்ளமும் குடும்பங்களும் உறவுகளும் ஒன்றென எண்ணி சேவை பரிமாறல் காதல் நலம் காக்கும் ரகசிய மொழிகளில் ஒன்று.

1192 குறள் போன்று தக்க தருணத்தில் பூமியின் தேவை அறிந்து பெய்து சேவை செய்யும் மழைபோல் ஒருவர்க்கு ஒருவர் சேவைசெய்தல் காதலை நிலை நிறுத்தும் வழிகளில் முக்கியமானது என்று காதோடு கூறுவார் வள்ளுவர். குறள் 55ல் வாழ்க்கைத் துணை நலத்தில்

தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்று பெய்யெனப் பெய்யும் மழை போன்று சேவை செய்யும் மனைவி கொண்டவனுக்குப் பேரின்பம் என்பார். அதே நேரத்தில் குறள் *1192*ல் கணவனும் பெய்யெனப் பெய்யும் மழை போல மனைவிக்கு சேவை செய்ய வேண்டும் என்பார்.

4. காதல் மொழி நான்கு (Quality Time) தரமான நேரம்: one's undivided attention in order to strengthen a relationship:

சாப்மேன் சொல்கிறார் நீங்கள் காதலை நிலை நிறுத்த வேண்டும் என்று எண்ணினால் உங்களது நேரத்தில் காதலுக்காக ஒரு பகுதியை ஒதுக்குதல் வேண்டும். பலர் இந்த காதல் மொழியை பேசுவதில்லை. தங்களது அலுவலக சாம்ராஜ்யத்தில், தொழில் ராஜ்யத்தில் தாங்களே அரசர் என்று நினைத்து *24/7* அலுவலகப் பணிக்கே ஒதுக்குதல் அறிவுடைமை அல்ல. குடும்பம், காதல், குழந்தைகள் என்று பிரித்து தரமான நேரத்தை அலுவலகத்துக்கு இணையாக குடும்பத்திற்கும்

அதில் ஒரு பகுதியையும் காதலுக்கு ஒதுக்குதல் அவசியம் என்கிறார் சாப்மேன்.

குறள் 1199இல் வள்ளுவர் கூறும் கருத்தை உற்றுநோக்கு வோம்.

நசைஇயியார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு (குறள் 1199)

காதலியைப் பொறுத்தவரை பொருள் ஈட்டும் நிமித்தம் தம்மை விட்டுபிரிந்த தலைவன் தினம் தினம் வந்து காதல் செய்ய இயலாது என்பது தெரிந்திருந்தாலும் அவனுடைய சொல்லே இசையாகக்கொள்வாள். எனவே தங்களது நேரத்தில் தரமான தருணத்தில் தங்களின் இதமான சொற்கள் தர வேண்டியதன் அவசியத்தை 2000 வருடத்திற்கு முன்னே தொலைபேசி, செல்லிடைபேசி இல்லாத காலத்தே வள்ளுவர் வலியுறுத்துகிறார். கடிதங்கள், விருந்தினர்கள், செவிலித் தாய்கள் என்று எத்தனையோ வழிகள் அக்காலத்திலும் இருந்திருக்க வேண்டும். பொன்னவன், போனவன் போனானடி என்று ஏங்காமல், பசலை நோய் படர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது தலைவனின் (தற்போது தலைவியின்) தலையாய கடனாகும். சரியான தருணத்தில் தங்களது தொடர்பு, உறவு மேம்படுத்த வழிகாண்பது அவசியம் என்கிறார் வள்ளுவர்,

வீழ்வாரின் இன்சொல் பெறா அது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல் -1198

என்ற குறட்பா மூலம் நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய், நீ இன்றி நானில்லை, நம் காதலே தலைசிறந்தது என்ற சொற்களை காதலன் சொல்ல அதைக் கேட்காமல் உயிர் வாழும் மகளிரைப் போல வன்மை நெஞ்சுடையார் வேறு எவருமில்லை என்கிறார் வள்ளுவர். எனவே குடும்பத்திற்கும் காதலுக்கும் தரமான நேரமும் அந்நேரத்தை தரமாக ஆக்கும் இன்சொலும் அவசியம் என்று ரகசியம் பேசுகின்றார் வள்ளுவர்.

இப்போதே நாம் நமது காதல் மொழி எது? என்று கண்டறியும் முன் இறுதியாகக் காதல் மொழி ஐந்தினையும் காண்போம்.

5. காதல் மொழி ஐந்து: ஸ்பரிசம் (டச்) தொடுதல்

அன்போடு உடல் தொடுதல், அணைத்தல் (Hug) மிகவும் முக்கியமான காதல் மொழி. அதை அடிக்கடி பேசவேண்டும் என்கிறார் சாப்மேன். உறவுகள் மேம்பட இத்தகைய முறையான தொடுதல் அவசியம். நல்ல தொடுதல் (good touch) மூலம் நமது காதலை தெரியப்படுத்துதல் அவசியம். இதனை வள்ளுவர் வலியுறுத்துவதைப் போல யாரும் சொல்லியதாக நான் கருதவில்லை.

பாரதி கூட காற்றுவெளியிடை கண்ணம்மா நம் காதலை எண்ணி கழிக்கின்றேன் என்றது இக்குறளின் மூலம்தான்.

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படா அ முயக்கு. *(1108)*

நுண்ணிய காற்றும் இடைநுழையாத வண்ணம் தழுவுவது காதலர்க்கு இன்பம் என்கின்றார் இந்த முனிவர்.

இன்னொரு சமயம்

மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப் படுவார் -*(1289)* என்கிறார்.

அப்படி அணைக்கையில் காமம் மலரினும் மெல்லியது என்று உணர்தலும் வேண்டும் என்கிறார். எனவே காதலின் நுட்பங்களை வள்ளுவர் உணர்ந்து தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லித்தருகிறார் என்று கொள்ளலாம்.

காதல் வெற்றிக்கு மேற்சொன்ன ஐந்து காதல் மொழிகளைப் பேசப் பழகுதல் இன்றியமையாதது என்ற சாப்மனின் கருத்துக்கள் வள்ளுவர் குறட்பாக்களை படித்திருப்பாரோ என்றே நினைக்க தோன்றுகிறது. இந்த நூல் மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்றிருக்கின்றது. உங்கள் காதல் மொழி என்ன? என்ற கேள்வியுடனும் ஒன்றுக்கும் மேற்பட்ட அல்லது

அணைத்து காதல் மொழிகளையும் பேசப்பழகுதல் காதலை வலுப்படுத்தி வாழ்வை இனிமையாக்கும் வழி என்பது சாப்மேன் மற்றும் வள்ளுவர் கூறுவதாகக் கொள்வோம்.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கா தண் என்னும்தீ
*யாண்டு பெற்றாள் இவள்? **1104***

என்று வினவும் குறள் காதல்விஞ்ஞானிகள் வியக்கும் குறள்.

அங்கங்கே மானே! தேனே! என்று போட்டுக்கொள்ளுங்கள். இவ என்ன ஆளுயா ? அடடா... அடடா... இவகிட்ட உள்ள நெருப்பு இருக்கிறதே இது ரொம்ப வித்தியாசமான நெருப்பு (Infra Red rays) அருகில் சென்றால் குளிர்கிறது! தள்ளி, விலகிச் சென்றால் சுடுகிறது! இது எங்கிருந்து வந்தது! என்று ஆராயும் காதலுடன் காதல் மொழிகள் ஐந்திணையும் பயன்படுத்தி வாழ்க்கையை அழகாய் வாழ்வோம்.

வள்ளுவன் போன்ற ஆசிரியரை, தவமுனிவரை, தாத்தாவைப் பெற்ற நமது வாழ்க்கை உலக உயிர்களுக்கு இனிமையான வாழ்வை போதிக்கட்டும்! வாழ்க வள்ளுவம்! வளர்க அவர் காதல் மொழி!

•

அத்தியாயம் 19

சங்கர் திடீரென்று அலுவலத்தில் தன்னை ஹார்வர்டுக்குப் பக்கத்தில் உள்ள ஊருக்கு அனுப்பியுள்ளார்கள். நாளை வருகிறேன் என்று குறுஞ்செய்தி கொடுத்திருந்தான். கண்ணன் உடனே அவனுக்கும் ஒரு சிறப்பு வகுப்பு இயற்பியல் மற்றும் கணித மாணவர்களுக்கு ஏற்பாடு செய்தான். கண்ணன் அறிமுகப்படுத்தியவுடன் சங்கர் பேச ஆரம்பித்தான். மாணவர்களே வணக்கம். இப்பொழுது நான் சொல்லப்போகிற விஷயத்தை கவனமாகக் கேளுங்கள்.

ஜீசஸ் சிலுவையின் உயரமும் அதன் குறுக்குச்சட்டமும் **1.614** என்ற விகிதத்தில் அமைந்ததனால்தான் அவரது புகழ்

இன்றும் நிலைத்து நிற்பதாய் தங்க விகித ஆய்வாளர்கள் நம்புகின்றனர். திருக்குறளை வெண்பா முறையில் அமைந்திருப்பதால் இயல்பாகவே தங்க விகிதத்தில் அமைந்துள்ளது. முதல் வரியில் நான்கு சீர் இரண்டாவது அடியில் இரண்டரை சீர். இவற்றின் விகிதம் 1.6 குறட்பாக்களின் ஓசை முறையில் பார்த்தால் பெரும்பாலும் முதல் அடியில் 8 ஓசைகள், இரண்டாவது அடியில் 5 ஓசைகள் அமைந்துள்ளன. 8/5=1.6.

அதோடு திருக்குறளில் கூறப்படும் நீர் தாவரங்கள், விலங்குகள் அனைத்துமே தங்க விகிதத்துடன் தொடர்பு உடையன. அனிச்சம், அன்னம், யானை, மான், தாமரை என்று எங்கும் தங்க விகிதம்தான்.

அகரம் என்ற சொல் 'அ' என்ற வரிவடிவத்தின் ஒலியைக் குறிக்கின்றது. திருக்குறள் 'அ'வில் துவங்கி 'ன்'ல் நிறைவுறுகிறது. 'அ'வின் வரி வடிவம் சுழியில் ஆரம்பித்து நத்தையை போல் உறவுகளையும். பால் வெளியின் அமைப்பையும் ஒத்துள்ளது. ஊடுதலும் கூடுதலும் காமத்திற்கு இன்பம் ஆயினும் கூடுதலில் தான் இன்பமும் உயிர்களும் உருவாகி உலகைக் காக்கின்றது. அகரம் 'அ'வைக் குறிக்கும். அகாரம் எனத் திரியும்போது ஓம் எனும் ஓசையின் முதல் மந்திரமாய் விரிகிறது.

மேல்நாட்டு அறிஞர்கள் திருக்குறளைச் சிறந்த அறிவுப் பெட்டகமாக கருதுகின்றனர். ஐன்ஸ்டீன், பெர்னாட்ஷா போன்றோர் திருக்குறளைப் பற்றி பேசியுள்ளனர். பிரான்ஸ் நாட்டில் திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களை தொடர்வண்டிகளில் எழுதிவைத்துள்ளனர். பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. காலம் கடந்து நிற்கின்றது. இதற்குக் காரணம் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சமுதாயத்திலிருந்து இயற்கையாய் தோன்றிய ஒரு நூலாகவும் புனைவு இல்லா உண்மைகளைக் கொண்டதாகவும் கண்டறியப் பட்டுள்ளது. திருக்குறளில் யானை, ஆமை போன்ற தவத்தின் குறியீடுகள், புலி முயல் போன்ற வீரம் வேகம் போன்றவற்றின் குறியீடுகளும் மற்றும் தாமரை அனிச்சம் போன்ற அழகு அறிவின் குறியீடுகளும் பயன்படுத்தப்

பட்டுள்ளன. இவைகள் திருக்குறளில் தங்கவிகித அமைப்புக்கள் இருப்ப தற்கான குறியீடுகளாய் கருத இடம் உள்ளது. வெளிநாட்டு ஆய்வுமுறைகளைக்கையாண்டு திருக் குறளில் மேலும் அரிய செய்திகள் மறைந்துள்ளதை வெளிக் கொணரலாம் என்றும் இனி வரும்காலத்திற்கான கல்வியும் கல்வித்திட்டமும் அத்தகைய நூல்களில் அமையப்பெறும் என்று கருதியே அவைகளை மேல்நாட்டு அறிஞர்கள் பத்திரப் படுத்துகின்றனர்.

ஒரே இடைவெளியில் பல ஒரே அளவிலான குச்சிகளை நேர்கோட்டில் அடுக்கி வைத்து ஒரு உயரத்திலிருந்து ஒரு குச்சியை தளரவிட்டு வரிசையில் குறுக்காய் வெட்டும் இடத்தை ஆய்வோமானால் அதன் பெரு மதிப்பு பகுதியை மொத்தநீளத்தில் வகுத்தால் கிடைப்பது தங்கவிகிதம் *1.618.* இயற்கையோடு இயைந்து விளங்கும் காலம் கடந்து நிற்கும் உயிரினங்களில் தங்கவிகிதம் காணப்பெறுகின்றது. திருக் குறளில் இயல்கள் அமைப்பிலும் சொற்கள் எண்ணிக்கையிலும், ஓசை அசை சொற்கள் பயன் பாட்டிலும் சில குறட்பாக்களில் எழுத்துக்கள் எண்ணிக்கை யிலும் தங்க விகிதம் அமைந்துள்ளது. குறட்பாக்களில் அமைப்பினை தங்கவிகிதத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில் பல அரிய உண்மைகள் வெளிப்படும்.

பிபோனச்சி அடுக்கு (Fibonacci Series) என்பது தங்க விகிதத்துடன் தொடர்பு கொண்டது. இவ்வடுக்கு *1,1,2,3,5,8, 13,21,34,55...* என்று அடுக்கப்பட்டிருக்கும் எண்களைக் கொண்டது. அடுத்து அடுத்து அமையும் எங்களை ஆய்ந்தோ மானால் முன்றைய இரண்டு எண்களின் கூட்டுத்தொகையாய் அமையும். இந்த இரண்டு எண்களில் பெரிய எண்ணை சிறிய எண் கொண்டு வகுத்தால் அது சிறிது சிறிதாய் நகர்ந்து தங்க விகிதத்தை நெருங்கி அதனைச் சுற்றி அமையும்... *1/1=1; 2/1=2; 3/2=1.5; 5/3=1.66666; 8/5=1.6; 13/8=1.625; 21/13=1.6153846153846; 34/21=1.619; 66/34=1.617...* என்று தங்கவிகிதத்தை நெருங்கி அமையும். திருக்குறளின்

எழுத்துக்கள் பற்றிய ஆய்வு அமையுமானால் முதல் அடியில் 21 எழுத்துக்களும் இரண்டாவது அடியில் 13 எழுத்துக்களும் அமையுமானால் அது தங்க விகிதத்தை நெருங்கும். இப்படி நாம் ஒரு ஆய்வினை மேற்கொள்ளும்போது பல புதிய மறைசெய்திகள் தென்படுகின்றன.

உதாரணமாக குறள் 1 மற்றும் 50ல் முதல் வரி 15. இரண்டாம் வரி 11. 15+11/15 = 26/5 = 1.625. இது தங்க விகிதத்தை நெருங்குகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்ற குறட்பாவில் முதல் அடியில் 20 எழுத்துக்களும் இரண்டாவது அடியில் 13 எழுத்துக்களும் அமைந்து தங்க விகிதத்தை வைத்துள்ளது என்று கருத வாய்ப்பளிக்கிறது (20+13/20 = 33/20 = 1.65). இதில் உள்ள இடைவெளிகளை எழுத்தாகக் கருதினால் முதலடியில் 24 எழுத்துக்களும் இரண்டாமடியில் 15 எழுத்துக்களும் அமைகின்றன. மேல் நாட்டில் செகப்பியரின் பாடல்களில் தங்கவிகிதம் அமைந்துள்ளதா என்ற ஆய்வில் சொற்களின் இடைவெளியை ஒரு எழுத்தாகக் கணக்கிட்டுள்ளனர். அப்படிப் பார்க்கையில் இவ்வெழுத்துக்களின் விகிதம் 39/24 =1.625 என்றாகிறது.

தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசார்ந்த
சொற்காத்து சோர்விலாள் பெண்

என்ற குறட்பாவும் இவ்வாறே அமைந்துள்ளது வியந்து போற்றத்தக்கது.

இதேபோன்று வெள்ளிவிகிதம் 2.414 என்ற எண்ணும் குறிப்பிடத்தக்கது.

இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக்
காய் கவர்ந் தற்று

இக்குறட்பாவில் இடைவெளியை எழுத்தாகக்கருதினால் 24 எழுத்துக்கள் முதல் அடியிலும் இரண்டாவது அடியில் 11 எழுத்துக்களும் அமைந்து 24/11=2.18 என அமைகிறது. இது

வெள்ளிவிகிதம் 2.414 நோக்கி நகர்கின்றது. 27/11 = 2.47 என்று அமையும். எனவே குறட்பாவின் ஒலி அமைப்பு என்ற ஏதோ ஒரு மறை அமைப்பு இருப்பதாகவும் அது சீர்களின் ஒலிகளில் அமைந்து ஒவ்வொரு குறட்பாவிலும் தங்க அல்லது வெள்ளி விகித அமைப்புகளின்படி சீர் பிரித்தல் அக்காலத்தில் இருந்திருக்கலாம் எனக்கருத இடமிருக்கிறது. அதைப்பற்றி இலக்கணம் அறிந்த சான்றோர் உதவியுடன் ஆய்ந்து திருக்குறள் ஆய்வில் புதிய செய்திகளையும் மூலப்பிரதியின் முக்கியத்துவத்தையும் உலகிற்கு எடுத்துச்செல்லலாம். இந்தக் குறட்பாவில் இடைவெளியைச் சேர்க்காவிட்டால் 21 மற்றும் 9 எழுத்துக்கள் வரும். 30/21 = 1.42 என தங்க விகிதத்தில் இருந்து மிக விலகுகிறது.

தங்கவிகிதமும் இயல் அமைப்பும்

தங்க விகிதம் திருக்குறளில் இயல்களிலும் இயல் அதிகாரங் களில் உள்ளது. இது ஆராயப்படுகையில் துறவறவியல் 13 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அதிகாரங்களின் தலைப்பு களை உற்றுநோக்கி,

பிபோனச்சி அடுக்குப்படி (Fibonacci Series) 1,1,2,3,5,8,13 தலைப்புக்களை அடுக்குவோம்.

துறவறத்திற்கு மிகவும் இன்றியமையாதது இவ்வடுக்கில் அமைகின்றது உள்ளங்கை நெல்லிக்கனி

1. அருளுடைமை (அவனருளாலே அவன் தாளடைந்து)

1. அருளுடைமை

2. புலால் மறுத்தல்

3. தவம்

5. கள்ளாமை

8. இன்னா செய்யாமை

13. அவா அறுத்தல் (பற்று விடல்).

இதே போன்று இல்லறவியலில்

1. இல்வாழ்க்கை

1. இல்வாழ்க்கை

2. வாழ்க்கைத்துணைநலம்

3. மக்கட்பேறு

5. விருந்தோம்பல்

8. நடுவுநிலைமை

13. அடக்கமுடைமை

இதே போன்று அதிகாரங்களிலும் ஒரு அமைப்பு ஆராய்வு அவசியமே.

1. கடவுள் வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

2. வான்சிறப்பு

3. நீத்தார் பெருமை

5. இல்வாழ்க்கை

8. அன்புடைமை

13. அடக்கமுடைமை

21. தீவினையச்சம்

34. நிலையாமை

55. செங்கோன்மை

89. உட்பகை

ஊழியல்

கடவுள் வாழ்த்து போன்று ஒரே அதிகாரம் கொண்டது ஊழியல்.

இப்படிப் பல ஆய்வுக்களங்கள் திருக்குறளில் தென்படு கின்றன.

திருமூலரின்

"யார் அறிவார் என் அண்ணல் பெருமையை...
வேரறியா விழுப்பொருள்தன்னைத்
தான் பற்றப்பற்ற தலைப்படும் தானே."

என்ற பாடல் திருக்குறளைப்பற்றித்தானோ என்று வியக்க வைக்கின்றது இத்தேடல்.

"பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற."

என்ற குறட்பா வழி நாம் திருக்குறளை ஆய்வு செய்து அதன் பயனை வாழ்வில் கடைப்பிடித்து அழகிய அறிவார்ந்த தமிழ் இளைஞர்களை உருவாக்குவோம். பல ஆய்வுக்களங்கள் திருக்குறளில் இன்னும் தென்படுகின்றன என்று சங்கர் முடித்தான். மாணவர்கள் எழுந்து மரியாதை செய்தனர். கண்ணன் வந்து தழுவினான்.

அத்தியாயம் 20

ஏழு வருடங்களுக்குப்பின்,

அந்த கிராமத்து பள்ளியில் 5 வயது குழந்தை முழங்கிக் கொண்டு இருக்கின்றாள். தேனினும் இனிய தமிழோசை. கூடவே யாழினி நிழற்படம் எடுத்துக்கொண்டிருந்தாள். தமிழ் நாட்டு ஆசிரியர்கள் மாணவர்கள் கைதட்டல் விண்ணைப் பிளந்தது.

இயேசு பெருமான் ஏத்தும் முகமதுவும்
பேசும் உலகப் பெருநெறியின் தத்துவமும்
போதி முனிவன் புகன்றவையும் மாவீரர்
ஓதி உணர்த்தும் உயர்ந்த அருள்நெறியும்
நெஞ்சைக் கனிவிக்கும் நேர்மை மிகு ஆத்திகமும்

நெஞ்சத்துணிவுரைக்கும் நேரில்லா நாத்திகமும்,
நின்று உலகம் நோக்கும் நிலைத்த சமத்துவமும்,
எல்லாப் பொருளும் இதன்பால் உள

அது மட்டுமல்ல எல்லா அறிவியலும் மெய்ப்பாடும் திருக்குறள் பால் உள.

எல்லோரும் சொல்லுங்க அகரம் என்றால் அ. அகரம் என்றால் 'ஆனா'. அன்றும் இன்றும் என்றும் 'நிலை ஒலி' அகரம். நிலை ஒலி அகரம். அகரம்னா 'ஆனா'.

விண்ணை பிளந்த அந்த சத்தத்தில் நாகலிங்க அய்யாவின் கண்களின் ஓரத்தில் ஆனந்த கண்ணீரை கண்ட நண்பன் சந்துரு ராமுவுக்கு கண்ணால் காண்பிக்க ராமு காதைக்கடித்தான் "சாதிச்சிட்டடா சந்துரு"! "சாதிச்சது உன் மகன் கண்ணன். இக்கால இளைஞர்கள்" என்றான் சந்துரு. சாதிச்சது 'அகரம்' என்றான் சந்துரு.

இன்னும் நிறைய ஊரு போகணும். நான் தான் காரை ஓட்டணும். இன்னும் அரைமணி நேரத்திலே குட்டி யாழினி பேசணும். ராமு இந்த விடீயோக்களை கண்ணாவிடம் அனுப்பி மின் வலையில் ஏற்றச்சொல் என்று சொல்லியபடி சந்துரு ஓடிச்சென்று காரை ஸ்டார்ட் செய்ய யாழினி தன் அன்பு மகள் தண்வி யாழினியை கூட்டத்திற்கிடையே சிரமப்பட்டு அழைத்து ஏறிக்கொண்டாள். காரின் ஏசி போல் அனைவர் மனமும் குளிர்ந்தது.

தண்வி என்றாலே என்னுடைய குளிர்ந்த மலர்தானே. வருங்கால தமிழ் இவர்களோடு தானே வளரும்.

நிறைவுற்றது.

பார்வை நூல்கள் (REFERENCES)

1. திருக்குறள் பன்னாட்டு க்கருதராங்க ஆய்வுக்கோவை *2016* (தொகுதி *1,2,3*), பதிப்பாசிரியர்கள்: சொ. சுப்பையா, மு. பாண்டி, கரு. முருகன், பாவை பப்பிளிகேஷன்ஸ், சென்னை *(2016).* ISBN: 817735846-4

2. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-தொகுதி *1,2,3,4,* பதிப்பாசிரியர், தவத்திரு பொன்னம்பல அடிகளார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை *(2005).*

3. வான்புகழ் தொகுதி *1,2* பதிப்பாசிரியர்கள்ம.ச. அறிவுடை நம்பி, கே. ரவி *(2011)* ISBN: 978-81-9091660-8

4. அறம், உண்மை மனிதர்களின் கதைகள், ஜெயமோகன், வம்சி, திருவண்ணாமலை *(2014)* ISBN: 978-93-80545-42-4.

5. The 5 love languages: The Secret to Love That Lasts, Gary Chapman ISBN: 13: 978-0802412706, Northfield Publishing; Reprint edition (January 1, 2015).

6. Golden Ratio: The story of Phi: The Most Astonishing Number Mario Livio, ISBN: 13: 978-0767908153 Broadway Publisher (2002)

7. 'ங' போல் வளை, இரெ. சந்திரமோகன், வசந்தா அச்சகம், தேவகோட்டை *(2014)*

8. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கருத்தரங்கக் கட்டுரைகள்,கோவை, தொகுதி *1,2,3,* தொகுப்பாசிரியர்: ம. ராஜேந்திரன் *(2010)*

9. கவியரசர் முடியரசன் கவிதைகள், பதிப்பாசிரியர்: பாரி முடியரசன், மணிவாசகர் பதிப்பகம் சென்னை.

10. வீறுகவி முடியசரன் படைப்புலகம், தேசீயக் கருத்தரங்கம் - *2019*, பதிப்பாசிரியர்கள் ம. கார்மேகம், செ. செந்தமிழ்ப்பாவை, ம. ஸ்டீபன் மைக்கேல் ராஜ், மணியரசி பதிப்பகம், தேவகோட்டை.

11. 'Nanotechnology a Gentle Introduction to the Big Idea', Mark Ratner & Daniel Ratner, Peason Education, New Delhi, ISBN: 978-81-7158-7432.

குறிப்பு



ஆசிரியர் பற்றி

"திருக்குறளில் நானோ தொழில் நுட்பம்" போன்ற தலைப்புக்களில் உரையாற்றியவர். காரைக்குடி வீறு.கவி. முடியரசனார் அவைகளத்தின் முன்னாள் தலைவர். சைவ சித்தாந்த ரெத்தினம் பட்டத்தினை திருவாடுதுறை ஆதீன தேவகோட்டை பயிற்சிமையத்தில் பெற்றவர்.

மேனாள் முதல்வர். ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி மற்றும் தற்போதைய ஆராய்ச்சி ஆலோசகர், வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

இவரது தந்தை : ரெத்தினம், தாயார் : பார்வதி ஆசிரியை, மனைவி : மீனாள், மகள்கள் : திருமதி. ரேவதி பிரவீன், திருமதி. நர்மதா நரேன் கேசவ், பேத்தி : தன்வி பிரவீன்.

ISBN No. : 978-81-944044-2-2

9 788194 404422

இனிய நந்தவனம் பதிப்பகம்
திருச்சிராப்பள்ளி

விலை ரூ.120/-